

கல்கி
ALKI
4.5.1959
30


ஆரோக்கியத்தை விரும்புவோர்
எப்பொழுதும் லைப்பாய்
உபயோகித்தே நீராடுவார்
விளையாடும்போதும் சரி, வேலை
செய்யும்போதும் சரி, அழுக்கி
லிருந்து நாம் தப்ப முடியாது.
நம் ஆரோக்கியத்திற்கு நிரந்
தரமாக ஆபத்து விளைவிக்கும்
நோய்க் கிருமிகள் அழுக்கில்
இருக்கின்றன. அக் கிருமி
களைக் கழுவிக் களைந்து உங்கள்
ஆரோக்கியத்தைப் பாதுகாப்
பது லைப்பாய் சோப்.
அன்றாடம் லைப்பாய் சோப்
தேய்த்துக் குளித்து உங்
கள் ஆரோக்கியத்தைக்
காத்துக்கொள்ளுங்கள்.
லைப்பாய் ஸ்நானம் புது
மலர்ச்சியூட்டுவது.
LIFEBUOY
SOAP

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18
இதழ் 43

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விகாரி ஹூ
வைகாசிமீ 10

மண்டலப் பிரிவினை வேண்டாம்!

ராஜாஜி எத்தனையோ காரியங்கள் சாதித்திருக்கிறார். அவற்றிலெல்லாம் உணவு ரேஷனை - கண்ட்ரோலை - தைரியமாக எடுத்ததைப் போல் மகத்தான காரியம் இல்லை என்று இன்றும் மக்கள் போற்றுகிறார்கள். உணவு கண்ட்ரோல் நீக்கத்தைப் பற்றி இன்றும் எங்கேயாகிலும் யாராகிலும் குறிப்பிட்டால் உடனே சபையோரிடமிருந்து பலத்த சந்தோஷ ஆரவாரம் கேட்கிறது. கரகோஷம் எழுகிறது. இது எதைக் காட்டுகிறது?

சர்க்காரின் கட்டுப்பாடுகள், கண்ட்ரோல்கள் அவ்வளவு வேதனையளித்து வந்தன! மக்கள் இவை ஒழியாதா என்று ஏங்கிக் கொண்டிருந்தனர். ராஜாஜி அவற்றிலிருந்து விடுதலை வாங்கித் தந்தார். அதற்குத் தம் மனமார்ந்த நன்றி ஈரேழு பதினாலு ஜன்மங்களிலும் அளிக்கத் தயார் என்று மக்கள் நினைப்பதைத்தான் காட்டுகிறது.

நிலத்தையுடைய விவசாயியின் வாழ்வில், நெல்லை விற்கும் மொத்த வியாபாரியின் வாழ்வில், சில்லறை வியாபாரியின் வாழ்வில், கடையில் வாங்கி வீட்டில் சமைத்துச் சாப்பிடுபவன் வாழ்வில் எல்லாம் சர்க்கார் கட்டுப்பாடு புகுந்து பாடாய்ப்படுத்தி வந்தது. கண்ட்ரோல் சனியன் நீங்கியவுடன் மக்கள் நிம்மதி யுற்றனர்.

சர்க்கார் கண்ட்ரோல் எடுபட்டால் வியாபாரிகள் ஏழைகளைப் பட்டினி போட்டுக் கொன்று விடுவார்கள், முதலாளிகள் வதைத்து விடுவார்கள் என்றெல்லாம் கம்யூனிஸ்டுகள் கூக்குரலிட்டனர். அவர்கள் கூற்றெல்லாம் பொய்யாய்ப் போயின!

அரிசி தாராளமாக வெளி மார்க்கெட்டில் சஞ்சரிக்க ஆரம்பித்தது. எல்லா மக்களும் பகிரங்கமாகத் தங்கள் உணவை நிம்மதியோடு உண்டனர்! அரிசிக் கண்ட்ரோல் எடுபட்டவுடன், விவசாயமும் பெருக ஆரம்பித்தது; உற்பத்தியும் அதிகரித்தது!

இவையெல்லாம் ஒரு உண்மையைத்தான் எடுத்துக் காட்டுகின்றன!

தனி நபரின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு, அவனுடைய வாழ்க்கையில் அனாவசியமாகப் புகுந்து இடையூறு நிகழ்த்தவில்லை என்றால் எல்லாம் நல்ல முறையில் நடக்கும்.

இந்தியாவைப் பிரிக்கலாகாது. மழை பொழிந்து, மக்கள் உழைப்பினால் விளைந்த உணவை எல்லாப் பிரதேச மக்களும் பங்கிட்டு உண்ணத் தயாராக இருக்கிறார்கள். இது இந்த அகண்ட பாரத நாட்டின் இயற்கை விதி. இந்த விதிக்கு முரணாக இந்தியாவைத் துண்டுகளாக்கி வேலி போட்டுக் கட்டுப்பாடுகள் விதித்தால்தான் விபரீதங்கள் விளைகின்றன. நாட்டை மண்டலங்களாகப் பிரித்து, இங்குள்ள பொருள் அங்கு போகக் கூடாது, அங்குள்ள பொருள் இங்கு வரக் கூடாது என்று கட்டுதிட்டங்கள் செய்வது பாரத மக்கள் ஒருவரோடு ஒருவர் வெறுப்புக் கொள்ளச் செய்வதாகும். விலையும் ஏறும்.

சென்னையை ஒரு தனி மண்டலமாகச் செய்யக் கேட்டிருக்கிறார்கள். இதிலும் ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவுக்கு அரிசி போகக் கூடாது என்றும் கட்டுப்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் கள்ள மார்க்கெட், பதுக்கல் முதலிய பழம் பிசாசுகளை விலை கொடுத்து வரவழைப்பதாகும்! நேர்மையாக வாழும் மக்களைக் கெட்ட வழிகளில் செலுத்திக் கொடுமைப்படுத்துவதாகும். சர்க்கார் அமைக்கும் சில கடைகளில் உபயோகமற்ற அரிசிக்கு விலை குறைந்திருக்குமே யொழிய சமைத்துச் சந்தோஷமாக உண்ணும் அரிசியின் விலை ஏறிக்கொண்டே போகும்.

கேரளத்திலிருந்து நமக்கு மிளகு வருகிறது, தேயிலை வருகிறது, நார்ச் சாமான்கள், தேங்காய் எண்ணெய் முதலிய எத்தனையோ சாமான்கள் வருகின்றன!

வீடு கட்டுவதற்கு வேண்டிய மரச் சாமான்களும் வரவேண்டியிருக்கின்றன. அப்படியிருந்தும் தஞ்சையிலிருந்து உபரியாக உள்ள அரிசி தமிழ்நாட்டு மக்கள் விரும்பாத குறுவைநெல், கேரளத்துக்குப் போகக் கூடாது என்று சொல்லலாமா?

பக்கத்திலுள்ள ராஜ்ய மக்கள் பஞ்சத்திலிருக்கப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? தமிழ் மக்கள் அதை ஒருகாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய மனப்பான்மை அதற்கு இடந் தராது.

தஞ்சை ஜில்லாவில் சுபிட்சத்துக்குக் காரணம் காவிரியாற்றின் நீர். 'மைசூர் ராஜ்யத்தில் உற்பத்தியாகும் காவிரியாற்றின் நீரை, உங்களுக்குத் தரமாட்டோம்' என்று அவர்கள் சொல்ல முடியுமா? மேலும் மேலும் அவர்கள் அணைகள் கட்டித் தேக்கிக் கொண்டால் தமிழ் நாட்டின் கதி என்ன ஆவது? மைசூரில் ஓடும் தண்ணீர் மைசூருக்குப் போகத்தான் மற்றவர்களுக்கு என்று சொல்லிவிட்டால் எவ்வளவு விபரீதம் விளையும்!

ஆகவே, இந்திய நாட்டை பாஷாவாரி மாகாணங்களாகப் பிரித்தது போதாது என்று, அரிசி முதலிய மூலாதாரப் பொருள்கள் விஷயத்திலும் மண்டலம் மண்டலமாகப் பிரிப்பது பெரும் ஆபத்தை உள்ளடக்கிய விஷயமாகும் என்பதை ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் நன்கு உணர வேண்டும்.

முக்கியமாக, தெற்கிலுள்ள ராஜ்யங்கள் ஒன்றுக்கொன்று பலப்பல விஷயங்களில் பிணைந்து கிடக்கின்றன. இம்மாதிரி செயற்கைத் தடுப்புகள் அமைத்து, அல்லற்படுத்தாதிருக்கக் கோருகிறோம்.

கல்கியும் நேருஜியும்

ஒரு காலத்தில் பத்திரிகைகளுக்கு அரசியலில் முக்கிய அங்கம் இருந்தது. மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் சட்ட சபைக்கு அடுத்தாற்போல், மக்களின் எண்ணங்களைப் பத்திரிகைகள் பிரதிபலிக்கின்றன என்று பத்திரிகைகளுக்கு முக்கிய மதிப்பு அளிப்பார்கள்.

எந்த ஒரு விஷயத்திலும், பத்திரிகைகள் ஆராய்ச்சி செய்து புலப்படுத்தும் கருத்துக்களைச் சர்க்கார் மிக கவனம் செலுத்திப் படிப்பார்கள். அரசாங்கம் கொண்டு வரும் சட்டங்களின் பலாபலன்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் வழிகாட்ட வேண்டியது பத்திரிகைகளின் கடமை.

நாம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் காங்கிரஸின் லட்சியமும் மக்களின் லட்சியமும் பத்திரிகைகளின் லட்சியமும் ஒன்றாகவே இருந்தன. தேசிய உணர்ச்சியை எழுப்புவதில் தேசத்தலைவர்களைப் போலவே பத்திரிகைகளும் முன்னணியில் நின்றன. கட்சியளவில் காங்கிரசில் அங்கத்தினர்கள் லட்சக்கணக்கில் தான் இருந்தார்கள். ஆனால் தேசமக்கள் அனைவருமே தாங்கள் காங்கிரஸ்காரர்கள் என்று எண்ணி வந்தார்கள். தேசம் என்றால் காங்கிரஸ், காங்கிரஸ் என்றால் தேசம் என்றுதான் கருதி வந்தார்கள். அதனால் தேசிய உணர்ச்சியுள்ள எல்லாப் பத்திரிகைகளும் தேச சுதந்திரக் கொள்கைகளையும், போராட்டச் செய்திகளையும் போட்டு வந்ததால், தேசிய உணர்ச்சியுள்ள பத்திரிகைகளையெல்லாம் 'காங்கிரஸ் பத்திரிகை' யென்றே சொல்லி வந்தார்கள்.

தேசம் சுதந்திரம் அடைந்த பின்னரும் தேசத் தலைவர்களுக்கு உதவும் வகையிலேயே பத்திரிகைகள் எழுதி வந்தன. ஆனால் தற்போது, சீர்திருத்தம் என்ற பெயரில் ஆளும் கட்சியான காங்கிரஸ் தேச மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்கால வாழ்வுக்கும் முரணான வகையில் சில காரியங்கள் செய்யத் தொடங்கும் போது, அவை தவறு என்று எடுத்துக் காட்ட வேண்டியது பத்திரிகைகளின் தர்மம். சுதந்திர ஜனநாயக நாட்டிலுள்ள பத்திரிகைகளின் கடமையாகும். இந்தத் தர்மத்தையே நாமும் கடைப்பிடித்து வருகிறோம்.


'காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை' என்று தனிப்பட்ட முறையில் பத்திரிகைகள் இருந்ததில்லை. கட்சியின் மூலதன ஆதரவு கொண்டு எந்தத் தேசிய உணர்ச்சி கொண்ட பத்திரிகைகளும் இருந்ததில்லை. காங்கிரஸ் செய்யும் காரியம் சரியென்று பட்டபோது ஆதரித்து வந்தன. அவ்வளவுதான். அதனால் அவற்றைக் 'காங்கிரஸ் பத்திரிகை' என்று கூற முடியாது.

சென்ற வாரம் நேருஜியை, கல்கியின் தலையங்கங்களில் வெளியாகும் கருத்துக்களைப் பற்றித் தில்லி பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, ''கல்கி மிகவும் புகழ் வாய்ந்த பத்திரிகைதான். அதனிடம் எனக்கு மதிப்புண்டு. ஆனால் அது காங்கிரஸ் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகை என்று சொல்ல முடியாது'' என்று பதில் அளித்தார்.

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஒரு கட்சியின் நடவடிக்கைகளை எப்பொழுதும் ஆதரித்து, சர்க்கார் வெளியீடுகள் தான் வெளியிட முடியும். காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை என்று ஒரு பத்திரிகையுமில்லை. ஆனபடியால் 'கல்கி' அந்த முறையில் காங்கிரஸ் பத்திரிகையல்ல.

சர்க்கார் செய்தி இலாக்காவில் வெளியாகும்பிரசுரங்கள்தான் அவ்வகையாகும்.

காங்கிரஸ் சர்க்காரைப் பயன்படுத்திக் கொண்டு, லாபம் பெறும் பத்திரிகையாக இருக்க நாம் விரும்பவில்லை. நம்மால் காங்கிரஸுக்கும், காங்கிரஸ் சர்க்காருக்கும் லாபம் உண்டாக வேண்டுமேயொழிய, காங்கிரஸைப் பசு மாடாக்கி,



திபெத் விஷயமாக இந்தியாவுக்கும், சீனுவுக்கும் பகை மூற்றி. இந்தியா மேற்கத்திய கோஷ்டியில் சேராதா என்று மேற்கத்திய நாடுகள் நப்பாசை கொண்டிருக்கின்றன!

பால் கறக்கும் பத்திரிகையாக இருக்கக் 'கல்கி' விரும்பாது.

* * *

உண்மையான நண்பனின் கடமை என்னவென்பதைக் குறளாசிரியர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

நகுதற் பொருட்டன்று
நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்
பொருட்டு

இந்தக் குறள் வாக்கின்படி, காங்கிரஸ் தவறு செய்வதாக நமக்குத் தோன்றும் போதெல்லாம், எதிராளியை விட நாமே முன் சென்று இடித்துக் காட்டி வந்திருக்கிறோம்!

காங்கிரஸ் தன் கொள்கையை விட்டு நழுவும்போதெல்லாம், அதன் கொள்கையையும் கடமையையும் இடித்துக் காட்டுவது நமது கடமை என்று உணர்ந்து செய்துள்ளோம். காந்தி மகான் காட்டிய பாதையிலிருந்து தவறும்போதெல்லாம் இடித்துக் காட்டுவது நமது தலையாய கடமை என்று செய்துள்ளோம்.

"நிலச்சீர்திருத்த விஷயத்தில் கம்யூனிஸ்டு கொள்கைகளை மேற்கொண்டு விட்டதனால் காங்கிரஸ் இன்று காங்கிரஸாக இல்லை" என்று நாம் சொல்லும் போது, யாரும் கூருத அதிசயச் செய்தியைக் கூறவில்லை!

இந்தச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவில்லையானால் நாட்டில் கம்யூனிஸம் வந்து விடும் என்று ஸ்ரீ மூரார்ஜி சொன்னார்.

இந்தப் பேச்சு நாம் சொன்னது உண்மை என்று நிரூபிக்கிறது! கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைக் குறைப்பதற்காகக் கம்யூனிஸ்டு கொள்கைகளை காங்கிரஸ் மேற்கொண்டு விட்டது என்பதைத் தெளிவாகச் சொல்கிறது.

நம்மைக் காங்கிரஸ் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகையல்ல என்று நேருஜி சொல்வதை நம்மால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. நாம்தான் காங்கிரஸ் கொள்கைகளைக் கடைப் பிடித்து வந்திருக்கிறோம். காங்கிரஸ் சர்க்கார் தான் கம்யூனிஸ்ட்டுகளைக் கண்டு பயந்து அவர்களுடன் போட்டியிட்டு நாட்டின் உணவு உற்பத்தி குறையும்படியான முறையில் சென்று வருகிறது.

நேருஜி நமது பத்திரிகையைப் பாராட்டியதற்கு மனமார நன்றி செலுத்துகிறோம். அப்பாராட்டைக் கல்கியை ஆதரிக்கும் தமிழ்ப் பெருமக்களுக்கு அளித்த பாராட்டு என்றே கருதுகிறோம்.

என்ன சேதி?

விவசாயம் பிழைக்குமா?

கூட்டுறவுப் பண்ணை முறையில் பயிற்சியளிக்க ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் நூறு தொண்டர்கள் வேண்டும் என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி அறிக்கை விடுத்திருக்கிறார்.

இதைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

இம்மாதிரி தயாரித்த அரசியல் தொண்டர்களிடம் நாட்டு விவசாயத்தை ஒப்படைத்தால் என்ன கதியாகும் என்று நினைத்துப் பார்க்கவே நமக்குப் பயமாக இருக்கிறது!

நாட்டு வைத்தியர்களில் நல்லவர்களை அழைத்து வந்து ஒரு மாதம் மின்சார விஷயத்தில் பயிற்சியளித்து, 'ஒரு மின்சார பவர் ஹவுஸை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றால் எப்படியிருக்கும்? அது போல் அல்லவா ஆகிவிடும் நாட்டு விவசாயம்!

விவசாயம் குட்டிச்சுவராகப் போய், விளைவு பாதித்து, மக்கள் பஞ்சத்திலும் பட்டினியாலும் அல்லவா வாட நேரிடும்? அதிலும், "வங்காளப் பஞ்சம்" போன்ற பயங்கர பஞ்ச நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது என்று மத்திய உணவு மந்திரி இப்பொழுதுதான் சொன்னார். இந்தச் சமயத்தில் இத்தகைய விபரீத விஷப் பரீட்சைகளை மேற்கொள்ள மக்கள் அனுமதிக்கலாமா?

விவசாயத்தில் தலைமுறை தலைமுறையாக ஈடுபட்டு, நிலத்தைப் பற்றியும் நெல்லைப் பற்றியும் நன்றாகத் தெரிந்தவர்களையும், முதல் போட்டு விளைவைப் பெருக்க யோக்கியதையுள்ளவர்களையும் புறக்கணித்து விட்டுக் கடனாளிகளிடம் நிலத்தை ஒப்புவித்து, இப்படியொரு காரியம் செய்ய விஷயம் தெரிந்த மக்கள் அனுமதிக்கலாமா?

சர்க்கார் துறை

சர்க்கார் தொகுதியிலுள்ள ஸ்தாபனங்கள் செயலாற்றும் திறமையைக் கண்டு தாம் பெருமிதம் கொள்ளுவதாகப் பிரதமர் நேருஜி பாராட்டிப் பேசி ஒரு வாரம்கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே அவர் கூற்றுக்குப் பதிலளிப்பதே போல் தில்லி மக்கள சபையின் பொதுக் கணக்குப் பரிசீலனைக்கமிட்டி இரண்டு ரசமான விவரங்களை வெளியிட்டிருக்கிறது. ஒன்று நமது பாதுகாப்பு இலாகா சம்பந்தப்பட்டது. மற்றொன்று ஏற்கனவே பல ஊழல்கள் மலிந்தது என்று பெயர் போன தாமோதர் நதி பள்ளத்தாக்கைப் பற்றியது.

பாதுகாப்பு இலாகா பம்பாயில் வில்லங்கங்கள் மலிந்த நாலு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு கட்டடத்தை வாங்கிய வகையில் சுமார் ஏழு லட்சம்வரை செலவாயிற்றாம். தேவைக்கு அதிகமாகவும் தேவையில்லாததுமான சாமான்களை ஏகத்தாறாக வாங்கிக்குவித்த வகையில் இரண்டு இனங்களில் மட்டும் 90 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாம்.

நீர்ப்பாசன வசதிக்கென 22 கோடி ரூபாய்செலவில் வகுக்கப்பட்ட தாமோதர் திட்டத்துக்கு 44 கோடி இப்போது பிடிக்குமாம்! இதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் பூஜ்யமாம்!

இவையெல்லாம் புதிய விஷயங்கள் அல்ல. ரூர்கேலா,பிலாய் உருக்குச் சாலை விஷயங்கள் நாடறிந்ததே. இவற்றுக்குத் துணையாக இப்போது துர்க்காப்பூரும் சேர்ந்திருக்கிறது. அஸ்திவாரத்துக்காகப் போடப்பட்ட சில "பைல்" தூண்கள் போதிய அளவு வலிமையுடையனவாக இல்லாததால் அவற்றைப் புதிதாக அமைக்க வேண்டியிருக்கிறதென்பதைப் பிரதமர் நேருஜியே ஒப்புக் கொண்டிருக்கிறார். அரசாங்கத் தொழில் என்றாலே வரம்பில்லாத மூலதன முதலீடு, தேவைக்கு அதிகமான யந்திரங்களும் சாதனங்களும் வாங்குதல், உற்பத்தியாகும் பொருள்களுக்கு நிர்ணயமான அடக்கவிலை பரிசீலிக்கப்படாமை, ஒரு ஆள் செய்யும் வேலைக்கு இரண்டு ஆள் நியமிப்பது, மற்றும் இது போன்ற குறைபாடுகள் நிரந்தரமாக எதிர்பார்க்கலாம் என்பது கேட்டுக் கேட்டு அலுத்துப் போன விஷயங்கள். பொதுமக்களுக்கு ஞாபக சக்தி குறைவு என்று சாதாரணமாகக் கூறுவது வழக்கம். இருந்தாலும் இந்த மாதிரியான ஊழல்கள் மலிந்த நிர்வாகத்துக்கு உதாரணங்களாகச் சராசரி நாளுக்கு ஒன்று வீதம் அரசாங்கத்திடமிருந்தே கிடைத்துக் கொண்டிருக்கையில், அவற்றின் தரத்தைப் பற்றியோ, சிக்கனத்தைப் பற்றியோ வானளாவப் புகழுவது என்ன காரணம்?

கணக்குக் காட்டவும்

தேர்தலில் லஞ்ச ஊழல்கள் இருக்கக்கூடாதென்பதற்காகப் போட்டியிடுபவர்கள் குறிப்பிட்ட வரம்புக்குமேல் செலவு செய்யக் கூடாதென சட்டம் நிர்ணயம் செய்திருக்கிறது. தேர்தல் முடிவடைந்ததும் வெற்றி பெற்றவர்களும் தோல்வியுற்றவர்களும் தேர்தல் கணக்குக் காட்டவேண்டும் என்றும் விதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் கட்சிகள் தேர்தலுக்காகச் செலவு செய்யும் பெருவாரியான பணத்துக்குக் கணக்குக் காட்டவேண்டுமென்று ஒரு சட்டமோ நிபந்தனையோ இல்லை. பலனடைவதென்னமோ அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள். ஆகவே தேர்தல் சட்டத்தின் நோக்கம் எவ்வளவு உன்னதமாக இருந்தாலும் அவை நிறைவேறாமல் போவதற்குச் செலவு விஷயத்தில் கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட விலக்கேகாரணம். இந்தப்

'பொத்தலை' அடைக்க வேண்டி அரசியல் கட்சிகளும்கூடத் தேர்தலுக்காகச் செய்யும் செலவுக்குக் கணக்குக் காட்டும்படி சட்டமியற்ற வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார் தேர்தல் கமிஷனர் திரு சுகுமார் சென். இது மிகவும் அவசியமான திருத்தம். தேர்தல்களில் ஒழுங்கு முறையை நிலைநிறுத்த இன்றியமையாதது.

திரு பாஸ்கரத் தொண்டைமான்

திருவாளர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்களிடம் என்ன விசேஷப் பண்பென்றால், சர்க்கார் உத்தியோக நேரம் முடிந்து மிச்சமுள்ள பொழுதைப் பயனுள்ள வழியில் செலவழித்து வந்தார். கம்ப ராமாயணம், திருக் குறள், குற வஞ்சி, பிரபந்தங்கள் என்று இலக்கியத் துறையில்செலவழித்துக் கொண்டிருப்பார்; பேசிக் கொண்டிருப்பார்; அல்லது எழுதிக் கொண்டிருப்பார். இலக்கியக்கூட்டங்களில் கலந்துகொண்டு அருமையாகச் சொற்பொழிவாற்றுவார்.



திரு பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுக்கு இலக்கியத்திலுள்ள ஆர்வத்தைப் போலவே, சிற்பம், சித்திரம் முதலிய கலைகளிலும் நல்ல ஈடுபாடு. வேங்கடம் முதல் குமரி வரையுள்ள பற்பல கோவில்களுக்குச் சென்று பற்பல சிற்பச் செல்வங்களைக் கண்டு அனுபவித்து, அவற்றின் சிறப்புக்களைத் தொகுத்து வைத்திருக்கிறார். அவர் தஞ்சையிலிருந்தபோது, ஒரு சிறந்த கலை விழா நடத்தித் தமிழ் மக்களுக்குத் தங்கள் கலைச் செல்வத்தை அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆனால் இதில் விந்தை என்னவென்றால் இப்படி இவர் இலக்கியத்தில் கவனம் செலுத்தச் செலுத்த அவரது உத்தியோகமும் உயர்ந்துகொண்டேவந்தது. ரிவின்யூ இலாக்காவில் சாதாரண உத்தியோகஸ்தராக நுழைந்து, கலெக்டர் பதவிவரையில் உயர்ந்து சமீபத்தில் ஓய்வு பெற்றார். சர்க்கார் வேலைத் துறையிலும் சிறந்த அதிகாரி என்று பெயர் எடுத்தார்.

அவர் இனிமேல் தமது நேரத்தையும் காலத்தையும் இலக்கியப் பணிக்கே அர்ப்பணம் செய்துவிட முடிவுசெய்திருக்கிறார். இலக்கியப் பேச்சுக்களைக் கேட்க விரும்பும் ரஸிகர்களுக்கும் இலக்கியக் கட்டுரைகளைப் படிக்கத் துடிக்கும் நேயர்களுக்கும் நல்ல அதிர்ஷ்டம் என்று சொல்லி வைக்கிறோம். திரு பாஸ்கரத் தொண்டைமானின் இலக்கியப் படைப்பை அனுபவிக்கும் வாய்ப்பு விரைவில் கிட்டும் என்று காதோடு சொல்லி வைக்கிறோம். திரு தொ. மு.பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் இலக்கியப் பணி, நாளுக்கு நாள் சிறப்பதாக.

ஆகாச வெடி

"சென்னைக்கு அன்று வரவேண்டிய கல்கத்தா மெயில் ஒரு நாள் ஒரு மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது."

— செய்தி

தாமதமாகியும் வந்து சேர்ந்ததே; திரும்பிப் போய் விடாமல்!

✲

"இந்திய எல்லையில் புகுந்து கையில் துணிமணிகளை எடுத்துக் கொண்டு ஓடிய இரு பாகிஸ்தானிகள் சுடப்பட்டனர்."

கையிலுள்ள துணிமணிகளை எடுத்ததும் தங்களைத் துணிகரமானவர்கள் என்று அவ்விருவரும் நினைத்துக் கொண்டார்கள் போலும்!

✲

"பல மாகாணங்கள் கேட்டுக் கொண்டும், அகில இந்திய யோகாப்பியாசக் கல்லூரியை ஜம்மு காஷ்மீரத்திலேயே அமைப்பதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது." — செய்தி

இதர மாகாணங்களில் கல்லூரி வைக்கக் கூடாது என்று அங்கு யார் தலைகீழ் நின்று முயன்றார்களோ?

"தேசப் படத்தைக் கொளுத்திச் சாம்பலை நேருவுக்கு அனுப்புங்கள்."

— ஈ. வே. ரா.

ஸ்ரீ ஈ. வே. ரா.வின் காரியங்கள் இப்படிச் சாம்பலாக முடிந்தது வேடிக்கைதான்!

✲

"திபேத்திலிருந்து ஓடி வரும் லாமாக்காரர்களைத் தடுக்கும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாது."

— கல்கத்தா, திபேத் மகாநாடு

ஓடி வருபவர்களைக் கற்கள் தடுக்கினாலும் இவர்கள் பேசாமல் இருப்பார்களா?

✲

"ரஷ்யப் பிரதமர் க்ருஷேவ் எழுதிய 22 பக்கங்கள் கொண்ட குற்றச்சாட்டுக் கடிதத்துக்கு, எகிப்துத் தலைவர் நாஸர் 24 பக்கங்கள் கொண்ட பதில் கடிதம் எழுதியிருக்கிறார்."

— பத்திரிகைச் செய்தி

இரு பக்கத்திலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இன்னும் ஏற்படவில்லை என்பதுதான் இதிலிருந்து வெளியாகிறது.

நமது அதிசய நிருபர் பேட்டி

'கொக்கி'

"நாட்டில் மீண்டும் ஒரு முறை வங்காளப் பஞ்சம் ஏற்படும் போலிருக்கிறது!" என்று இந்திய உணவு மந்திரி வெளியிட்ட செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

"சேச்சே! இனியும் நாம் சும்மா இருக்கக்கூடாது! காங்கிரஸ் நிர்வாகத்தில் வங்காளப் பஞ்சம் வருவதாவது? அப்புறம், நமது முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் இவற்றைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டதெல்லாம் என்ன ஆவது?" என்று அலறிப் புடைத்துக் கொண்டு தில்லிக்கு ஓடினேன்.

"எங்கே அந்தப் பஞ்சம்? வங்காளப் பஞ்சம்? ஒரே போடு! அதைத் தொலைத்து விடுகிறேன்! எங்கே அது?" என்று கேட்டுக் கொண்டே, கையிலிருந்த பென்சிலைச் சுழற்றினேன்.

உணவு மந்திரி திரு ஜெயின் குனிந்து கொண்டு, "என் தலையில் போடு......" என்றார்.

"நிஜமாகவா?" என்று நான் ஆச்சரியமாகக் கேட்டதும், "ஆமாம். பென்சிலை அல்ல; இந்த நிலைமைக்கு முழுப் பொறுப்பையும்தான் என் தலையில் போடச் சொல்கிறேன். தவறுகள் தொடர்ந்து நடந்து விட்டன. இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. இருபது லட்சம் டன் உணவு தானியம் பற்றாக் குறையாகியிருக்கிறது! வெளிநாடுகளிலிருந்து தருவித்தால் உண்டு வாழ்வு!" என்றார் உணவு மந்திரி.

"வெளி நாட்டுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யும் அளவுக்குத் தானியம் விளைந்து வருகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் பிரமாதமாகப் பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்று கூறியதையெல்லாம் திடீரென்று மறுத்தால் பொதுஜனங்கள் என்ன நினைப்பார்கள்?"

"பொதுஜனங்களின் சொல்லுக்குப் பயந்து கொண்டுதான் விஷயத்தை இவ்வளவு காலமாக அமுக்கமாக மூடி மறைத்து, எப்படியாவது சமாளித்து விடலாமென்று பார்த்தோம்... முடியவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டியதாகி விட்டது!"

"என்ன செய்வதாக உத்தேசம்?"

"அகில இந்திய காங்கிரஸ் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே போய்க் கேளுங்கள்! நான் அவசரமாக ஒரு விருந்து வைபவத்துக்குப் போக வேண்டும்!" என்று சொல்லி விட்டு அவர் கிளம்பவே, அ. இ. கா. க. கூட்டத்தில் நுழைந்தேன்.

அப்போது தீர்மானங்கள் மளமளவென்று ஏகமனதாக நிறைவேறிக் கொண்டிருந்தன. தீர்மானங்களுக்கெல்லாம் பிரதிநிதிகள் "நமோ நம!" போட்டுக் கொண்டிருந்தனர்.

"இந்தியாவின் திபேத் கொள்கைக்கு!"

"நமோ நம!"

"அல்ஜீரியாவுக்கு நாம் தரும் ஆதரவுக்கு...... !"

"நமோ நம!"

"பாகிஸ்தானுக்கு நாம் அளிக்கும் பதில்களுக்கு!"

"நமோ நம!"

"ஜெனிவா மகாநாடு வெற்றி பெறுவதில் நாம் கூறும் ஆசிகளுக்கு!"

"நமோ நம!"


இவ்வாறு பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறிக் கொண்டு போனதே தவிர, பஞ்சப் படையெடுப்பைப் பற்றி ஒருவிதமான சலசலப்பையும் காணவில்லை. கையிலிருந்த பென்சிலைக் காதில் செருகிக் கொண்டு, காங்கிரஸ் அக்கிராசனர். இந்திரா நேரு அவர்களை அணுகி "நமஸ்தே! ஒரு சின்ன விஷயம்!" என்றேன்.

"பெரிய விஷயமாயிருந்தாலும் தயக்கமின்றிக் கூறலாம்!" என்றார்.

"நாட்டிலே வங்காளப் பஞ்ச நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்களே... அப்படி ஏதாவது வருமா...? ...வந்தால் என்ன செய்வது?"

"நாகபுரித் தீர்மானம் இருக்கும்போது ஏன் பயப்பட வேண்டும்?" என்றார் ஸ்ரீமதி இந்திரா நேரு.

"நாகபுரித் தீர்மானம்" என்று அவர் உச்சரித்ததுதான் தாமதம், "நமோ நம! நமோ நம!" என்ற முழக்கம் அமோகமாக எழுந்தது. இந்தக் கும்பலில் நமக்கு இடமில்லை என்று அடுத்த கணம் அவ்விடம் விட்டுப் பறந்தேன்.




[17 - 5 - 59 கல்கி இதழ் மின்சார மலராக வெளிவந்ததையொட்டி நமது மாநிலத் தொழிலமைச்சர் திரு ஆர். வெங்கடராமன் அனுப்பி வைத்த செய்தியைக் கீழே வெளியிட்டிருக்கிறோம். — ஆசிரியர்]

நமது அபூர்வ சாதனை

திரு ஆர். வெங்கடராமன்


மின்சார உற்பத்தி வினியோகம், உபயோகம் ஆகிய துறைகளில் நமது மாநிலம் அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்களுக்கு எடுத்துக் காட்ட 'கல்கி' ஒரு விசேஷ மலர் வெளியிட்டிருப்பதைக் கண்டு நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். மின்சார உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைப் பிரமிக்கத்தக்க அபூர்வ சாதனை என்றே சொல்ல வேண்டும். முதலாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பத்தில் நாம் 1560 லக்ஷம் வாட் மின் சக்திதான் உற்பத்தி செய்து கொண்டிருந்தோம். இன்று 3560 லக்ஷம் வாட் சக்தி உற்பத்தி செய்கிறோம். இரண்டாவது திட்ட கால இறுதியில் இது மேலும் 5720 லக்ஷம் வாட் அளவுக்கு உயரும்.



அமைச்சர் ஆர். வெங்கடராமன்

நம் ராஜ்யம் பொருளாதாரத் துறையில் எவ்வளவு முன்னேறியுள்ளது என்பதைத் தலைக்கு எவ்வளவு கிலோவாட் மின்சக்தி உபயோகிக்கப் படுகிறது என்ற கணக்குப்படி மதிப்பிடுவது வழக்கம். இதன்படி 1955ல் தலைக்கு 25 கிலோவாட் தான் உபயோகிக்கப்பட்டன. 1958ல் இது 36 கிலோவாட்டுகளாக உயர்ந்திருக்கிறது. இரண்டாவது திட்ட கால முடிவில் இது 60 கிலோவாட்டுகளாக உயரும்.

மின்சார அபிவிருத்தியில் திருப்தியளிக்கும் ஒரு அம்சம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இவ்வதிக உற்பத்தி பயன்படுகிறது என்பதே. இதுவும் நமது அபூர்வ சாதனையென்றே சொல்ல வேண்டும். கிராமங்களுக்கு மின் வசதி விஸ்தரிப்பிலும், விவசாயத் தேவைகளுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்துவதிலும் நமது ராஜ்யம் எல்லா ராஜ்யங்களுக்கும் தலைமையில் நிற்கிறது என்பதைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டும். மின்சாரத்தின் தேவை பரவலாகவும் பெருமளவிலும் வேகமாக வளர்ந்து கொண்டே போவதிலிருந்தும் உற்பத்தியை விட அதிகமாகவே தேவைகள் விரிவடைந்ததிலிருந்தும் நம் மாநிலத்தின்பொருள் நிலை அபிவிருத்தியடைந்து வருகிறதென்பது தெரிகிறது. சமூகப்பொருளாதார அபிவிருத்தியின் ஒரு அறிகுறிதான் மின்சாரத் தேவையின் வளர்ச்சி. வழக்கமாக மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் சாதன வசதிகளின் வாய்ப்புக்கள் அனைத்தும் பயன்படுத்தப் பட்டு விட்டதால், இதர வகைகளில் மின்சாரம் எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்று நாம் ஆராய வேண்டிய நிலையிலிருக்கிறோம். அணு சக்தியிலிருந்து மின் சக்தி உற்பத்திக்கான யோசனைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். மின்சாரத் துறையில் நாம் இதுவரையில் வழிகாட்டிகளாக இருந்ததற்கு முதல் அணு சக்தி—மின் நிலையம் சென்னை ராஜ்யத்தில் அமைந்து விட்டால் மிகப் பொருத்தமாக இருக்கும். மின்சாரத் துறையில் முன்னணியில் நிற்க மேற்கொண்ட நமது முயற்சிகளுக்குச் சிகரமாக அமையும்.



திருகோணமலையில் தமிழ் சர்வகலாசாலை

கொழும்பு மே மீ 15 உ

மே மாதம் 10ம் தேதி இலங்கைத் தமிழர்களின் நீண்ட சரித்திரத்தில் என்றென்றும் மறக்க முடியாத ஒரு பொன்னாள். ஒற்றுமையும் கட்டுப்பாடும் மன உறுதியுமிருந்தால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் சாதிக்க முடியுமென்பதைச் சிறப்பாக எடுத்துக் காட்டிய திருநாள். அன்று சரித்திரப் புகழ் பெற்ற திருகோணமலையிலே வானளாவிய கட்டடமொன்றைக் கட்டியெழுப்பவும் அதில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவவும் வேண்டுமென்ற தமிழ் மக்களின் நீண்ட கால விருப்பத்தைச் சாதி சமய கட்சி பேதமின்றிச் சகல தமிழ்த் தலைவர்களது சம்பூரண ஒத்துழைப்புடனும் உருப்பெறுவதற்கு ஆரம்பித்திருக்கிறது. புதிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கால்கோள் விழாவை நடத்தத் தமிழ் மக்கள் திருமலையென்னும் திருகோணமலையில் கூடினர்.

இலங்கையின் தலைசிறந்த கல்விமான்களில் ஒருவரும், சர்வகலாசாலை விஞ்ஞானப் பேராசிரியருமான திரு மயில்வாகனம் தமிழ் சம்பிரதாயப்படி தலையில் தலைப்பாகையணிந்து 'ஹரி ஓம்' என்று சொல்லிக் கொண்டு முதலாவது அஸ்திவாரக் கல்லை வைத்தார். அவரைத் தொடர்ந்து நகராண்மைக் கழகத் தலைவர் திரு நேமிநாதன், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு ராஜவரோதயம், திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமான், திரு வி. சுந்தரலிங்கம் முதலான தமிழ்த் தலைவர்களும் மங்கள வாத்தியங்கள் முழங்க அஸ்திவாரக்கல் நாட்டினர்.

சமஷ்டிக்கு இந்திய மந்திரி ஆதரவு

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய விஞ்ஞான கலாசார மந்திரி திரு ஹுமாயூன் கபீர் பத்திரிகை நிருபர்களுக்கு இவ்வாரம் பேட்டியளித்துப்பேசிய பொழுது இலங்கையில் பெரும் சர்ச்சையிலுள்ள சமஷ்டிப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டார். ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டுமானால் அதற்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்ததென்றார். இங்கிலாந்தில் உள்ள யார்க்ஷயர், வார்விக்ஷயர் போன்ற மாவட்டங்கள் சமஷ்டி முறையில் இயங்குவதாயும் இந்திய ஆட்சிமுறையும் சமஷ்டி ஆட்சி முறையென்று வர்ணிக்கலாம் என்றும் கூறிவிட்டு, சமஷ்டி ஆட்சிமுறை எல்லா இனத்தவர்களும் ஒற்றுமையாகவும் அதே சமயம் தங்கள் தங்களது இன வளர்ச்சி பாதியாமலும் முன்னேற வழி வகுப்பதாகக் கூறினார். இலங்கையிலுள்ள தமிழரசுக் கட்சியும் இதைத்தான் கூறுகிறது. ஒற்றையாட்சி முறை ஒரு வகுப்பார் முன்னேறவும் இன்னொரு வகுப்பார் நசுக்கப்படவும் இடமளிப்பதாயிருக்கிறது. இப்படியில்லாமல் சமஷ்டியாட்சி முறையில் பிரதேச சுயாட்சி ஏற்படுமானால் தமிழ்ப் பகுதிகளும் சிங்களப் பகுதிகளும் தனித்தனியே தங்களது விவகாரத்தைக் கவனித்துக் கொண்டு முன்னேறவும் அதே சமயம் நாட்டின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் காப்பாற்றவும் வழி வகுப்பதாக இருக்கும். ஆனால் இதைச் சிங்கள அரசாங்கம் தனது முக்கியத்துவம் போய்விடுமேயென்ற பயத்துடன் பலமாக எதிர்க்கிறது. உதாரணமாக, இலங்கையில் ஒற்றையாட்சி முறை அமுலில் இருந்தால் தமிழ் மொழியை ஒதுக்கி, சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கியிருக்க முடியாது. தமிழர்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க முடியாது. ஆரம்பத்தில் சமஷ்டிக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்து வந்த பிரதம மந்திரி பண்டாரநாயகா இப்போது ஸ்விட்ஸர்லந்திலுள்ளதைப் போன்ற சமஷ்டியாட்சி முறை இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்கலாம் என்ற அடிப்படையில் நினைக்கவும் பேசவும் ஆரம்பித்திருப்பது கவனிக்கத் தக்கது. சமஷ்டி ஒன்றுதான் இலங்கைக்குக் கதி மோட்சம் அளிக்க வல்லது.

—ரஜனி.

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

83

நான் அடைந்து விட்ட செல்வம், படிப்பு, பதவி, மனைவி முதலிய விஷயங்களினால் உண்டாகும் மகிழ்ச்சி அளவுக்கு மிஞ்சிப் போனால் மனிதனைத் தன் கடமையையும் நன்மையையும் மறந்துவிடச் செய்யும்.

வரம்பு கடந்த மகிழ்ச்சியினால் உண்டாகும் போதையானது கோபத்தினால் உண்டாகும் மயக்கத்தை விட அதிக அபாயம்.

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு

இறந்த - வரம்புகடந்த. வெகுளியின் தீதே - கோபத்தினால் உண்டாகும் கெட்ட பயனைக் காட்டிலும் அதிகத்தீமை உண்டாக்குவதாகும். சிறந்த உவகை மகிழ்ச்சி - இன்பம் தரும் விஷயங்களினால் உண்டாகும் அதிகக் களிப்பு. சோர்வு - மறப்பு. செய்ய வேண்டியதைச் செய்யாதொழிக்கும் மறதி - இதைக் குறளாசிரியர் 'பொச்சாப்பு' என்பார்.

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு

இத்தகைய மறதிக்கு இடம் கொடுத்தவர்களுக்குப் புகழ் அடையும் வாய்ப்புக் கிடையாது. இது எல்லா வாழ்க்கை முறைக்கும் பொது உண்மை. இல்லறம், துறவு, பிரம்மச்சரியம், அரசு, எந்த வாழ்க்கைக்கும் இது உண்மை. எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. ஆகவே, 'எப்பால் நூலோர்க்கும் துணிவு.'

* * *

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

மனத்தின் கண் அச்சம் உடையார்க்கு காடு, மலை, ஆறு, மதில் முதலிய அரண்களால் யாதொரு பயனுமில்லை. அதுவே போல் பொச்சாப்பு அதாவது வரம்பு கடந்த மகிழ்ச்சியினால் போதை அடையும் மக்களுக்குச் செல்வம் படிப்பு முதலிய உடைமைகளினால் பயனில்லை. எந்த நன்மை அடைந்தாலும் உவகைக் களிப்பு வரம்பு மீறிப் போகாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

* * *

கடமையை மறவாதிருத்தல் போல் வேறு எந்தக் காப்பும் உதவாது. கடமை நினைவு யார் மாட்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வழுவாது இருக்க வேண்டும்.

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்பது இல்.

இழுக்காமை: கடமை மறவாதிருத்தல், வழுக்காமை - வழுக்காமல், தவறாமல்; இழுக்காமை வாயின் - இழுக்காமை வாய்த்தால்; அது ஒப்பது - அதைப்போன்ற நன்மை பயக்கும் பொருள்.

பொதுவாக, கடமையை மறத்தல் கூடாது என்று சொல்வதோடு யார் மாட்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறவாமலிருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

* * *

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

தம் மகிழ்ச்சியின் மைந்து உறும் போழ்து - உன் சுகங்களை அனுபவிக்கும்போது, முன் காலத்தில் சோர்வினால் கெட்டவர்களைப் பற்றிப் புராணங்களில் படித்தும் கேட்டும் இருக்கிறோம். அவர்களை நினைத்துக் கொள் என்கிறார் முனிவர்.

நீ பெற்ற செல்வத்தை எண்ணிச் செருக்குக் கொள்வாய். அதனால் பிறர் உரிமைகளை மறப்பதும் உண்டாகும். இதைப் போலவே இன்னும் மற்ற இன்பங்களும் வரம்பு மீறிய களிப்புக்கு இடம் கொடுத்தால் அது உன் அறிவை இழக்கச் செய்யும். அப்போது நினைவுக்குத் தந்து கொள், முன் காலத்தில் அவ்வழியில் கெட்டுப் போனவர்களை. அது உன் பொச்சாப்பைத் தணிக்கும்.

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

38. நாரதரின் சாபம்

குபேரனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் சிவபெருமானுக்குச் சேவை செய்து வந்தனர். ஆனால் மதம் பிடித்தவர்கள். ஒரு நாள் அவ்விருவரும் வாருணீ என்ற பானத்தைப் பருகிப் பெண்களோடு கூடிப் பாடிக்கொண்டு மலர் மிகுந்த மந்தாகினி ஆற்றின் கரையில் களித்துக் கொண்டிருந்தனர். குடியினால் அவர்களுடைய கண் சுழன்று கொண்டிருந்தது. ஆற்றில் இறங்கிப் பிடிகளினிடையேயிருக்கும் களிறனை மங்கையரோடு விளையாடினர்.

அச்சமயம் நாரதர் அங்கே வர நேர்ந்தது. குடிவெறி கொண்டிருக்கும் இவ்விருவரையும் அவர் கண்டார். முனிவரைக் கண்டு மங்கையர் என்ன சாபம் வருமோ என்று பயந்தனர். பரபரப்புடன் தங்கள் ஆடையை உடுத்திக் கொண்டனர். ஆனால் குபேரன் மைந்தர் இருவரும் நாரதரைச் சிறிதேனும் மதிக்காமல் பிறந்த மேனியாய் ஆடிக் கொண்டிருந்தனர். நாரதருக்கு அவர்களை உடனே சபிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. சாபம் மூலமாக அவர்கள் இறுதியில் கடைத்தேறுவார்கள் என்பது அவருடைய கருத்து. அவர்களை அணுகி நாரதர் பேசலானார் :

"செல்வத்தின் செருக்கு இணையற்றது. மாதரும் கள்ளும் சூதும் செல்வத்தோடு கூடியிருந்தவை. தனத்தால்கண்இருண்டவனுக்கு வறுமையே காட்சி அளிக்கும். ஏழையே தன்னைப் போல் மற்றவரையும் பார்க்கிறான். தன் காலில் முள் தைத்து வரும் வலியை அனுபவித்தவன்மற்றவன் காலில் முள் தைத்தால் அதைக் குறித்து வருந்துவான். ஏழைக்கு வறுமையே கடவுளை அடைவதற்குரிய தவமாகும். வறுமையால் உடல் மெலிந்து புலன்களின் செய்கை குன்றியிருப்பவன் மனம் கொடுஞ் செயலில் செல்லாது. சாதுக்கள் ஏழையை நாடுவார்கள் ; செல்வத்தால் கண் தெரியாதிருப்பவரை அணுகுவதில்லை. ஆகவே தாசிகளுக்குத் தாசர்களான இவ்விருவருடைய செருக்கைச் சிதைத்து விடுகிறேன். கள்ளுண்டு தம்மை அறியாது நிற்கும் இவர்கள், ஓரிடத்திலே நகராது நின்றுகொண்டு, தலை வணங்காது நிமிர்ந்து, ஆடையற்றுப் படைத்த வண்ணம் வளரும் மரங்களாக மாறக் கடவது. ஆனால் தன் நினைவு மட்டும் இவர்களுக்கு மாறாது. இவ்வாறு தேவ வருடத்தில் நூறு கழிந்ததும் வாசுதேவனே இவர்களுக்கு விடுதலை அளிப்பான்" என்றார்.

இவ்வாறு கூறிவிட்டு நாரதர் நாராயண ஆசிரமத்துக்குச் சென்று விட்டார். நளகூபரன், மணிக்ரீவன் என்ற பெயர் பூண்ட அவ்விருவரும் உடனே இரண்டு "அர்ஜுன" மரங்களாக மாறி விட்டனர். இரண்டு மரங்களும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருந்தன.

* * *

யசோதை கண்ணனைக் கயிற்றினால் மர உரலோடு சேர்த்துக் கட்டினாள் அன்றோ? மரங்களாக நின்று கொண்டிருந்த குபேரனுடைய குமாரர்களை விடுவிக்க வேண்டி, கண்ணன் உரலை இழுத்துக் கொண்டு "அர்ஜுன" மரங்களை நோக்கிச் சென்றார். இரண்டு மரங்களுக்கு நடுவே கண்ணன் சென்றதும் மர உரல் மரங்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்டது. கண்ணன் உரலைத் தன்னைக் கட்டுண்ட கயிற்றினால் இழுக்கவே, இரண்டு அர்ஜுன மரங்களும் கீழே சாய்ந்து விட்டன. உடனே இரண்டு குபேர குமாரர்களும் தங்களுடைய தேவ உருவோடு தோன்றினர். கண்ணனைக் கைகூப்பி வணங்கினர். வாய் விட்டுத் துதித்தனர். "வசுதேவன் மைந்தனே! எங்களுக்கு விடை அளிப்பாய். நாரதருடைய அருளால் உன் தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது. இன்றுதொட்டு எங்கள் வாக்கு உன் பெருமையைக் கூறவும், எங்கள் காது உன் புகழைக் கேட்கவும், எங்கள் கை உன் பூசையைச் செய்யவும், எங்கள் மனம் உன் தாள்களைச் சிந்தனை செய்யவும், எங்கள் தலை உன்னை வணங்கவும் உபயோகப்படட்டும்" என்று கண்ணனைத் தோத்திரம் செய்து விட்டு வட திசையை நோக்கிச் சென்றார்கள்.

மரம் விழுந்த சத்தத்தைக் கேட்டு, நந்தகோபன் முதலியோர் 'இதென்ன, இடி விழுந்ததா' என்று அஞ்சி அங்கு ஓடி வந்தனர். ஆனால் இரு மரங்களும்

✲ அருள் வாக்கு ✲

எல்லாச் சமூகங்களிலுள்ள ஸ்திரீகள் அவர்களின் கணவன்மார் அயல் பழக்கங்களினால் ஒரு சமயம் சமயாச்சாரங்களிலிருந்து வழுவினாலும் பண்டைக் காலத்துத் திலகவதியார் போலவும், மங்கையர்க்கரசியார் போலவும், ஈசனிடத்தில் சித்தத்தைச் செலுத்தித் தம் கணவன் உடன் பிறந்தவர் குழந்தைகள் அனைவரையும் நல்வழிப் படுத்த வேண்டும். இவ்விதமான நம் பெரியோர்களின் நல்வழிகளால் நமது சமயமும் சமூகமும் மேன்மேலும் க்ஷேமத்தை அடைய வேண்டும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

எவ்வாறு சாய்ந்தன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. உரலோடு கட்டுண்ட தாமோதரனைக் கண்டனர். மரம் விழுந்தது அபசகுனமோ என்று அஞ்சினர். அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கண்ணன் உரலை மரங்களுக்கிடையே இழுத்ததையும் அவை சாய்ந்து கீழே விழுந்ததையும் மரத்திலிருந்து மனிதர்கள் வெளி வந்ததைத் தாங்கள் கண்களால் கண்டதையும் கூறினார்கள். இடையர்கள் இந்த வரலாற்றை நம்பவில்லை. சிறுவர் பேச்சென்று தள்ளி விட்டார்கள். பூதனை இறந்ததை எண்ணிப் பார்த்த சிலருக்கு மட்டும் நடந்தது மர்மமாகத் தோன்றியது. தன்மகன் உரலை இழுத்துக் கொண்டு செல்வதைக் கண்ட நந்தன் நகைத்துக் கொண்டு கண்ணனின் கட்டை அவிழ்த்தான்.

* * *

ஆயர்பாடி மங்கையர்க்குக் கண்ணனிடம் அளவிலா அன்பு வளர்ந்தது. அவர்கள் ஆடச் சொல்லி ஆடுவார்; பாடச் சொல்லிப் பாடுவார்.

"பழம் வாங்கலையோ?" என்று ஒரு மாது தெரு வழியே கூவிக் கொண்டு சென்றாள். அனைவருக்கும் கோரிய பலத்தைக் கொடுக்கும் கண்ணன், கை நிறையத் தான்யம் எடுத்துக் கொண்டு பழம் வாங்கச் சென்றான். விரல்களின் இடுக்குகள் வழியாகத் தான்யம் சிந்தியது. கூடையிலிருந்து பழத்தை எடுத்து அந்த மாது கண்ணனுக்குக் கை நிறைய அளித்தாள். திரும்பவும் தன் கூடையைப் பார்த்தாள். கூடையில் பழம் இல்லை. நவரத்தினங்கள் நிரம்பி இருந்தன.

இவ்வாறு நாட்கள் கழிந்தன. ஆனால் ஆயர்பாடியில் அடிக்கடி அபசகுனங்கள் தோன்றுவதைக் குறித்து அங்கிருந்த முதியவர் சிந்திக்கலாயினர். அவர்களுள் உபநந்தன் என்பவன் அனைவரும் அவ்விடத்தை விட்டு வெளியேறுவதே நலம் என்று ஆலோசனை கூறினான். "நாம் காணும் சகுனங்கள் சிறு குழந்தைகளுக்குத் தீமை விளைவிப்பவை. ஏதோ நற்காலம், கண்ணன் பூதனையிடமிருந்து தப்பினான். அவன் மீது வண்டி விழாததும் ஹரியின் கிருபையே. ஆகாயத்திலிருந்து விழுந்த குழந்தை காயமொன்றும் படாதிருந்ததும் நாம் வழிபடும் தேவதைகளின் அருளாலே. இனிமேல் பெரிய சேதம் ஏதாவது வருவதற்குமுன் நாம் குழந்தைகளுடன் இவ்விடத்தை விட்டு அகல வேண்டும். அருகில் பிருந்தாவனம் என்ற காடு இருக்கிறது. பசுமை நிறைந்து, புல் பூண்டு பரந்து நமக்கும் நம் பசுக்களுக்கும் இருக்க வசதியான இடம். விரைவில் அங்கு செல்வோம்" என்றான்.

இந்த ஆலோசனையை மற்ற கோபர்கள் ஆமோதித்தார்கள். தங்கள் பண்டங்களை வண்டியில் ஏற்றினார்கள். வயோதிகர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் வண்டியில் அமரச் செய்தனர். மாடுகளை முதலில் ஓட்டிக் கொண்டு கொம்பு, பேரிகை முதலிய கருவிகள் ஒலிக்கப் பிருந்தாவனத்தை நோக்கி நடந்தார்கள். கழுத்தில் காசு மாலையுடன் துலங்கும் கோபிகள் கண்ணனின் லீலைகளைப் பாடிக் கொண்டு போயினர். யசோதையும் ரோகிணியும் ஒரு ரதத்தில் ஏறிக் கொண்டு இந்த கானத்தைக் கேட்டுக் களிப்புற்றார்கள்.

பிருந்தாவனத்தை அடைந்ததும் முதல் நாள் தமது மாட்டு வண்டிகளை இளம் பிறை உருவாய் வகுத்து வேலியிட்டு, அதற்குள் தம் பசுக்களை வைத்துக் காத்தனர்.

வனத்தையும் கோவர்த்தன மலையையும் அருகிலோடும் யமுனா நதியையும் கண்ணுற்ற கண்ணனும் பலராமனும் அடங்காத ஆனந்தம் அடைந்தார்கள். இவ்வாறு சில காலம் சென்றது. கண்ணனுக்கும் பலராமனுக்கும் கன்றுகளைக் காக்கும் வயது வந்தது. மற்றச் சிறுவருடன் குடியிருப்புக்கு அருகிலேயே இருவரும் கன்றுகளை மேய்த்து வந்தனர். சில சமயம் புல்லாங்குழல் வாசிப்பார்கள்; சில சமயம் கவண் கட்டிக் கல் எறிவார்கள்; காளை போல் வேடம் பூண்டு அலறுவார்கள். இல்லையேல் வேறு விலங்குகளைப் போல் பாசாங்கு செய்வார்கள்.

ஒருநாள் யமுனைக் கரையில் இவர்கள் கன்று மேய்த்துக் கொண்டிருக்கையில் கண்ணனையும் பலராமனையும் கொன்று விடுவதான நோக்கத்துடன் ஒரு அரக்கன் வந்தான். கன்று வேடம் பூண்டு கன்றோடு கன்றாய் மந்தையில் கலந்துகொண்டான். இதைக் கண்ணன் தெரிந்துகொண்டான். பலராமனைக் கூப்பிட்டுப் போலிக் கன்றைச் சுட்டிக் காட்டினான். ஒன்றும் அறியாதவன் போல் கண்ணன் அரக்கனை அண்டினான். பின் கால்களை இறுகப் பிடித்தான். தலைமீது சுற்றினான். ஓங்கி அருகில் இருந்த விளா மரத்தின் மீது எறிந்தான். அரக்கன் தன் உண்மை உருவெடுத்தான். உயிர் இழந்து உதிரும் விளாம்பழங்களுடன் பூமியில் விழுந்தான். கூடவிருந்த சிறுவர்கள் கைகொட்டி ஆரவாரித்தனர்.

கன்றை மேய்க்கக் காலையில் வெளியேறுங்கால், பகல் உணவை இருவரும் கையில் எடுத்துச் செல்வார்கள். ஒரு நாள் எல்லோரும் தத் தம் கன்றுகளை ஒரு குட்டையில் நீர் பருகச் செய்துவிட்டுத் தாமும் நீர் அருந்தினார்கள். அப்பொழுது அனைவரும் மலை போன்ற ஓர் உருவைத் தங்களுக்கு எதிரே கண்டு பயந்தார்கள். தோன்றியது பகன் என்ற அரக்கன். நாரை வேடம் பூண்டு வந்திருந்தான். திடீரென்று ஓடி வந்து கண்ணனை விழுங்கி விட்டான். மற்றச் சிறுவர்கள் உயிரற்ற புலனென அசைவற்றுத் திகைத்து நின்றனர். ஆனால் கண்ணன் அரக்கனுடைய உள்நாக்கை நெருப்பென எரிக்கவே, பொறுக்க முடியாமல் வெளியே தள்ளிவிட்டு, கோபாவேசத்துடன் அலகை நீட்டிக் கொண்டு பாய்ந்தான். கண்ணன் அலகைக் கையில் பிடித்துக் கொண்டு, வாழை நாரைக் கிழிப்பதைப் போல் கம்ஸனின் நண்பனான அந்த நாரை வேடம் பூண்ட அரக்கனை இரண்டாகக் கிழித்து விட்டான். கோபாலச் சிறுவர் இதைக் கண்டு மிக்க வியப்புற்றனர். பலராமனும் மற்றச் சிறுவர்களும் கண்ணனைக் கட்டித் தழுவிக் கொண்டனர். வீட்டுக்குச் சென்று நடந்ததை எடுத்துரைத்தார்கள். கோபரும் கோபியரும் கண்ணனின் திருவுருவைத் தாகத்தோடு பருகினார்கள். "இச்சிறுவனுக்கு எத்தனை எதிரிகள்! பார்க்கப்பயங்கரமாக இருப்பினும் அவர்கள் ஒருவராலும் இவனுக்குத் தீங்கிழைக்க முடியவில்லை. அவர்கள்தான் இறந்தனர். கர்கர் கூறியது தெளிவாய்த் தெரிகிறது" என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டனர்.

ஒருநாள் காலையில் கண்ணன் துயிலெழுந்து, கொம்பைஊதி மற்றச்சிறுவர்களை எழுப்பிக் காட்டுக்குப்போக அழைத்தான். ஆயிரக்கணக்கான கன்றுகளுடன் ஆயர்பாடிச் சிறுவர்கள் கவண், பிரம்பு, கொம்பு, புல்லாங்குழல் முதலியவைக



எடுத்துக் கொண்டுதிரளாய்ப் போயினர். கன்றுகளை மேய்க்க விட்டு விளையாட ஆரம்பித்தார்கள். கண்ணாடி மணி பூண்டு, மஞ்சாடி மாலை அணிந்து, துளிரும் மலரும் சூட்டி, மயில்பீலி தலையில் வைத்துக் கொண்டிருந்த அச்சிறுவர்கள் மனத்தைக் கவரும் அழகுடன் விளங்கினர். ஒருவர் மற்றொருவர் பண்டங்களை ஒளித்து வைப்பார். கண்டுபிடித்தால், எட்டி எறிந்து விடுவார். எட்ட இருப்பவர் இன்னும் தூரமாகத் தூக்கி எறிவார்கள். பண்டங்களின் உரிமையாளர் சினம் கொண்டு பின்னர் சிரித்துத் திரும்பக் கொடுப்பார். சிலர் ஊதுவார்; சிலர் வண்டுடன் போட்டியாய்ப் பாடுவார்; சிலர் குயிலோடு கொஞ்சுவார்; சிலர் பறவையின் நிழலோடு ஓடுவார்; சிலர் அன்னத்தின் அருகிலே ஒய்யார நடை போடுவார்; சிலர் நாரையைப் போல் தவம் இருப்பார்; சிலர் மயிலுடன் அசைந்தாடுவார்; சிலர் குரங்கின் வாலைப் பிடித்திழுப்பார்; பின்னர் குரங்கோடு மரம் ஏறுவார்; சிலர் குரங்குக்குக் கோணமுகம் காண்பித்து அவையோடு கிளை தாவுவார்; சிலர் தண்ணீரில் குதித்துத் தவளையெனத் துள்ளுவார்; சிலர் நிழலிடம் சினம் கொள்வார்; சிலர் எதிரொலியை ஏசுவார். புண்ணியங்கள் பல செய்த பயனாகப் பாலகர் பரமனுடன் இவ்வாறு விளையாடினர்.

அகன் என்று ஒரு அரக்கன்; பூதனையின் உடன்பிறந்தோன்; கம்ஸனால் ஏவப்பட்டு அங்கு வந்தான். தன்னுடன் பிறந்தவளைக் கொன்ற கண்ணனையும் அவன் தோழரையும் கொன்றுவிடுவதென்று திண்ணம் கொண்டான். இச்சிறுவரே என் முன்னோருக்கு எள்ளுக்கும் நீருக்கும் பதிலாகத் தர்ப்பணம் ஆவார் என்று தீர்மானித்தான். தன்னை ஒரு கொடிய மலைப் பாம்பாக மாற்றிக் கொண்டான். ஒரு யோஜனை நீளம், மலைபோல் மேனி, குகை போன்ற வாய், இவையோடு, வந்தவரை விழுங்குவதற்குப் பாதையில் கிடந்தான். கீழ் உதடு புவியைத் தொட்டிருந்தது. மேல் உதடு மேகத்துடன் கலந்திருந்தது. கோரைப் பற்கள் மலைச் சிகரங்களெனத் தோன்றின. திறந்தவாய் இருள் மூடி இருந்தது. நாக்கு ராஜவீதியைப்போல் தெரிந்தது. கண்கள் தீயெனத் திகழ்ந்தன. மூச்சு புயற்காற்றென அடித்தது. இந்த விந்தையைப் பார்த்த சிறுவர்கள் 'இதுவும் வனத்தின் இயற்கை அழகு' என்று எண்ணினார்கள். "நண்பர்களே! இக்காட்டின் அழகைப் பாருங்கள்! என்ன ஆச்சரியம்! மலைப்பாம்பின் வாயைப் போல் அமைந்திருக்கிறதே!" என்றான் ஒருவன். "உண்மையே. மாலைக் கதிரவனுடைய கிரணங்கள் கலந்த மேகம் சிவந்த வாயைப்போல் தோன்றுகிறது" என்றான் மற்றொருவன். "மலைச்சிகரம் பற்களைப் போல் காண்கிறது. குகை கடைவாயைப் போல் காட்சி அளிக்கிறது" என்றான் மூன்றாவது சிறுவன். "காட்டுத்தீ மூச்சைப்போல் வீசுகிறது" என்றான் ஐந்தாவது சிறுவன். இவ்விதம் பேசிக் களித்துக் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருந்த சிறுவர்களுக்குக் கேடு வராது காப்பாற்ற வேண்டுமென்று கண்ணன் விரும்பினான். சிறுவர்களும் கன்றுகளும் பாதையென்று தெரிந்த நாக்கின்மேல் நடந்து அரக்கனின் வாய்க்குள் புகுந்து விட்டனர். ஆனால் அரக்கன் அவர்களை விழுங்கவில்லை. கண்ணனுக்காகக் காத்திருந்தான். அகாசுரனுக்கு அன்பர்கள் இரையாவதைக் கண்ணன் கண்ணுற்றான். அவன் மனம் கசிந்தது. விதியின் வேடிக்கையை எண்ணித் தானும் வியந்தான். அரக்கன் இறக்கவும் பாலகரும் கன்றினமும் இருக்கவும் வேண்டி ஒரு தந்திரம் செய்தான். தானும் பாம்பின் வாய்க்குள் புகுந்தான்.

அச்சமயம் விண்ணவர், "ஐயோ!" என்று அச்சமுற்றனர். அரக்கர் களித்துக் கூத்தாடினர்.

அரக்கன் வாயில் கண்ணன் வண்ணம் மிக எய்தி வளர்ந்தான். அரக்கனின் தொண்டை அடைந்து போயிற்று. கண் பிதுங்கியது. மூச்சுத் திணறி இங்குமங்குமாய்ப் புரண்டான். தலை பிளந்து உயிர் வெளியேறியது. கண்ணன் தனது பார்வையினால் அரக்கன் வயிற்றில் உயிர் இழந்து கிடந்த கன்றுகளையும் சிறுவர்களையும் பிழைப்பித்தான். அனைவரும் பாம்பின் வாய் வழியாக வெளியேறினார்கள்.

அப்பொழுது ஒரு ஜோதியானது அந்த மலைப்பாம்பின் உடலினின்று கிளம்பியது. சிறிது நேரம் தோன்றித் திடீரென்று கண்ணனோடு கலந்து கொண்டது. அரக்கன் அழிந்ததை விண்ணவர் திருவிழாவாகக் கொண்டாடினார்கள். அப்ஸரர் ஆட, கந்தர்வர் பாட, வானத்தில் மலர்மாரி பொழிய, அந்தணர் மறை ஓத, எங்கும் ஒரே ஆரவாரமாக இருந்தது. தன்னுலகத்துக்கருகே நடக்கும் இந்த வைபவத்தைப் பார்த்துப் பிரமன் காரணம் தெரிந்து கொண்டு தான் நேராகவே பிருந்தாவனம் வந்து ஹரியின் பெருமையைக் கண்டு வியந்தான். மலைப்பாம்பின் பெருஞ் சடலம் வெகுகாலம் ஆயர்பாடி மக்களுக்கு விளையாடும் இடமாக உபயோகமாயிற்று.

வட்டமேஜை

நிலப் பிரச்னை!

"விவாதிக்க வேண்டாம்" என்ற சென்ற வாரக் "கல்கி" தலையங்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வருவதும் சிந்திக்காமல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதுமான நிலச் சீர்திருத்தங்களின் விபரீதம் பற்றி விவரமாக எடுத்துரைக்கிறது.

ஜனநாயகம் பொறுப்பான பாதையில் செல்ல இந்த வழி ஏதுவாகாது என்பதை ஒப்பற்ற முறையில் தெரிவித்துள்ளது.

நிலத்தோடு ஒட்டி வாழ்பவர்களை நிலத் தொடர்பிலிருந்து பிரித்துக் "கூட்டுறவு" என்ற கூடாரத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை அடைத்து விவசாயத்தை மேற்கொள்ளக் கூறும் தவற்றைத் தகுந்த முறையில் மக்கள் சபை அங்கத்தினர் மசானி அவர்கள் அவ்வப்போது வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

ஆகவே 'விவசாய நாடு' எனக் கூறும் நம் நாட்டிலே நாட்டின் நாடியான நிலப் பிரச்னையைப் புதுப்பிக்கவும் புத்துயிர் அளிக்கவும் கட்சிச் சார்பற்ற மனப்பான்மையே வேண்டும்.

கோவை
11-5-59 ஒய். வி. விஸ்வேஸ்வரன்

வழிகாட்டி

'கல்கி' 3-5-59 இதழில் 'யாவருக்கும் கல்வி' என்ற தலைப்பின் கீழ் அமைந்த அறிவுரையும் ஆச்சாரிய சுவாமிகளின் ஆதாரக் கல்வித் தத்துவ அறவுரையும் ஒருங்கே கண்டேன். அறமும் அறிவும் இருபெரும் இருளகற்றும் ஜோதிகளாய் நின்று, சிறந்ததோர் கல்விச் சீரமைப்புக்காக முயன்று கொண்டிருக்கும் நம் அரசினருக்கு வழிகாட்டும்.

ஜனநாயக அமைப்பில் ஒவ்வொரு தனி மனிதனும் அறிவு பெற்று ஆட்சிப் பொறுப்பில் அக்கறையுள்ளவனாக இருக்க வேண்டும். அதற்கான அறிவைத் தரும் கல்வி இன்றில்லை யென்பது வருந்தத் தக்க உண்மையே. வெறும் ஏட்டுக் கல்வி இன்று நம்மிடையே 'படித்தவர்கள்' என்ற புதிய சமூகத்தை உருவாக்கியிருக்கிறது. இந்தப் 'படித்தவர்கள்' உடல் உழைப்புக்கு மதிப்புத் தருவதில்லை என்பதும் உண்மை. ஆண்டு ஒன்றுக்கு நூற்றுக்கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும் கல்வி நிலையங்களிலிருந்து வெளியேறி வேலை தேடும் இளைஞர்கள் எந்த அளவுக்கு நாட்டின் செல்வ உற்பத்திப் பணியில் பங்கு பெறுவார்கள் என்பது நம்முன் உள்ள கேள்வி.

"மனச் சுதந்திரம் பெறுதலே கல்வியின் நோக்கம்" என்ற கவி தாகூரின் கூற்றும் ஆச்சாரிய சுவாமிகளின் கல்வி பற்றிய உரிமை விளக்கமும் ஒருமித்துவிளங்குவதைக் காண்கிறோம். கற்ற கல்வியால் நம்மை நாமே காத்துக்கொள்ள முடியாத போது கொத்தரும் தச்சருமான படியாதவர்கள் தொழில் செய்து உரிமையோடு வாழ்கிறார்கள் என்பதை யார் மறுக்க முடியும்?

இன்றுள்ள கல்வித் திட்டத்தில் இந்த அடிப்படைக் களங்கத்தை அகற்றாமல் படித்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது, சிறந்த ஜனநாயகத்துக்கு ஒவ்வாத மன அடிமைத்தனத்தை வளர்ப்பது போலாகும்.

சுப்புலாபுரம்
1-5-59 எஸ். சுப்பையா

விலை குறைய வழி

எங்கள் ஊர் திருச்சி மாவட்டத்திலேயே அதிக நெல்விளைவுக்குப் பெயர் எடுத்த ஊர்.

தற்சமயம் அரசாங்கத்தின் உணவு தான்யக் கட்டுப்பாட்டின் காரணமாகச் சரிவர மற்ற மாவட்டத்திலிருந்து, குறிப்பாகத் தஞ்சை, தென்னாற்காட்டிலிருந்து, நெல் கொண்டுவர முடியவில்லை. எல்லாம் அரசாங்க அலுவலர்களை நம்பியே ஆக வேண்டியிருக்கிறது. சர்க்கார் கொள்முதல் விலைக்கு நெல் போட மேற்கூறிய மாவட்டத்தில் ஒரு பண்ணையாரும் இல்லை. அதிக விலை கொடுத்து வாங்கி வந்தாலும் அதில் முக்கால் பங்கு அரிசி, அரசாங்க உத்தரவு பெற்றவர்களுக்கு அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். மீதியை நமது ஊருக்கு விற்றுக் கொள்ள வேண்டும். இதுமாதிரி சில பண வசதியுள்ளவர்கள் தொழில் செய்கிறார்கள். பணமில்லாதவர்கள் மிகவும் வறுமையில் வாடுகிறார்கள். அரிசி உற்பத்திக் குறைவால் விலையும் ஏறி விட்டது; உற்பத்தியில் பாதி சர்க்கார் உத்தரவுப்படி கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொடுத்தால் அதுவும்

பூனையார் பொன்மொழி

"பேசாத எம். பி.க்கு எந்தப் பாஷை வந்தால் என்ன?"



[பார்லிமெண்டில், ஆட்சிமொழி சர்ச்சை நடக்கும் போதெல்லாம் பல எம். பி.க்கள் மௌனமாயிருந்து வருகிறார்கள்.]

இருப்புக்குத்தான் போய்விடுகிறது. வெளியில் விற்பனை இருந்தால்தானே விலை குறையும்?

உணவு மண்டலத்தை ரத்து செய்து கட்டுப்பாட்டையும் ரத்து செய்துவிட்டு, மாவட்டங்கள் எல்லாவற்றிலும் போக வர ஒத்துழைத்தால்தான் நம்மிடையே ஒத்துழைப்பு நிகழும். இல்லையேல் மாவட்டத்துக்கு மாவட்டம் போட்டி ஏற்பட்டு நம் நாட்டில் ஒத்துழைப்பு இல்லாமல் சீர் கெடும்.

முன்பு அரிசிப் பங்கீடு இருந்ததை மேலிடத்து உத்தரவையும் எதிர்பாராது எடுத்த ராஜாஜி அவர்கள் எண்ணத்தை இப்பொழுதுதான் உணர வேண்டியிருக்கிறது. பங்கீடு எடுத்தவுடன் விலை கூடின. அதற்கு, இருப்பு தான்யம் வைக்கக் கூடாது என்றும் பாங்கில் பணம் கடன் வாங்கக் கூடாது என்றும் தடை போட்டார்கள். விலையும் அரிசி மூட்டை 19 ரூபாய்க்குக் குறைந்து வந்தது. மறு ஆட்சி ஏறினவர்கள் மேற்கண்ட அமுலைச் செலுத்தவில்லை. விலை ஏறி விட்டது.

மணச்சநல்லூர்
11-5-59


ந. கோவிந்தன்

கண் திறக்குமா?

தற்போதைய சென்னை சர்க்கார் ஒரு புறம் துண்டுவிழும் பட்ஜெட்டைத் தயார் செய்து கொண்டு, மற்றொருபுறம் சர்க்காருக்கு நல்ல வருமானம் வரும் தொழில்கள் நடைபெறுவண்ணம் சட்டங்கள் போட்டு வருகிறார்கள். உதாரணமாக, கடந்த மாதம் "டூரிங் சினிமா"க்களின் விதிகளில் புதிய விதியை (103 A.) சேர்த்து அத்தொழில் நடத்தி வரும் சுமார் 900 நபர்களில், 110 நபர்களின் பல லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்களைத் தூங்க வைத்திருப்பதுடன், மாதம் ஒன்றுக்குச் சுமார் ஒரு லக்ஷத்து ஐம்பதாயிரம் ரூபாய் சர்க்காருக்கும், ஸ்தல நகரசபை, பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கிடைக்கும் "தமாஷா வரி" வருமானத்தையும் போக்கடித்திருக்கிறார்கள்.

1937-ம் வருஷத்திய "சினிமோடோகிராபிக்" சட்டப்படியும் அதன் பிறகு அவ்வப்போது உண்டுபண்ணப்பட்ட, 'அமென்ட்மென்ட்'களின்படியும், "ஒரு டூரிங் சினிமாவை ஓர் இடத்தில் அமைத்தால் சுற்றிலும் நான்குபுறமும் 20 கஜம் (60 அடி) வெட்டவெளி இருக்க வேண்டும்" என்றிருந்தது. இவ்வளவு பரப்புள்ள இடமே ஊருக்கு வெகு தொலைவில்தான் கிடைத்து வந்தது. இருந்தபோதிலும் வேறு விதியின்றி டூரிங் சினிமாக்காரர்கள் போட்டு நடத்தி வந்தார்கள்.

அப்படி இருக்க, இப்பொழுது விதித்திருக்கும் புதிய சட்டப்படி கொட்டகையைச் சுற்றி 200 கெஜம் அதாவது 600 அடி வெட்டவெளி வேண்டும். ஒரு டூரிங் சினிமாவை அமைத்திருக்கும் இடத்தி



காஞ்சியில் சங்கர ஜயந்தி அதி விமரிசையாக நடைபெற்றது.

லிருந்து ஒவ்வொரு பக்கமும் சுமார் ஒரு பர்லாங்கு வெட்டவெளி வீதம் நான்கு பக்கங்களிலும் காலி இடம் இருக்க வேண்டும். இதற்குச் சுமார் பதினைந்து ஏக்கர் நிலமாவது வேண்டும். பயிர் செய்யாத கரம்பு பூமிகள் இவ்வளவு விஸ்தீரணத்தில் ஒவ்வொரு ஊரிலும் கிடைக்குமா? 1½ ஏக்கர் விஸ்தீரணத்தில் சினிமா நடத்த அனுமதித்திருந்த பழைய சட்டத்தை 15 ஏக்கரில் நடத்த வேண்டும் என்று திருத்த என்ன அவசியம் வந்தது? ஒருகால் ஆட்சியாளர்களின் இன்றைய ஆட்சி செலுத்தும் முறையினால் இவ்வளவு பரந்த பூமி தரிசாக ஊருக்கு ஊர் இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?

திருக்கோவலூர்
22-4-59

ரா. பழநி

அரசியல் நோக்கம்

விவசாயத் துறையில் 'கூட்டுறவுப் பண்ணை கட்டாயம் இருக்காது, அரசியல் நோக்கமும் இல்லை' என்று பண்டித நேரு கூறுகிறார். ஆனால் மற்றொரு மந்திரி "கம்யூனிஸ்டுகளை ஒடுக்க இதுவே சிறந்த வழி" என்று கூறி ரகசியத்தை அம்பலப்படுத்தி விட்டார்.

ஆட்சியைப் பற்றிக் கொண்டிருக்க எதுவும் செய்யலாமென்ற மனோபாவம் நாட்டில் வளர்ந்து விட்டது.

ஒரிஸ்ஸாவில் மாஜி சமஸ்தானாதிபதிகளும் மாஜி ஜமீன்தார்களும் கூழமியுள்ள 'கண தந்திரபரிஷத்'தின் கூட்டுறவைக் காங்கிரஸ் நாடுவது என்னநேர்மை? காந்திஜி இருந்தால் இதை ஒப்புக் கொள்வாரா? கூட்டுறவுப் பண்ணையின் அடிப்படை நோக்கம் அரசியல் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள் கூட இன்று உண்டா?

மாயூரம்
24-4-59

மு. வைத்தியநாதன்

அவ்வையின் வாக்கு

சமீபத்தில் நமது பிரதமர் நேருஜி, தமிழ் நாட்டின் விஜயத்தின்போது, "வயல்களில் இருக்கிற வரப்புகளை யெல்லாம் களைந்துவிட்டால் பல ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கிடைக்கும், அதனால் விளைச்சல் அதிகரிக்கும்" என்றார்.

நேருஜியின் இந்தப் பேச்சைக் கேட்கும்போது அவ்வையாரின் ஒரு சிறு பாடல் ஞாபகத்துக்கு வருகிறது.

அவ்வைப் பாட்டி சோழ மன்னனைப் பாராட்டும் எண்ணத்துடன் அவனைப் பார்த்து "வரப்புயர..." என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள். மன்னனுக்கு அதன் பொருள் விளங்காததால் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டான். பிறகு ஔவையாரின் மூலமே அதன் உள் அர்த்தத்தை உணர்ந்தபோது வெட்கித் தலைகுனிந்தான்.

"வரப்புயர நீருயரும்; நீருயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்; குடி உயரக்
கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயரும்"

இதை உணராத நேருஜி 'வரப்பையெல்லாம் வெட்டிவிட வேண்டும்' என்றால் அதை என்னவென்று சொல்வது?

தி. நகர்
26-4-59

டி. எஸ். சங்கரன்

கோடை காலத்தில் ராஜ நடை!



கோடை காலத்தில் நீண்ட
நேரம் களைப்பின்றி இருக்க பாட்டா
தயாரித்துள்ள காற்றோட்டம் மிகுந்த
செருப்புக்கள்தான் எல்லாவகை
யிலும் ஏற்றவை. அணிந்தவுட
னேயே குளுமையாகவும் இலேசாக
வும் வசதி மிக்கதாகவும் அவை
இருப்பதை உணர்வீர்கள்.

Bata

வெளியிடுவோர் : பாட்டா ஷூ கம்பெனி பிரைவேட் லிட்.

கல்யாணிக்குக் கல்யாணம்

கார்கள் புதுப் புது மாடல்களில் வருகின்றன; கட்டடங்கள் புதுப் புது மாதிரியில் எழும்புகின்றன; உடைகள் புதுப் புதுவிதங்களில் தயாரிக்கப் படுகின்றன; புடவைகளில் ஆயிரம் ஆயிரம் தினுசுகள் வருகின்றன. ஆனால் ஐயகோ! நம் தமிழ்ப் படங்கள் மட்டும் இன்னும் பழைய கதியிலேயே செல்லுவதன் காரணம் என்னவோ!

மனோகர் பிக்சர்ஸ் தயாரிப்பான "கல்யாணிக்குக் கல்யாணம்" பார்த்தேன். பாலையா, தங்கவேலு, எஸ். எஸ். ராஜேந்திரன், மைனாவதி எல்லாரும் நடித்திருக்கிறார்கள். படத்தில் எதுவும் புதிய கருத்தாகத்தான் இல்லையே! நிகழ்ச்சிகளையாவது கொஞ்சம் மாற்றியிருக்கக் கூடாதா? அதுவும் இல்லை.

பட்டிக்காட்டுக் கல்யாணிக்கும் பட்டணத்து அத்தான் சதாசிவத்துக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகிறது. சதாசிவத்தின் தந்தை திருப்புகழ் குமரேசம் பத்தாயிரம் ரூபாய் நகையும், பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணையும் தர வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார். அதற்குக் கல்யாணியின் தாயார் சம்மதிக்கிறாள். அவள் பணம் பண்ணையாரிடம் இருக்கிறது. பெண் பித்தரான பண்ணையாருக்குக் கல்யாணி மீது ஒரு கண். கல்யாணியின் தமையன் சுந்தரம் வந்து பணம் கேட்டபோது கொஞ்சம் கொடுத்து அனுப்பி விடுகிறார். முழுப் பணமும் கிடைக்காத ஏமாற்றத்தில் சுந்தரம் தாயாரிடம் போகாமல் சென்னையில் குதிரைப் பந்தயத்தில் கைப் பணத்தையெல்லாம் இழந்து, ஒரு பணக்காரப் பெண்ணின் காதலை அடைந்து தாயாருக்குத் தெரியாமல் அவளை மணமும் செய்து கொள்கிறான். போலி நகைகள் காரணமாகக் கல்யாணியின் வாழ்வு பாழாகிறது.

படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களின் ஆர்வமும், நல்லெண்ணமும், அநுதாபமும் பாழாகி விடுகின்றன. சொல்லி வைத்தாற் போல் கல்யாணியின் கண்கள் தீபாவளி வாணத்தில் பார்வையற்றுப் போகின்றன. பிறகு கடைசியில் பார்வை திரும்பி விடுகிறது. (ஆனால் நம் ஆர்வம் திரும்பவில்லை!)

எஸ். எஸ். ராஜேந்திரன் ஒரே ஆவேசமாக நடித்திருக்கிறார். கதை அழுத்தமாயில்லாததால், படத்தில் அவர் நடித்திருப்பதாகவே தெரியவில்லை. மிராசுதாரைப் பழி வாங்கும் கட்டத்தில் அவருடைய வழக்கமான ஆட்டபாட்டங்களைக் காண முடிகிறது. கல்யாணியாக வரும் மைனாவதி அழ வேண்டிய இடத்தில் அழுது, சிரிக்க வேண்டிய இடத்தில் சிரித்து நன்றாய் நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தில் பாலையாவும், தங்கவேலுவும் மட்டும் இல்லையென்றால் நான் பாதிப் படத்தில் எழுந்து வந்திருப்பேன். திருப்புகழ் குமரேசமாக வரும் பாலையாவின் நடிப்பு பிரமாதம். அவர் மாப்பிள்ளையாக வந்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் தங்கவேலு அபாரமாக நடித்திருக்கிறார். அவர் அடிக்கும் ஹாஸ்யக் கொட்டங்கள் பலே ஜோர்!

கல்யாணியின் கல்யாணத்தில் நடனமாடிய பரதம் பட்டம்மாளுக்குக் கல்யாணியின் கல்வாழ்வில் திடீரென்று அக்கறை பிறந்து கடைசி வரையில் அர்த்தம் இல்லாமல் அவளுக்காகப் பாடுபடுவது நம் தமிழ்ப் படங்களில் மட்டுமே காணக்கூடிய அதிசயம்!

திருப்புகழ் குமரேசத்துக்கு நல்லறிவு உண்டாக்குவதற்காக இடைவேளைக்குப் பிறகு நீட்டப்படும் காட்சிகள் நம்மைச் சிறிதும் ஈவிரக்கமின்றி வதைக்கின்றன.

கல்யாணியின் தம்பி மணியின் பாகம் நல்லபடியாகப் பயன்படுத்தப் படவில்லை. சிறு பையன் வந்து சிரமப்பட்டால் படத்தில் உருக்கம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் படாதிபதிகள். திறமையாகக் கையாண்டால்தான் பையன் பாத்திரங்கள் சோபிக்கும். இல்லையென்றால், படத்தின் உருக்கத்தோடு தியேட்டர் நெருக்கமும் போய்விடும்!

கல்யாணிக்குக் கல்யாணம் தமிழ்ப் படங்களுக்கு ஒரு திருஷ்டி பரிகாரம்.





அதாலத்

கல்லூரி மாணவன் ராஜேந்திரனும், கல்லூரி மாணவி நிர்மலாவும் காதலிக்கின்றனர். ராஜேந்திரன் பணக்கார வாலிபன், நிர்மலா ஏழைப் பெண். மாமியின் வீட்டில் தாயாருடன் அவதிப்பட்டுக் கொண்டு படிக்கிறாள்; மாமியின் கொடுமை பொறுக்க முடியாமல் வேலை தேடுகையில் வில்லனுடைய சங்கீத வித்யாலயத்தில் நல்ல சம்பளத்துடன் அவளுக்கு வேலை கிடைக்கிறது. பிறகு அது 'சிவப்பு விளக்கு'ப் பகுதி என்பது அவளுக்குத் தெரிந்து தப்பியோடி அதிர்ஷ்ட வசமாகக் காதலன் இல்லத்தை அடைகிறாள். அங்கு அவர்கள் இன்பம் நீடிக்கவில்லை. காதலன் இங்கிலாந்து செல்கிறான். காதலின் பலனாகக் குழந்தையும், அதன் பரிசாகக் கெட்ட பெயரும் கிடைக்கின்றன, நிர்மலாவுக்கு.

சாதாரணமாகக் கதாநாயகனுக்காகவும், கதாநாயகிக்காகவும்தான் யாருமே படம் பார்ப்பது வழக்கம்.

அவர்கள் இருவருடைய சுக துக்கங்களையும் தங்களுடைய சுக துக்கங்களாகவே பாவித்துக் கண்ணீர் விட்டுக் கலங்கியும், ஆனந்தக் கண்ணீர் சொரிந்தும் ரஸிகர்கள் அநுபவிப்பார்கள். ஆனால் "அதாலத்" படம் பார்ப்பவர்கள் வில்லனுக்காகவும் அவனிடம் கதாநாயகி படும் துன்பங்களுக்காகவுமே பார்க்க வேண்டும். இடைவேளைக்குப் பிறகுதான் படம் களை கட்டுகிறது. ஆரம்பக் காட்சிகளில் களை எடுக்க வேண்டிய காட்சிகள் நிறைய இருக்கின்றன.

தயங்கித் திணறித் திக்கிக் கொண்டு செல்லும் படத்தின் முற்பகுதி இடைவேளைக்குப் பிறகுதான் ஓட ஆரம்பிக்கிறது. படம் முழுவதும் வில்லனின் கொடுமைச் செயல்கள் இமையோடிப் பார்ப்பவர்களின் ஆவலைப் படுவேகத்தில் தூண்டி விடுகின்றன.

இந்தப் படத்தில் நர்கிஸைப் பல தோற்றங்களில் காண முடிகிறது. கல்லூரி மாணவியாக, நடன நங்கையாக, வீட்டு வேலைகள் செய்யும் பெண்ணாக, நர்ஸாக, அன்புத் தாயாக, வில்லனை வீழ்த்தும் வீராங்கனையாக, கடைசியில் மாசு நீங்கிய மாதுசிரோமணியாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நர்கிஸ் பொங்கும் உணர்ச்சியுடன் மிக நன்றாய் நடித்திருக்கிறார்.

"மதர் இந்தியா"வுக்குப் பிறகு நர்கிஸ் இந்தப் படத்தில்தான் பிரமாதமாக நடித்திருக்கிறார் என்பது படம் பார்ப்பவர்களின் ஒருமுகமான அபிப்பிராயம்.

அதேமாதிரி, வில்லனாக வரும் பிரான் பல தோற்றங்களில் வந்து படம் முழுவதும் நிறைந்து, பார்ப்பவர் உள்ளங்களிலும் தம் சிறந்த நடிப்பினால் நிறைந்து விடுகிறார். வில்லன் இல்லை என்றால் "அதாலத்" படமே இல்லை என்று சொல்லிவிடலாம்.

ராஜேந்திரனாகப் பிரதீப் குமார் வருகிறார். காதல் காட்சிகளில் சக்கைப்போடு போடும் அவர், கடைசியில் காதலியை இழந்து தவித்தபோதும், நீதி மன்றத்தில் காதலிக்காக வாதாடிய போதும் அவ்வளவாக நன்றாய் நடிக்கவில்லை.


எல்லாப் பாடல்களும் நன்றாயிருக்கின்றன என்று சொல்ல முடியாது. "உன்கோ யஹ் சிகாயத்ஹை கி ஹம் குச் நஹீ கஹ்தே" என்ற பாட்டு படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் வருகிறது. செவியிலும் நிறைந்து உள்ளத்திலும் உறைந்து விடும் உருக்கமான பாட்டு.

நர்கிஸின் முகபாவங்கள் பிற்பகுதியில் பிரமாதமாகப் படமாக்கப் பட்டிருக்கின்றன. 'சிவப்பு விளக்கு'ப் பகுதியில் சிக்கிய அன்னை உள்ளத்தில் வேதனை குமுறப் பலர் முன் பாடும் பொழுது, அவளது சிறு குழந்தை அங்கு வந்து பாட்டுக்கேற்ற வகையில் தாளம் போடும் காட்சி நன்றாயிருக்கிறது. அப்பொழுது குழந்தையைக் கண்டு மகிழ வேண்டிய அன்னை பலரது குத்தல் பேச்சுக்கு இலக்காகித் தன் வேதனையால் துடிக்கிறாள். நர்கிஸின் நடிப்பு இத்தகைய இடங்களில் உள்ளத்தைத் தொடுகிறது.

நிர்மலாவின் மகன் வேறொருத்தியிடம் வளர்ந்து வக்கீலாகிறான். தாயும் மகனும் நீதி மன்றத்தில் சந்திக்கும் காட்சியிலிருந்து 'சொல்லி வைத்த மாதிரி' காட்சிகள் நிறைய வருகின்றன. நீதி மன்றத்தில் நடக்கும் விசாரணை வெறும் நாடக பாணியில் அமைந்து சுவை குன்றச் செய்கிறது.

ஒரு பெண் திக்கற்றுப் போய் விட்டால் எத்தனை வேதனையை அவள் அநுபவிக்க நேருகிறது என்பதைப் பார்ப்பவர்களின் உள்ளங்களில் பதியும் வண்ணம் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது பயர்ஸ்டோன்



. . . நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்

ஏனென்றால் — உலகத்தின் தலைசிறந்த மோட்டாரோட்டப் பந்தயங்களில், ஒரு டயர் கூட பழுதுபடாமல், ஆபத்தான நெளிவு சுளிவுகளுக்கும் அசுர அதிர்ச்சிகளுக்கும் கடுங் கொதிப்புக்கும் ஈடுகொடுத்து பயர்ஸ்டோன் டயர்கள் தமது பாதுகாப்புத் தன்மையை ஆண்டுதோறும் நிரூபித்து வருகின்றன. உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பவை பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும் ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்புத் தரும் அம்சங்கள் பொருந்தி யிருக்கின்றன. பயர்ஸ்டோன் டயர்கள் அளிக்கும் சிறந்த பாதுகாப்புச் செயலில் நிரூபிக்கப்பட்டது.

ஸவுத் கரோலினாவிலுள்ள டார்லிங்க்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒன்பதாம் வருடாந்திய 500 மைல் மோட்டாரோட்டப் பந்தயத்தில் முதன்மையாக வெற்றிபெற்றவரான க்ளென் ராபர்ட்ஸ், அப் பந்தய ஓட்டத்தில் 121 டிகிரி உஷ்ணத்தை எதிர்த்து நிற்க வேண்டி யிருந்த பயர்ஸ்டோன் டயர்களே தமது அற்புத சாதனைக்கு அடிகோலியதென்று கூறுகிறார்.




Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

டியூப் இல்லாதது அல்லது டியூப்புள்ள





கால்கேட் குளோரோபில்
ஈறுகளை பலப்படுத்துகிறது!
COLGATE
COLGATE
CHLOROPHYLL TOOTH PASTE
வேறு எந்த பற்பசையிலும்
இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!
CTPA/6/7



ஒன்றல்ல 17 மயக்கும் மணங்கள்
உங்களுக்கு கிறுகிறுப்பும்
புளகாங்கிதமும் தரும்!
வெறியூட்டும் 17 ஸெண்டுகளின்
இந்திரஜாலக் கலவை சேர்ந்த பாமாலிவ்
உண்மையில் உயர்ந்த டால்க்...
வீட்டிலுள்ள எல்லோருக்கும்...
குழந்தைக்கும் கூட!
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
பாமாலிவ்
டால்கம் டீ லக்ஸ்
PTD/G/3

அத்தியாயம் 7


ரகசியச் சந்திப்பு

பயம், வெட்கம், கோபம், ஆத்திரம் எல்லாம் கலக்கத் திடுக்கிட்டு எழுந்து நின்றனர் சுந்தரமும், மாலாவும். கிட்டத்தட்ட ஒன்றரை வருஷங்களாக அநேகமாக மாதத்தில் இரண்டு மூன்று நாட்களாவது அவர்கள் இந்த ஆற்றங்கரைப் படித்துறையில் சந்தித்துக் கொண்டது உண்டு. பொழுதுபோவதே தெரியாமல் ஊடலும் கூடலுமாகப் பேசிச் சிரித்து, விளையாடிக் களித்ததும் உண்டு. ஆனால் இன்றுதான் அவர்கள் மூன்றாவது நபர் ஒருவர் கண்களில் பட்டிருக்கிறார்கள். அது வேறு யாராவது வெளி ஆட்களாக இருந்திருக்கக் கூடாதா? சாட்சாத் சுந்தரத்தின் அம்மாவுக்கா முதன் முதலில் இவர்களுடைய ரகசியச் சந்திப்பு அம்பலமாக வேண்டும்?

மாலாவிடம் தன் மனத்தைப் பறிகொடுத்தபோது, இப்படிப்பட்ட ரகசியச் சந்திப்பிலே தங்கள் காலத்தை ஓட்டிவிட வேண்டுமென்று சுந்தரம் எண்ணியிருக்கவில்லை; மாலாவும் அப்படி எண்ணியிருக்கவில்லை. இலை மறைவு காய்மறைவாக இருக்கும் இந்தச் சந்திப்பு ஒருநாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் தற்செயலாக யார் கண்களிலாவது படும். கிராமாந்திர மாதலால் அந்தச் செய்தி உடனே காட்டுத் தீ போல் பரவும். தங்கள் வீட்டுப் பெரியவர்களின் செவிக்கும் எட்டும். அவர்கள் தங்களைக் கூப்பிட்டுக் கேட்பார்கள்; இல்லை, இன்னும் புத்திசாலிகளாக இருந்தால் கேட்காமலே கலியாணத்துக்கு ஏற்பாடு செய்து விடுவார்கள் என்பதுதான் அவர்கள் எண்ணமாக இருந்தது. ஆனால் விபரீதம்போல் கடந்த ஒன்றரை வருஷங்களாக ஓர் ஈ—காகங்கூட அவர்கள் ரகசியச் சந்திப்பைக் காணாதிருந்தது மட்டுமில்லை; இன்று நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஒருத்தியே அதைப் பார்த்து விடும்படி ஆகிவிட்டது!

சாதாரணமாக, மாலாவும் சுந்தரமும் வெளிப்படையாக ஒருவரோடு மற்றவர் பேசாதவர்களோ, பழகாதவர்களோ அன்று. நிறையப் பேசியிருந்தார்கள்; பழகியிருந்தார்கள். எத்தனையோ தடவைகள் புஷ்பவனம்—மரகதத்தம்மாள் முன்னும், தைலத்தம்மாள்—சச்சிதானந்தம் முன்னும் அவர்கள் ஒருவரை மற்றவர் கேலி செய்து கொண்டதும் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டதும் கூட உண்டு. ஆகையால் தாங்கள் இப்படி ஆற்றங்கரையில் சந்தித்திருந்த போதிலும், எட்ட நின்றோ, அல்லது கிட்ட நின்றோ பேசிக் கொண்டிருந்தபோது தன் தாயார் பார்த்திருந்தால் சுந்தரம் இப்படிக் கலங்கிப் போயிருக்க மாட்டான். ஆனால் இப்பொழுது அவர்கள் எட்டவோ கிட்டவோ நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்?

ஒரு தடவை மாலா சுந்தரத்தின் வீட்டுக்கு வந்திருந்தபோது தன்னை ஏதோ கேலி செய்தாளென்று அவன் அவள் பின்னலைப் பிடித்து இழுத்துவிட்டான். அன்று மரகதத்தம்மாள் திட்டிய திட்டு! "எருமை மாடுபோல் வயசு ஆச்சேடா! இன்ஜினியருக்கு வேறே படிக்கிறியேடா. அறிவு இருக்காடா உனக்கு? அது வயசு வந்த பொண்ணு. மூணாம் மனுசர் வீட்டுப் பொண்ணு. தொட்டுப் பின்னலைப் புடிச்சு இழுத்தியேடா! அவ வீட்டுக்காரங்க யாராச்சும் பார்த்திருந்தாங்கன்னா எங்க மானம் மரியாதை என்னடா ஆகும்? இனிமே அவளைத் தொடு; கையை ஒடிச்சுப்புடுறேன், ஒடிச்சு!" என்று சுமார் அரை மணி நேரம் அவனைப் பிய்த்துக் கட்டி விட்டாள். "ஐயோ! அன்று வேடிக்கையாக, அதுவும் அவள் முன்னாலேயே வெறுமனே தலைப் பின்னலைப் பிடித்து இழுத்ததற்கே அத்தனை பாடுபடுத்தியவள் இன்று யாருமில்லாத தனியிடத்தில் நாங்கள் இவ்வளவு நெருங்கியிருந்ததைப் பார்த்துவிட்டாளே! என்ன பிரளயம் ஏற்படப்போகிறதோ?' என்று அவன் உள்ளூறக் கலங்கினான்.



இது சுந்தரத்துக்கு ஏற்பட்ட கலக்கத்தில் ஒரு பாதிதான். இன்னொரு விதமான கலக்கமும் அவனுக்கு அப்பொழுது ஏற்பட்டது. அன்றையச் சந்திப்பின் கடைசிக் கட்டத்தில் மாலா அவனுடைய உள்ளத்து நரம்பைச் சுண்டிவிட்டு விட்டாள். அதை அவள் வேண்டுமென்றேதான் செய்தாளோ, வேடிக்கையாகத்தான் செய்தாளோ? சுண்டிய வேகத்தில் அந்த நரம்பு வேதனை தாங்காமல் 'விண்-விண்' ணென்று தெறித்தது.



கொண்ட கணவன் மனைவியரே ஆகட்டும், அல்லது வேறு யார்தான் ஆகட்டும்; தங்கள் பிறந்தவீடு, பிறந்த குலம், பிறந்த பால், இவற்றைப் பிறர் குத்திக் காட்டுவதைப் பொறுக்க மாட்டார்கள். அப்படிக் குத்திக் காட்டுபவர்களிடமிருந்து தாங்கள் பெறும் அன்பு, இன்பம், உதவி, தயை, தாட்சண்யம் எல்லாவற்றையும் மிஞ்சிக்கொண்டு அந்தச் சொல்லானது அவர்கள் உள்ளத்தில் வேலாகப் பாய்ந்து வேதனைப் படுத்தி விடும். அப்படிப்பட்ட செயல் ஒன்றை மாலா இன்று செய்துவிட்டாள். வெறும் சொற்களால் அவன் உள்ளத்தைப் புண்படுத்தியது மட்டுமன்று; ஆண் குலம் முழுவதுக்கும் அவனையே பிரதிநிதியாக்கி ஒரு சவாலும் விட்டு விட்டாள். எத்தனை பெரிய சவால் அது? "நீங்கள் மணந்து கொள்வீர்களா ஒரு விதவையை? இன்று என்னை மணந்து கொள்ள எத்தனை ஆவலுடன் இருக்கிறீர்களோ, இதே ஆவலுடன் ஒரு விதவையை மணந்து கொள்வீர்களா?" என்றல்லவா கேட்டு விட்டாள்!

இந்தக் கேள்வி அவனை அடியோடு மாற்றிவிட்டது; ஒரு புதுச்சுந்தரம் ஆக்கி விட்டது. ஆண் குலத்தின் மதிப்பைக் காப்பாற்றும் மகத்தான பொறுப்பை அவன் தலைமீது சுமத்திவிட்டது. மாலா அப்பொழுது அவனுக்குத் தன் உள்ளம் கவர்ந்த மாலாவாகத் தென்படவில்லை; தன் இன்பமே அவன் இன்பம் என்று கருதும் மாலாவாகத் தென்படவில்லை; காதல் களஞ்சியமாக, தன் உயிராக, உடலாக, எல்லாமாகத் தென்படவில்லை. அவள் ஒரு வீராங்கனையாகத் தென்பட்டாள். சூட்சுமம் அறிந்து, அவன் உடலின் பலம் குன்றிய பாகத்தை அறிந்து, அதிலே தட்டி அவனை வீழ்த்தி மண் கவ்வ வைக்கும் எதிரியாகத் தென்பட்டாள்!

ஆம், கொடிய சவால் அது! கோர சவால் அது! பின்வாங்கவோ, விளையாட்டுப் பேச்சாக மாற்றவோ முடியாத சவால் அது! அதை அவன் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். ஏற்றுக்கொண்டு ஆண்பாலின் மானத்தைக் காப்பாற்றித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவன் கோழை! பேடி!

ஏற்றுக்கொள்ளத் துணிந்துவிட்டான் சுந்தரம். பேச்சுக்குப் பேச்சாக, சொல்லுக்குச் சொல்லாக மட்டுமில்லை; செயல் முறையிலேயே அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டான். கொஞ்சம் தயங்கியிருப்பான்; அப்பேச்சை விளையாட்டுப் பேச்சாக, வெறும் வாதமாகத் திருப்ப முடியுமா என்றுவது ஆலோசித்திருப்பான். ஆனால் அப்படிச் செய்ய முடியாதபடி, ஏற்கனவே ஒரு வேலைப் பாய்ச்சி உதிரம் கொட்டச் செய்திருந்த அவன் உள்ளத்திலே சிறிதும் இரக்கமின்றி

மற்றொரு வேலையும் எறிந்து விட்டான் அவன். "ஏன் வாயடைத்துப் போய் விட்டீர்கள்? பார்த்தீர்களா? செய்வேன் என்று ஒரு சொல்லைக் கூறக்கூட உங்களுக்குத் தைரியம் வரவில்லை, பார்த்தீர்களா?" என்று கேட்டு விட்டான்.

இவ்வளவுக்குப் பிறகும் அவள் உணர்வற்ற ஜடமாக இருக்கமுடியுமா? அந்தச் சவாலைச் சொல்லளவில் கொள்ள முடியுமா? அதை வெறும் வாதமென்று கருத முடியுமா?

ஆகையால் அந்தச் சவாலுக்குச் செயலளவில் பதில் தரத் துணிந்தாள் அவள். அதைக் கூற முயன்று கொண்டிருந்த போதுதான் பூசை வேளையில் கரடியாக அவன் தாயார் வந்து விட்டாள்!

என்னவோ அவர்களுடைய போதாத காலம், அசந்தர்ப்பமான சமயத்தில், அசந்தர்ப்பமான நிலையில் அவன் அவர்களைக் கண்டுவிட்டாள். போகட்டும் கண்டு விட்டாள்; அதற்காக அவனைக் கடிந்து கொள்ளுவாளா? கடிந்து கொள்ளட்டும். திட்டுவாளா? திட்டட்டும். தாங்கள் அப்படி ஒன்றும் கேவலமான முறையில் நடந்து கொள்ளவில்லையெனினும்; கிராமாந்திரச் சூழ்நிலைக்கு ஒவ்வாத விதத்தில் நடந்து கொண்டதற்காக வளர்ந்த பிள்ளை, நாளைக்கு உத்தியோகம் பார்க்கப் போகிற பிள்ளை என்றும் பாராமல் கை நீட்டி நாலு அடி அடித்து விடுவாளானாலுப் அடித்துக் கொள்ளட்டும். ஆனால் இந்தச் சந்திப்பின் அடிப்படையில், இவ்வளவு தூரம் தாங்கள் ஒன்றியிருந்ததன் அஸ்திவாரத்தில், தங்களை இணைத்து விடக் கூடாதே என்றுதான் அவன் கலக்கமுற்றான்.

எனவே, அவன் தாயாரின் கோபத்துக்காக மட்டுமில்லை; திட்டுக்காகவோ அடிக்காகவோ மட்டுமில்லை; உண்மையாகவே, மனப்பூர்வமாகவே தங்கள் சந்திப்பைத் தன் தாய் காதல் சந்திப்பாகக் கருதி விடாதிருக்க என்ன செய்யலாம் என்று ஆலோசித்தான். ஆனால் அங்கே ஆலோசிக்கவும், முடிவு காணவும் நேரம் எங்கே இருந்தது? அல்லது இம்மாதிரிச் சமயங்களில் உண்மையை மறைத்துப் பழகியவனாகவாவது இருந்தானா சுந்தரம்? இதுதானே அவன் இத்தகைய இக்கட்டு ஒன்றில் மாட்டிக் கொண்டிருக்கும் முதல் சந்தர்ப்பம். ஆகையால் அவன் இதிலிருந்து தப்ப ஒரு வழி காணுமுன்பே மரகதத்தம்மாள் அவனை 'மாட்ட' ஆரம்பித்து விட்டாள். "இங்கேயாடா இருக்கிறே தம்பி? நீ வீட்டு மச்சிலிலே உறங்கிட்டு இருக்கிறேன்னுட்டில்லா நான் நினைச்சுக்கிட்டிருக்கிறேன்."

"இல்லேம்மா......வந்து......மச்சிலிலே இறுக்கமா யிருந்தது; தூக்கம் பிடிக்கலே. இப்படிக் காத்தாடப் போய் வரலாம் என்று..." அவன் தடுமாறினான். ஒவ்வொரு வார்த்தையையும் ஆலோசித்தே சொல்ல வேண்டியிருந்தது.

"வெளியே போகிறவன் என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி விட்டு வர வேண்டாம்? வீட்டிலே இருக்கிறேன்னு நான் வீட்டைத் திறந்து போட்டுட்டுத் தண்ணி எடுக்க வந்து விட்டேனேடா! நல்ல பிள்ளைடா நீ. காத்தாட வந்தானாமில்லே, காத்தாட, இந்த வெய்யில் நேரத்திலே!" என்று கூறியவள்; கையில் குடத்தை எடுத்து அப்படியும் இப்படியும் ஆட்டிக் கொண்டு தலைகுனிந்து நின்ற மாலாவை நோக்கி, "ஏம்மா! தண்ணி எடுக்க வந்த உன்னையும் 'காத்தாடற ஆசை புடிச்சுக்கிடுச்சா?" என்று கேட்டாள். மகனிடம் பேசிய



போது இருந்த கடுமை மாலாவிடம் பேசியபோது இல்லை. என்ன இருந்தாலும் அவள் அசல் வீட்டுப் பெண் இல்லையா? அவளைக் கண்டிக்க இவளுக்கு என்ன உரிமை இருக்கிறது?

மாலாவாவது சாதுரியமாக ஒரு பொய்யைக் கூறிச் சமாளிப்பாள் என்று எதிர்பார்த்தான் சுந்தரம். ஆனால் அவள் குடத்தை ஆட்டுவதை நிறுத்திவிட்டுக் குனிந்த தலையை நிமிர்த்தாமல், "இல்லை அத்தை; அத்தான்தான்......" என்று மேலே என்ன சொல்வதென்று தெரியாமல் தத்தளித்தபோது சுந்தரத்தின் பாடு இன்னும் ஆபத்தாகப் போய் விட்டது. தன் நெஞ்சில் கொள்ளிக்கட்டையைச் செருகி விட்டு, தங்கள் காதலுக்குச் சாட்சியம் கொடுக்கிறாளா இவள்?

"மச்சினிலே தூங்கிக் கொண்டிருந்த என்னை, உன்னிடம் விடைபெறுவது போல் பெருங் குரல் கொடுத்து எழுப்பி, இவள்தான் அம்மா இங்கே வரும்படி அழைத்தாள்" என்று கூறி இவள் மானத்தை வாங்கி விடுவோமா என ஒரு கணம் நினைத்தான் சுந்தரம். ஆனால் அப்படிச் சொல்வது தங்கள் காதலை உறுதிப்படுத்தி விடுவதாகுமே! ஒரு சின்னப் பெண், ஒரு வயதுப் பையனைத் தன்னந்தனியே சந்திக்க அழைத்தாள்; அவனும் வந்தான்; இருவரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர் என்றால் அதற்கு அவர்களிடையே மனமொத்த காதல் மலர்ந்திருக்கிறது என்பதையன்றி வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

சட்டென்று சுந்தரத்தின் கூரிய மூளையில் ஒரு வழி தென்பட்டது. அவன் முகம் மலர்ந்தது. "ஆமாம், அம்மா! சுத்தப் பயந்தாங்கொள்ளி! ஆனால் அசட்டுத் துணிச்சலுக்குக் குறைவில்லை. வீட்டுக்கு இல்லா போறேன்னு கிளம்பிட்டாள். போயிருந்தால் என்ன ஆகியிருக்கும். தெரியுமா?" என்று அவன் ஏதோ புதிர் போடுவதுபோல் பேசினான்.

தாயிடமிருந்து திகிலை வெளிப்படுத்தும் கேள்வியை எதிர்பார்த்து இப்படிப் புதிர்படப் பேசிய சுந்தரம் ஏமாந்தான். மரகதத்தம்மாள் வெறுமனே முறுவலித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறே? மாலா அலங்கோலமாக நடு ரோட்டிலே விழுந்து கிடந்ததைப் பார்க்கவில்லையே! பார்த்திருந்தால் அப்படியே பதறிப் போய் அலறியிருப்பாய்" என்று அவன் தன் கதைக்கு இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பைச் சேர்த்தான்.

அப்பொழுதாவது தன் தாயார் "நினைவில்லாமல் விழுந்து கிடந்தாளா? என்னடா நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்பாளென்று நினைத்தான் அவன். ஆனால் மீண்டும் ஏமாற்றமடைந்தான். மரகதத்தம்மாள் கொஞ்சங்கூட அதிர்ச்சியோ பதற்றமோ இன்றிச் சாதாரணமாகவே காணப்பட்டாள். அவள் அப்படியே இருந்திருக்கக் கூடாதா? சுந்தரமே தான் ஜோடித்திருந்த கதையைத் தொடர்ந்து கூறியிருப்பானே! ஆனால் அவனோ மாலாவை நோக்கி, "என்ன மாலா! என்ன சொல்றான் இவன்?" என்று கேட்டு வைத்தாள்.

சுத்த அசடு இந்த மாலா. சமயோசிதமாக ஏதாவது வாய்க்கு வந்த பொய் ஒன்றைச் சொல்லியிருக்க வேண்டாமா? அட, அப்படி ஒன்றும் தோன்றவில்லையென்றால் பேசாமல் குனிந்த தலையை நிமிர்த்தாமலாவது இருந்திருக்கக் கூடாதா? சுந்தரத்தின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுவது போல் மறுபடியும் குடத்தை ஆட்டிக்கொண்டு அவனையும் மரகதத்தம்மாளையும் மாறி மாறி நோக்கி முறுவலித்தாள்.

அப்படியே கையிலிருந்த குடத்தைப் பிடுங்கி ஆற்றில் எறிந்து விட்டுக் கன்னத்தில் இரண்டு கொடுத்து விடுவோமா என்று பற்றிக்கொண்டு வந்தது சுந்தரத்துக்கு. பெண் புத்தி பின் புத்தி என்பது சரியாகத்தானே இருக்கிறது!

ஆயினும் அவன் — ஆண் சிங்கம் — சும்மா இருந்துவிட முடியுமா? ஆரம்பித்த பொய்யை முழுவதும் கூற வேண்டாமா? "இளிப்பைப் பார், இளிப்பை!" என்றான் அவன் ஆத்திரத்துடன். "அது என்ன செய்ததாம் உன்னை? கடிக்க வந்ததா? படம் எடுத்துப் பயமுறுத்திற்றா? தன் போக்கில் வேலி ஓரமாகப் போயிருக்கிறது. நீயும் உன் போக்கில் போக வேண்டியதுதானே? என்ன ஓலம்! என்ன ஓட்டம்! கண் தலை தெரியாமல் ஓடியதால் தலை சுற்றிற்று; நினைவிழந்து விழுந்தாய். எதேச்சையாக நான் வந்தேனோ, பிழைத்தாயோ? இல்லாவிட்டால் நீ நினைவு தப்பி ரோட்டில் விழுந்து கிடந்ததற்கு எவனாவது ஓசைப்படாமல் மேலே இருக்கிற நகை நட்டையெல்லாம் கழற்றிக் கொண்டு போயிருப்பான்; இல்லையா அம்மா?"


இப்படிக் கூறிவிட்டு, 'சபாஷ் சுந்தரம்! சபாஷ்!' என்று அவன் உள்ளூறத் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான். 'எவ்வளவு அபூர்வமான கற்பனை! அதை எத்தனை சுவைபட எடுத்துச் சொல்லி விட்டாய்! எல்லாம் ஒரே விநாடியில். சுந்தரம்! நீ இன்ஜினீயராகக் குப்பை கொட்டப் போவதைவிடக் கதாசிரியர் ஆகியிருந்தால் நன்றாகச் சோபித்திருப்பாய் அப்பா!'

கடைசியில் அவனுடைய இந்தக் கதைதான் மரகதத்தம்மாளின் மனத்தில் நம்பிக்கை பிறக்கச் செய்தது போலும்! "நிசந்தானா மாலா?" என்று அவள் கேட்டாள்.

அந்த அசடு அப்பொழுதாவது 'ஆமாம்' என்று சொல்ல வேண்டாமா? மீண்டும் குடத்தை ஆட்டிக் கொண்டு அவள் பல்லை இளித்தாள்.

சுந்தரத்தால் பொறுக்க முடியவில்லை. "போதும், போதும். குடத்தை ரொம்ப ஆட்டாதே. கை சுளுக்கிக்கிடப் போகிறது" என்றான் எரிச்சலுடன்.

'அனஸின்'



உங்களுடைய

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளுக்கு

நிவாரணமளிப்பதில் **சிறந்தது**

ஏனெனில் அதில் **நான்கு மருந்துகள்** சேர்ந்துள்ளன.

'அனஸின்' ஒரே ஒரு மருந்துமட்டுமல்ல, அது தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளிலிருந்து முற்றிலும் துரித நிவாரணம் அளிக்கும், ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான, விஞ்ஞான முறையில தயாரித்துள்ள நான்கு மருந்துகளின் கலவையாகும். ஒரே மருந்து சேர்ந்துள்ள எந்த வலி நிவாரண மருந்தும் 'அனஸினை'ப் போல், துரிதமாயும் . . . அபாயமின்றியும் நிச்சயமாயும நிவாரணம் அளிக்க இயலாது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.




GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

K. 66 (R) TAM.

கூடுதல் அபிவிருத்தியைக் குறிக்கும்

இக்கோட்டில் மறைமுகமான இரகசியம் ஒன்றுமில்லை.



இதன் அடிப்படை
6 காரணங்கள்தான்.

1. இரு முனைகளிலும் பால்பேயரிங்குகள் பொருத்தப்பட்ட நிசப்தமான விசிறிகள்.
2. மத்திய அரசாங்கத்திற்கும், ராஜிய அரசாங்கங்களுக்கும் முறையே சப்ளை செய்யப்படுகின்றன.
3. உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும், தரத்தின் மேன்மைக்காக கடுமையான பரிசீலனைகள் நடத்தப்படுகின்றன.
4. உயர்தர உலோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மாற்றியமைக்கும் வெவ்வேறு பாகங்கள் கிடைக்கின்றன.
5. நன்கு மூடப்பட்ட மோட்டார்கள்.
6. பொதுவாக இந்த விசிறிகள் இந்திய மற்றும் பிரிட்டிஷ் தர உற்பத்தி பிரகாரம் தயாரிக்கப்படுகின்றன.

காஸல்ஸ் ஏர் மாஸ்டர்

வியாபாரத்தின் முன்னணியில் நிற்கும் அருமையான விசிறி

மாட்ச்வெல் எலக்ட்ரிகல்ஸ் (இந்) லிட்
தபால் பெட்டி 156, புதுடில்லி

தொழிற்சாலைகள் : பூனா மற்றும் டில்லி



பூரண விற்பனை உரிமையாளர்கள் : **ரேடியோ லாம்ப் ஒர்க்ஸ் லிட்.**

பம்பாய் • கல்கத்தா • டில்லி • மதராஸ் • கான்பூர்
பங்களூர் • பாட்னா • இந்தூர் • வார்தா • கௌஹாத்தி



பாரி கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸி. டி. அலர்டன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லுகையில் பாரி கம்பெனி சிப்பந்திகள் அவருக்குப் பிரிவுபசாரத் தேநீர் விருந்தளித்தனர். பாரி கம்பெனியில் நீண்ட நாள் சேவை செய்துள்ள திரு பார்த்தசாரதியிடம் விடைபெற்றுக் கொள்கிறார்.

"பிறகு என்னடா செய்தே?" என்று கேட்டாள் மரகதத்தம்மாள். அவள் கேள்வியில் மிதந்தது ஏளனமா, அல்லது பரபரப்பா என்பதைச் சுந்தரத்தால் நிர்ணயிக்க முடியவில்லை. பெண்களின் மனம் ஆழம் காண முடியாதது என்கிறார்களே, அது எவ்வளவு உண்மை!

"மண்டபத்துக்கு முன்னாடி வந்து விழுந்து விட்டாள். நான் தூரத்திலிருந்தே அவள் விழுந்தடித்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்தேன். என்னவோ, ஏதோ என்று ஓடி வந்து பார்த்தால் பேச்சு மூச்சில்லாமல் தெருவில் விழுந்து கிடந்தாள். குடம் ஒரு பக்கம் உருண்டு போய்க் கிடந்தது......"

"அடி ஆத்தே! பிறகு?"

"தூக்கிக் கொண்டு வந்து படிக்கட்டில் போட்டு, கையில் தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தேன். கண் விழித்தாள். உடனே அந்நியனைக் கண்டு விட்டவள்! போல் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டாள் அம்மா! குடத்தைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. கை-கால் [எல்லாம் நடுங்குது; நடை தடுமாறுது. மறுபடியும் விழுந்து தொலைக்கப் போகிறாளே என்று ஓடிப் போய்க் கையைப் பிடித்து இழுத்து வந்து இந்தப் படிக்கட்டிலே உட்கார்த்தினேன். பக்கத்திலே இருந்து பயம் போகப் பேசி ஆசுவாசப்படுத்தினேன். சே! ஆனாலும் இவ்வளவு பயம் கூடாது அம்மா ஒரு பெண்ணுக்கு. பார்க்கப் போனால் அது வெறும் தண்ணீர்ப் பாம்புதானும்!"

"அது சரிதாண்டா, ஆனால் அதுக்காக, அதென்னடா அப்படிப் பக்கத்திலே உட்கார்த்தி வைச்சுக்கிட்டு...... வேறே யாராவது பார்த்திருந்தாங்கன்னா என்னடா நினைப்பாங்க?"

"அட, இது என்னம்மா நீகூட இப்படி நினைக்கிறே? கீழே விழுந்ததிலே தெருப் புழுதி கண்ணிலே போயிடுத்து அம்மா. பக்கத்திலே கூப்பிட்டுக் கண்ணையில்லா ஊதிக்கிட்டிருந்தேன்? அதுக்குக்கூட அவள் எவ்வளவு நாணிக் கொண்டாள்? எவ்வளவு கோணிக் கொண்டாள்? அதிலே எல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லே!"

"இப்போ கண்ணிலே விழுந்த தூசி போயிடுத்தா அம்மா? பயம் தெளிஞ்சு போச்சா?" என்று மாலாவைக் கேட்டாள் மரகதத்தம்மாள். அப்பொழுதாவது அவள் வாய் திறந்து, "ஆமாம், இல்லே" என்று ஏதாவது சொல்ல வேண்டாமா? மண்ணாந்தை மாதிரி நிற்கிறதைப் பாரேன்!

"வாயிலே என்ன கொழுக்கட்டையா? சொல்லேன்" என்று சத்தமிட்டான் சுந்தரம். ஆமாம், இனி என்ன இவளிடம் சுமுகமான பேச்சு வேண்டிக் கிடக்கிறது!

"அதை ஏண்டா அதட்டுறே பாவம்!" என்று மகனைக் கடிந்தாள் மரகதத்தம்மாள். "நல்லா வந்தீங்களே ரெண்டு பேரும். ம்...உங்களைச் சொல்லி என்னடா குற்றம்? போடா போ. நீ காத்து வாங்கினதெல்லாம் போதும்; வீட்டுக்குப் போ. வீடு திறந்து கிடக்குது."

அட கடவுளே! அப்படியானால் இவ்வளவு நேரம் தான் இத்தனை சாதுரியமாகக் கதை அளந்ததெல்லாம் வீண் தானா? தன் பேச்சைத் துளிக்கூட நம்பாதவள் போல் அல்லவா பேசுகிறாள் இந்த அம்மா!

சுந்தரத்தின் முகம் விழுந்து போயிற்று. அவன் கோபமெல்லாம் மாலாவின் மீது தான் தாவியது. என்னவோ அவள்தான் சதி செய்து தன் தாயை இங்கே வரவழைத்து விட்டாள்போல் அவளை வெறித்து ஒரு பார்வை பார்த்து விட்டு மெதுவாகப் படியேறி நடந்தான்.

அவனுக்குப் பின்னால் மரகதத்தம்மாள், "சரி, வா மாலா; தண்ணி எடுத்துக்கிட்டு நாமும் போகலாம்" என்று கூறிக் கொண்டிருந்தது கேட்டது.

* * *

பூங்கனூர் பாசன அணை வேலை நடக்கும் இடத்துக்கு அன்று மாலையில் போய் வர வேண்டும்; மறுநாள் வேலையில் சேர இருப்பதால், பிரதம இன்ஜினீயரை அதற்குமுன் பார்த்துப் பரிச்சயப்படுத்திக் கொண்டுவிட வேண்டும் என்று நினைத்திருந்தான் சுந்தரம். பிரதம இன்ஜினீயர் குலசேகர முதலியார் மிகவும் நல்லவர் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். அவர் ராகவனின் அப்பா வேலாயுதம் பிள்ளைக்கும் பழக்கமானவர். அவருக்கு ஒரு கடிதம் கூடக் கொடுத்திருந்தார் வேலாயுதம் பிள்ளை. சுந்தரம் தனது தூரத்து உறவுக்காரன் என்றும் அவனைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் பிரத்தியேகமாய்

குறிப்பிட்டிருந்தார். ஆகையால் தான் வேலையில் சேருவதற்கு முன்பே அவரைச் சந்தித்து அவருடைய நல்லெண்ணத்தைப் பெற்றுவிட வேண்டுமென்று சுந்தரம் தீர்மானித்திருந்தான்.

ஆனால் வீடு திரும்பியபோது அவன் மனம் உற்சாகம் இழந்து விட்டது. 'நாளை முதல் வேலைக்குப் போய் விடப் போகிறோம். மாலாவை முன் போல் அடிக்கடி சந்திக்க முடியாது. இன்றாவது ஆசை தீரப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்ப வேண்டும்' என்று அவன் ஆவலோடு ஆற்றுக்குப் போனான். ஆனால் அந்த ஆவல் இப்பொழுது புங்கனாற்றோடு போய் விட்டது! உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும் என்றாகி விட்டது அவன் நிலை. இப்படி ஒரு நிலை ஏற்படும்; இப்படித் தன் மனம் மாறும் என்று அவன் கனவில்கூடக் கருதி யிருக்கவில்லை.

தன்னால் இன்று இனி எங்குமே செல்ல முடியாது என்று தோன்றி விடவே, வீடு திரும்பிய சுந்தரம் நேரே மாடிக்குச் சென்று கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்துவிட்டான்.

அது ஓர் ஓட்டு வில்லை வீடு. சுந்தரத்தின் பாட்டனார் காலத்தில் கட்டப் பட்டது. அதை இடித்துப் புது மாதிரியில் கட்ட வேண்டும் என்பது சுந்தரத்தின் ஆசை. "கட்டிப் புடறது என்னடா பிரமாதம். ஆனால் ஆசைப்பட்டுக் கட்டின வீட்டிலே நீ கண்டாக் குடியிருக்கப் போறியா? நீதான் நிலம்-நீச்சைப் பார்த்துக்கிட்டு ஊரோட வீட்டோட இருக்கணும் என்கிற ஆசை இல்லாமல், வேலை-வெட்டின்னு அலையுறியே. எங்கெங்கே, எந்த எந்தக் குட்டிச் சுவரிலே போய்க் காலந்தள்ளணு மின்னு உன் தலையிலே எழுதியிருக்குதோ. நாங்கள் கிழம் கட்டைகள், எங்களுக்கு எதுக்கடா புது வீடும் ஒண்ணும்? எல்லாம் உன் காலத்திலே, உன் புள்ளை-குட்டிகள் தேவை போலே கட்டிக்கிடு" என்று கூறி விட்டார் புஷ்பவனம் பிள்ளை.

ஆனால் இப்பொழுது சுந்தரம் நிச்சயமாகக் குறைந்தது மூன்று-நான்கு வருஷங்களாவது சொந்த ஊரில் தான் இருக்கப் போகிறான். பாசன அணை வேலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷந்தான் ஆகியிருந்தது. கட்டி முடிக்க ஐந்து வருஷங்களாவது ஆகும் என்று திட்டமிட்டிருந்தார்கள். வேலை எத்தனைதான் விரைவாக நடந்தாலும் இன்னும் மூன்று வருஷங்களுக்குக் குறைந்து முடிந்து விடாது. ஆமாம், இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படியாவது வீட்டை இடித்துப் புது மாதிரியாகக் கட்டிவிட வேண்டியதுதான். ஊர் இராமாந்திர

சிரிக்காதே!

"உனக்குச் சாக்லேட் வாங்கிக் கொடுத்த மாமாவுக்கு நீ என்ன சொன்னாய்?"

"இன்னும் கொஞ்சம் தாங்கோ என்றேன். கொடுத்தார்!"

"அப்பவேனும் அவருக்கு 'தாங்க்ஸ்' சொன்னாயா?"

"தாங்க்ஸ் சொன்னால் அப்புறம் கேட்க முடியாதேம்மா! இது தெரிய வில்லையே உனக்கு!"

✲

"என்ன தூங்குநீர்! இந்த ஹோட்டல் தீப்பிடித்துக் கொண்டுவிட்டது எழுந்து வெளியே ஓடு, ஐயா!"

"அட! தூக்கத்தைக் கலைக்காதே! நான் காலையில் பேப்பரைப் பார்த்துப் படித்துக் கொள்ளுகிறேன்!"

✲

இந்தப் புதிரைச் சொல்லுடா! நாலு கால் உண்டு, ஒரு வால் உண்டு 'ளொள், ளொள்' என்று குரைக்கும் அது என்ன?"

"நாய்!"

"போடா, உனக்கு முன்னமேயே இந்தப் புதிர் தெரிந்திருக்குடா!"

✲

இந்தக் கூந்தல் வளரும் தைலத்தை உபயோகியுங்கள்! கூந்தலுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். மூன்று பாட்டில் தைலம் இனமாக அனுப்புகிறோம்!

—ஒரு தைல விளம்பரம்

✲

"பெரிய எழுத்தாளனாக ஆகும் படியாக ஏதேனும் பேனா உங்களிடம் இருக்கிறதா?"

"அது இப்பொழுது வருவதில்லை. நின்று போய்விட்டது!"


✲

ரோடு பெருக்குகிறவனிடம் ஒரு பையன்: சாயங்காலமா இந்தப் பக்கம் வா! நான் ஒரு சாக்லேட் தின்று விட்டு ரோட்டில் ஒரு பேப்பர் போடுகிறேன். அதைப் பெருக்கிக் கொண்டு போகலாம்!"

✲

"அடேயப்பா உனக்கு எவ்வளவு நீளமான காது. அதைப் பார்த்தால் ஒரு மிருகம் ஞாபகம் வருகிறது. காது இருக்கு. ஆனால் அது மாதிரி முகம் தான் தேவை!"

"ஏன்! உன் முகமும் என் காதும் சேர்ந்தால் சரியாகி விடுகிறது!"



சென்னை, சேத்துப்பட்டில் இந்திய மாதர் சங்கத்தின் கிளை ஸ்தாபனத்தை நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மாக இருந்தாலும் அவன் படித்துப் பதவி வகிக்கப்போகிறவன் இல்லையா? நாளைக்கு ஏதாவது ஒரு விசேஷம், ஒரு கலியாணம் கார்த்திகை என்றால் பிரதம இன்ஜினீயர் போன்ற பல பெரிய அதிகாரிகள் அவன் வீட்டுக்கு வருவார்கள். அவர்களை இந்தக் குச்சு வீட்டிலா வரவேற்பது?

சுருக்கென்று அவன் நினைவில் குத்தியது ஒரு கேள்வி-கலியாணமா! யாருக்கு? அவனுக்கா!

ஆம்; ஒரு மணி நேரத்துக்கு முன் கலியாணம் அவனுக்கு மிக மிக அருகில் இருந்தது. ஆனால் இப்பொழுதுதான் அது எங்கோ போய்விட்டதே!

கூரையிலிருந்த ஓட்டு வில்லைகளைப் பார்த்தவாறு படுத்திருந்த சுந்தரத்தின் கண்களில், அவற்றின் இடையே வெளிச்சம் வருவதற்காகப் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் விழுந்த மாலைப் பொன் வெய்யிலின் கதிர்கள் பட்டுக் கூசச் செய்தன. அவன் கண்களை மூடிக் கொண்டான். ஆனால் கூசிக் குறுகிப்போன தன் மனத்தை இத்தனை சுலபமாக மூட முடியுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. அதில் ஏற்பட்டிருந்த ரணம் மூடி மறைக்கக் கூடியதன்று. அது ஊறி ஆற்றப்பட வேண்டியது. ஆற்றாமல் விடவும் முடியாது அவனால். ஏனென்றால் ஆறாமல் இருக்கும் வரையில் அது அவனை வேதனைப் படுத்திக்கொண்டேதான் இருக்கும். ஆற்றும் பணியில்கூட அவன் பலவேதனைகளைத் தாங்கித்தான் ஆகவேண்டும்.

அவனுக்கு இப்பொழுது ஆச்சரியமாக இருந்தது — எப்படித் தன் மனம் இவ்வளவு சடுதியில் இப்படி மாறி, இத்தனை உரம் பெற்றது என்பது. மாலாவே தன் உடல், பொருள், ஆவி என்று கடந்த ஒன்றரை வருஷங்களாகக் கருதியிருந்த தனக்கு எப்படி இத்தனை சடுதியில் அவளை மறந்து விடவும் துறக்கவும் துணிவு ஏற்பட்டது?

ஆனால் சிறிது சிந்தித்துப் பார்த்த போது இந்தத் திடீர்மாற்றம் தன்னிடம் மட்டும் அபூர்வமாக ஏற்பட்டதன்று; உலகில் ஒவ்வொருவர் மனத்திலும், தங்கள் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு நேர் எதிரான மாற்றம் ஏற்படும் போது அது திடீரென்று, ஒரு கணத்தில், ஒரு சொல் அல்லது ஒரு செயல் மூலந்தான் ஏற்பட்டு வந்திருக்கிறது என்பது அவனுக்குத் தெளிவாயிற்று. மிகவேகமாக வீணையின் தந்திகளை மீட்டி, மிக இனிமையாக இசையை எழுப்பும் விரலின் லாகவத்தில் ஒரு சிறு தவறு ஏற்பட்டு விட்டாலும் இசையின் இன்பமெல்லாம் ஒரே விநாடியில் துன்பமாக மாறிவிடும் என்பதை அவன் உணர்ந்தான். மனிதரின் நெஞ்சு மிக நுட்பமான கருவி. அதைக் கையாளும் விதத்தில்தான் கையாள வேண்டும். வேடிக்கையாகக் கையாளலாம்; விளையாட்டாகக் கையாளலாம். ஆயினும் அந்த வேடிக்கையும் விளையாட்டும் அளவோடுதான் இருக்க வேண்டும். அவசரமாகவோ, அசட்டையாகவோ, அந்த அளவை மீறிச் சென்று விட்டால் மனக் கருவி பழுதாகி விடுகிறது. உடைந்து சிதறி விடுகிறது. சிதறிவிட்ட அதைப் பிறகு எவ்வளவு முயன்றாலும் சீர் செய்ய முடியாது; பழைய நிலைக்குத் திரும்பவும் கொண்டுவர முடியாது.

தெரிந்தோ, தெரியாமலோ அந்தத் தவறைப் புரிந்துவிட்டாள் மாலா. இனி அதன் பயனை அவளும் அவனும் அநுபவிக்கத்தான் வேண்டும். அவர்களிடையே ஒரு பெரிய குறுக்குச்சுவராக எழும்பி விட்டது அவன் விட்ட சவால். அந்தச் சுவரை இனி அவன் எளிதில் தகர்க்க முடியாது. தகர்த்தாலும் அவளை அணுகி விட முடியாது. அவளை அணுக இனி அவனுக்கு அருகதை இல்லை; அந்த அருகதை உடையவள் இனி ஒரே ஒருத்திதான் - ஒரு விதவை!

"சுந்தரம்! மேலே இருக்கிறியாடா தம்பி?"—உள்ளப் பெருக்கின் ஓட்டத்தைத் தடை செய்தது கீழேயிருந்து வந்த அவன் தந்தையின் குரல்.

படுத்திருந்த சுந்தரம் கண்களைக்கூட விழிக்காமல், அசிரத்தையாக, "இருக்கிறேன் அப்பா" என்றான்.

"வீணா வந்திருக்கிறாளடா. கீழே இறங்கி வா."

"வீணாவா?" மறுகணம் அவன் துள்ளி எழுந்து கீழே ஓடினான். (தொடரும்)

[நடராஜன் வீட்டில் அவன் படுக்கை அறை. சுவர்க் கடிகாரம் காலை மணி எட்டடித்து ஓய்கிறது. நடராஜனின் மனைவி மோஹனா படுக்கையில் புரண்டவாறே சுவர்ப் பக்கம் திரும்பிக் கண்களைத் திறக்கமுயல்கிறாள். மறுபக்கக் கதவைத்திறந்து மோஹனாவின் மாமியார் கல்யாணி எட்டிப் பார்க்கிறாள்.]

கல்யாணி (சீற்றத்துடன்): மகாராணிக்கு இன்னும் பொழுது விடியவில்லையோ?

மோஹனா (திரும்பாமலே இரு கரங்களையும் கூப்பி): தாயே! புண்ணியவதி! ஒன்பது மணி அடித்த பிறகு வந்து எழுப்புங்கள். அப்போதும் சும்மா வந்து எழுப்பாதீர்கள். கையில் காப்பியுடன் வாருங்கள். காப்பி கண் முன்னே தோன்றினால் தான் எனக்குப் பொழுது விடியும். இந்த மகாராணியின் சாம்ராஜ்யத்தில் சூரியன் வழக்கமாக ஒன்பது மணிக்குத்தான் உதயமாவான்.

கல் (தலையில் அடித்துக்கொண்டு): கர்மம்! கர்மம்! இப்படி ஒரு நாட்டுப் பெண் எனக்கு வந்து சேர எத்தனை காலம் தவம் இருந்தேனோ நான்?



சமரசவாதி

கோமதி சுவாமிநாதன்

மோஹனா (படுக்கையில் எழுந்து உட்கார்ந்து): நான்சென்ஸ்! நாட்டுப்பெண்ணாவது? நாட்டுப் பெண்ணாவது? நான் பட்டணத்துப் பெண்! நினைவிருக்கட்டும். காலைத் துயிலின் இன்பத்துக்குக் காலனாக நிற்கும் நாட்டு மாமியாரே! உள்ளே போய் உங்கள் வேலையைக் கவனியுங்கள். இல்லாவிட்டால் டிஸ்மிஸ்......

[போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்]

கல்: என்னடி தஸ் புஸ் என்கிறாய்! என்னுடைய பிள்ளை வரட்டும், ஒரு கை பார்க்கிறேன்.

நடராஜன் (கையில் ஒரு பையுடன் வந்து கொண்டே): வந்து விட்டேன் அம்மா! (சூழ்நிலையைப் புரிந்துகொண்டு) ஏன் அம்மா மோகனாவுக்கு உடம்பு சரியில்லாதது உனக்குத் தெரியுமா? அவளுக்கு மருந்தெல்லாம் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். நீ போ! நான் கவனித்துக் கொள்கிறேன்!

கல்: அவள் உடம்புக்கு என்ன கேடு? மூளை சரியாக இருக்கிறதா, பாரு! என்னை என்னவோ 'பிசுபிசு' பண்ணிவிடுவாளாமே?

நட: ஐயோ! ஜன்னியிலே ஏதாவது உளறிக் கொட்டியிருப்பாள். நீ போயேன்!

கல்: அவளுக்கு ஜன்னியில்லேடா! சனி......!

[போகிறாள். அறைக் கதவைத்தாளிட்டு உள்ளே திரும்பிய நடராஜன், தாயார் கதவுக்கு மறுபுறம் ஒட்டுக் கேட்பதை உணர்ந்து கட்டிலை நோக்கி வருகிறான்.]

நட: மோஹனா! எழுந்திருந்து மருந்து சாப்பிடு! (நிதானித்து) எழுந்திருக்க மாட்டாயா? டாக்டரைக் கூட்டி வந்து இரண்டு மூன்று ஊசி போட வேண்டியதுதான்! என்ன சொல்லறே?

[கல்யாணி கதவைவிட்டு நடக்கிறாள்]

நட (உற்சாகத்துடன்): ரைட்! வேவு பார்க்கும் விமானம் பறந்து சென்று விட்டது! மோஹனா! சீக்கிரம் இந்த மருந்து டோஸ்களையெல்லாம் காலி பண்ணு! இதோ, மங்கள பவனம் ஸ்பெஷல் மசால் தோசை! காமாட்சி விலாஸ் ஸ்பெஷல் காப்பி! நடக்கட்டும்.

[மோஹனா பலகாரத்தைத் தின்று முடிக்கிறாள். நடராஜன் பிளாஸ்கிலிருந்து காப்பியை டம்ளரில் ஊற்றுகிறான். கதவு தட்டப்படும் ஓசை கேட்கிறது. திடீரென்று எல்லாவற்றையும் மறைக்கும்படி போர்வையைப் போர்த்தி மோஹனா படுத்துக் கொள்கிறாள். நடராஜன் கதவைத் திறந்ததும் அவனுடைய தந்தை சுப்புரத்தினமும் கூட ஒரு நபரும் நிற்கிறார்கள்.]

நடராஜன்: என்னப்பா?

சுப்புரத்தினம்: ஏண்டா! மோஹனாவுக்கு உடம்பு சரியில்லையாமே! எதேச்சையாக என் பழைய சிநேகிதர் நாட்டு வைத்தியர் நாகலிங்கம் வந்திருக்கிறார். நாகலிங்கம், கை பாரப்பா!

நட (வழியை மறித்து): ஒன்றுமில்லையப்பா! சாதாரண இங்கிலீஷ் ஜுரம்! அரை மணியிலே சரியாகப் போய்விடும்.

சுப்பு: அசதன்னடா இங்கிலீஷ் ஜுரம், தெலுங்கு ஜுரம் என்று?

நட: இங்கிலீஷ் மருந்தாலேயே விரட்டி விடலாம் இந்த இங்கிலீஷ் ஜுரத்தை! நான் மருந்து வாங்கி வந்தாச்சு!

சுப்பு: எதற்கும் நாகலிங்கம் கை பார்க்கட்டும்!

நட: ஊஹூம்! நன்றாய்த் தூங்குகிறான், எழுப்பக் கூடாது.

சுப்பு: தூக்கத்தைக் கலைக்காமல் கை பார்க்கட்டுமடா!

நட: சரி, சரி! பார்த்துத் தொலைக்கட்டும். அதோ, அந்தப் போர்வைக்கு அடியிலே கை!

[நாகலிங்கத்தின் கையைப்பிடித்துப் போர்வைக்கு அடியில் சூடான காப்பியுடன் காத்திருக்கும் பித்தளை டபாராமீது வைத்து விட்டுச் 'சட்' என்று கையை மீட்கிறான்.]

நாக: அடேடே! ஜுரம் அனலாகக் காய்கிறதே! நான் வீட்டுக்குப் போய்ச் சூர்ணம் அனுப்புகிறேன். தேனிலே குழைத்து......

நட: ஓ! சாப்பிட்டு விடுகிறேன்!...... இல்லை, அவனுக்குக் கொடுக்கிறேன்.

[சுப்புரத்தினமும் நாகலிங்கமும் போகிறார்கள். நடராஜன் கதவைத் தாளிட்டுக் கொண்டு வருகிறான்.]

2

[இரண்டு நாட்களுக்குப் பிறகு மோஹனா கோபத்துடன் தன் அறையில் உட்கார்ந்திருக்கிறாள். நடராஜன் ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டு வருகிறான்.]

மோஹனா: இதோ பாருங்க! இந்த இரண்டு விரல்களில் ஒன்று தொடுங்க!

நட: நாடகத்துக்குப் போகலாமா? சினிமாவுக்குப் போகலாமா என்று ஜோசியம் பார்க்கத்தானே கேட்கிறாய்! இரண்டும் நடக்காத விஷயங்கள்!

மோஹனா: நான் சொல்வது நடந்தாக வேண்டிய விஷயம்! எந்த விரல், தொடுங்கள்!

நட: அட நீ ஒண்ணு! ஏன் கோபித்துக் கொள்கிறாய்! இன்றைக்கு ஒரு டான்ஸ் அரங்கேற்றம் பார்க்கப் போகிறோம். நாடகம் நாளைக்கு. சினிமா நாளைக்கு மறுநாள்! சரிதானே! அப்பாக்கிமா இரி விரலை நீட்டாதே மடக்கு.



மோஹனா: நான்தான் இந்த வீட்டிலே டான்ஸ் ஆடுகிறேனே! போதாதா? வெளியே போய் வேறு பார்க்கவேண்டுமாக்கும்! இதோ பாருங்க! இந்த விரல் உங்க அம்மா, இந்த விரல் நான். எது உங்களுக்கு வேண்டும்? சொல்லுங்கள். இந்த வீட்டிலே ஒன்று நான் இருக்க வேண்டும். அல்லது உங்க அம்மா இருக்க வேண்டும். இன்று இரண்டில் ஒன்று தீர்ந்தாக வேண்டும்!

நட: (தன் கைவிரல் ஒன்றைக் காண்பித்து) இந்தா, இதோ ஒரு விரல்! ஒரே விரல்! வேணுமா? வேண்டாமா? இதற்குப் பெயர் சமாதானம், சமரசம், அமைதி, பொறுமை!

மோஹனா: ஒரு எருமையும் வேண்டாம்! என்னைப் பார்த்து உங்க அம்மா எத்தனை துணிச்சலுடன் 'வேஷக்காரி' என்று சொன்னாள்!

நட: (காதில் சரியாகப் போட்டுக் கொள்ளாமல்) ஹா! உன்னை வேலைக்காரி என்றா சொல்லி விட்டாள்! நான் இப்போதே போய் அவளை என்ன பண்ணுகிறேன், பார்! ஹாஹ்ஹா!

[வெளியே போகிறான்.]

3

[சமையலறையில் கல்யாணி காய்கறிகள் நறுக்கிக்கொண்டிருக்கிறாள். முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடராஜன் வருகிறான்.]

நட: (தானாக) மடக் கழுதை, நன்றி கெட்ட ஜன்மம்!

கல்யாணி: (நிமிர்ந்து) ஏண்டா! என்னைப் பார்த்து இப்படித் திட்டச் சொல்லி உன்னுடைய அதர்ம பத்தினி அனுப்பி வைத்தாளா?

நட: ஐயையோ! மகா பாவம், உன்னைப் பார்த்து நான் நாக்கை அசைப்பேனா? எல்லாம் அவளைத்தான் சொல்கிறேன். மருமகள் என்ற பதத்துக்கே மாசு கற்பிக்க வந்திருக்கிறாளே!......

கல்: நன்றாகச் சொல்லு! இப்போதாவது உனக்குப் புத்தி வந்ததே! என் மனசு குளிர்ந்ததடா! ராங்கிக்காரி!......அவளை......

நட: அவளை என்ன தான் பண்ணவேண்டும்! சொல்லு! செய்கிறேன். கழுத்தைப் பிடித்துத் தள்ள வேண்டுமா? வீட்டை விட்டு விரட்டணுமா? இல்லே தடியாலே இரண்டு போடணுமா? தொலைச்சுப்புடறேன் அவளை!

[மூலையில் சாத்தியிருந்த கொடிக் கம்பை எடுத்துக் கொண்டு ஓடுகிறான்.]

4

[மோஹனாவின் அறை. தடிக் கம்புடன் ஓடி உள்ளே வந்த நடராஜன் அதை ஒரு பக்கம் போட்டு விட்டு நிதானமாக வியர்வையைத் துடைத்துக் கொள்கிறான். மோஹனா திகைப்புடன் அவனைப் பார்க்கிறாள்.]

நட: இன்றைக்குக் கொலைதான் நடக்கவில்லை. மற்றப்படி சும்மா கும் கும் என்று சம்பிரமாகக் கொடுத்தேன். அம்மா என்று சொல்லப்படுபவள் பெட்டிப் பாம்பாகி விட்டாள்.

மோஹனா: (பயத்துடன்) ஐயையோ! உங்களைச் சும்மா கேட்டுவிட்டுத்தானே வரச் சொன்னேன். இப்படி நரசிம்மாவதாரம் எடுத்து நீங்கள் பாய்ந்தால் பிறகு என் மண்டை உருளும். தலையணை மந்திரம் போட்டிருக்கிறாள் என்று திட்டமாட்டார்களா? நீங்களும் உங்கள் அவசர புத்தியும்......

நட: உஷ்! தலையணை மந்திரமென்ன? சும்மா பெரிய மெத்தை திண்டு மந்திரங்களாகவே நீ என் காதில் புகுத்தலாம். அதைக்கூடக் கேட்காமல் ஒரு கணவன் பதவி வகித்துத்தான் என்ன பிரயோசனம்? மனைவிக்குத்தான் என்ன மதிப்பு? நீ சும்மா மந்திரம் போடு! இன்னொரு தடவை படையெடுக்கவா?

மோஹனா: ஐயோ, வேண்டாம்! நீங்கள் ஏற்கனவே கொடுத்தது போதும். இனிமேல் என் வழிக்கே வரமாட்டாள் உங்க அம்மா! சரி, நீங்க போயி அவளிடம் என்ன கேட்டீங்க?

நட: அப்படிக் கேளு, என் ராசாத்தி! தடியைக் கையில் எடுத்துக் கொண்டு அடுக்களைக்குப் போனேனா? 'ஏண்டா! உன் பெண்டாட்டி புடவையைக் காயப் போடப் போகிறாயா?' என்று கேட்டான் இடக்காக.

மோஹனா: பார்த்தீர்களா, உங்க அம்மாவின் திமிரை!

நட: என் அம்மாவா? நான்சென்ஸ்! கேளேன்! 'புடவையை உலர்த்த வரவில்லை. இப்போது உன்னையே அடித்து உலர்த்திக் காயப் போடப் போகிறேன்' என்றேன். பார்க்கணுமே அவள் முகத்தை!

மோஹனா: அப்புறம்?

நட: அவ்வளவுதான்! டோஸ் மேலே டோஸ் சரமாரியாகக் கொடுத்தேன். 'இனி மோஹனா வழிக்குப் போனே, உன்னைக் 'கெட் அவுட்' பண்ணி விடுவேன்' என்று சொல்லிக் கம்பை வீசி விட்டேன். நல்ல வேளை! ஜன்னல் தடுத்து விட்டது. போதுமா? இன்னொரு தடவை......

மோஹனா: போதும்! போதும்!

நட: சரி! நிறுத்தி விட்டேன்! ஒரு சிறு உதவி செய்யேன்!

மோஹனா: என்னவாம்?

நட: நான்தான் உன்னை அடிக்கிறேன் என்று வைத்துக் கொள். நீ எப்படி அழுவாய்?

மோஹனா (கோபத்துடன்): ஓஹோ! அந்த நினைவு வேறு உங்கள் மனத்தில் இருக்கிறதா?


நட: ஐயையோ! விளையாட்டுக்கு! என் அம்மாவும் அழுதாள். கொஞ்சமாவது கலையம்சம் இருக்க வேண்டுமே! குரலிலே கார்வை, கமகம் இருக்க வேண்டுமே! சுத்தமாக இல்லை. நீ அழுதால் எத்தனை அழகாக அழுவாய்? எங்கே, சுருதியோடு இரண்டு நிமிஷம் நடத்து! கதவுக்கப்பால் நின்று கேட்டு வித்தியாசத்தை ரசிக்கிறேன்.


மோஹனா: ஊஹூம் ஊஹூம்! எனக்கு வராது!

நட: ஐயோ! உனக்கு வராத கலை இந்த உலகத்தில் உண்டா? எஸ்! ஸ்டார்ட்! அப்படித்தான். தலையணையை அடிக்கிறேன். நீ அழு!

[மோஹனா விம்மி விம்மி அழ ஆரம்பித்ததும் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே வந்த நடராஜன் ஒரே ஓட்டத்தில் தாயாரைக் கூட்டி வந்து மோஹனா விம்மும் சத்தத்தை மூடிய கதவுக்கு அப்பாலிருந்து கேட்கச் செய்கிறான்.]

நட (ரகசியக் குரலில்): பார்த்தியா! அடி உதவுறாப்போலே அண்ணன் தம்பி





இன்ஜினீயர், கண்டிராக்டர் திரு ˝ரவால் எஸ். கிருஷ்ணய்யர் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா சமீபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

உதவ மாட்டான்! கொடுத்தேன் திருப்தி யாக! இனிமேல் அவன் உன்னிடம் மரியாதையாக நடந்து கொள்வான். நீ போ! இது தெரிஞ்சதாகக் காண்பித்துக் கொள்ளாதே!

[கல்யாணி போனதும் நடராஜன் கதவைத் திறந்து கொண்டு மகிழ்ச்சி பொங்க உள்ளே வருகிறான்.]

நட: (சத்தம் வராமல் கைகளைத் தட்டி) பிரமாதம்! பிரமாதம்! போதும்! உன் அழுகை அழுகைதான்! கல்மனம் கம் என்று வீசுகிறது. அவனும் அழுதானே! அபாரம்! உன் விம்மலை ரிக்கார்டாக்கி விற்றால் ஒரே மாசத்தில் ஒரு லட்சம் ரிக்கார்டுகள் விலையாகும். என்ன சிரிக்கிறாய்?

மோஹனா: உங்கள் ஆசையைப் பார்த்து!

[இருவரும் சிரிக்கிறார்கள்.]

5

[நடராஜன் வீட்டுக்கூடம். சுப்புரத்தினமும் கல்யாணியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நடராஜன் வருகிறான்.]

கல்: எங்கேடா தாம்தூம் என்று கிளம்பிப் போகிறான். பியூன் கூட வர வேண்டாம்னு உத்தரவிட்டு விட்டானா?

நட: (கோபத்தை அடக்கிக்கொண்டு) இந்தக் கழுதை ஒரு சினேகிதக் கழுதையைச் சந்திக்க ஏதோ குட்டிச் சுவரை நாடிப் போகிறதாம்! விட்டுத்தள்ளு!

சுப்புரத்தினம்: அப்பா, புத்திர ரத்தினமே! பெண்டாட்டியை நல்ல வழிக்குக் கொண்டு வர உனக்கு எப்போடா புத்தி வரப் போகிறது? அந்தக் காலத்திலே உங்க அம்மா என் கண்களில் தென்பட்டவே நடுங்குவாளடா!

கல்: இப்போது இவன் அவளைக் கண்டால் நடுங்குகிறான். காலத்தின் கோலம்!

[வாசலில் இறங்கியவுடன் செருப்பு வார் அறுந்து போனதால் வீட்டுக்குள் திரும்பிய மோஹனா இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே மறைவாக சேழியில் நிற்கிறாள்.]

நட: ஹூம்! எனக்கென்ன எக்ஸ்ரே கண்ணா இருக்கிறது? உருவம் லட்சணமாக இருக்கிறதே! குணமும் லட்சணமாக இருக்கும் என்று நினைத்தேன்! வெறும் குப்பை என்று இப்போதுதானே நமக்குத் தெரிகிறது. தன்னாலே சரியாகப் போகும். இரண்டு கைகளையும் தட்டினால்தானே சத்தம்?

கல்: ஊர் சிரிக்கிறதே?

நட: ஊர் பைத்தியக்காரன்மாதிரிசிரிக்கும்! அதற்கு நாம் கவலைப்படலாமா?

சுப்பு: அப்படியானால் நீ அவளைக் கண்டிக்க மாட்டாய்?

கல்: கண்டிச்சு என்ன லாபம்? அன்றைக்கு உதை உதை என்று உதைத்தான். அழுது ஒப்பாரி வைத்ததைதானும்தான் கேட்டேன்! அழுகை வந்த மாதிரி புத்தி வரலியே?

[நடராஜன் போனதும் மோஹனா உள்ளே வருகிறாள்.]

மோஹனா: யார் அடித்தார்கள்? யார் ஒப்பாரி வைத்தார்கள்? தடியடி படறது வரை போய்த்தப்பினது மறந்துட்டதோ?

கல்: என்னை அடிக்கக் கை ஓங்க இந்த உலகத்திலே யாருடா இருக்கான்?

சுப்பு: (எழுந்து கொண்டு) ராம ராம ஹரே ஹரே. ராங்வேனா ஹரே ஹரே! கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே! போலிப் பிழைப்பு ஹரே ஹரே! [நழுவுகிறார்.]

மோஹனா: (கல்யாணியிடம்) ஏன்? உங்க புத்திரகாமேஷ்டிதானே கம்பைத் தூக்கிக் கொண்டு அடிக்க வந்தது? நினைவில்லையோ?

கல்: அவன்தானேடி உன்னை அடிச்சு நீ ஒப்பாரி வைத்தாய், நினைவில்லையோ?

மோஹனா (நழுவப் பார்க்கும் நடராஜனின் வழியை மறித்து): இந்தாங்க! என்றைக்கு என்னை அடிச்சீங்களாம்?

கல்: நேற்று! என்னைத்தான் கதவருகில் இழுத்து வந்து உன் பிலாக்கணத்தைக் கேட்கச் சொன்னானே!

மோஹனா: என்ன? நேற்றா? உங்களை அடிக்க ஓங்கின தடியோடுதானே என் அறைக்கு ஓடி வந்தார்!

கல்: உன்னை அடிக்க ஓடிவந்தான்! ஏண்டா! அப்படித்தானே சொன்னாய்?


மோஹனா: உங்களை அடிக்க வந்து, மிரட்டி விட்டுத் திரும்பினார். (நடராஜனிடம்) அப்படித்தானே சொன்னீர்கள்!

நட (மெதுவாக): கைலாசவாசா! காஷாயம் தாப்பா! தைபதும் தாயும் தாக்குறாப்பா!

கல்: ஏண்டா! பொய் சொல்லி அவ கிட்டே நல்ல பெயர் வாங்கிக் கொண்டாயா? சொல்லுடா!

மோஹனா: அம்மா கிட்டே நல்ல பெயர் வாங்கவா அந்த அழுகல் நாடகம் நடத்தினீர்கள்? சொல்லுங்கள்.

நட: இனி இந்தக் கணம்முதல் எனக்கு எந்த விதமான நல்ல பெயரும் வேண்டாம்! அவசியமில்லை! உங்கள் இருவருடன் பேச்சும் தேவையில்லை. நல்ல சமயத்தில் என்னைக் காட்டிக் கொடுத்த கருங்காலிகள் இருவரும்! [திரை]



பொய்த்துப்போன ஒரு பழமொழி

'துணிக்கேற்றபடி உங்கள் கோட்டைத் தைக்கவும்' என்பது பிரபலமான ஒரு ஆங்கிலப் பழமொழி. ஆனால் தற்சமயம் அது உபயோகமற்றதாகிவிட்டது. சரியான அளவுப்படி தைக்கப்பட்ட உங்கள் கோட்டுக்கூட, உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கி, இதைப் போல் உபயோகமற்றதாகிவிடலாம்! 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இல்லாத துணியானால் எப்பொழுதும் இப்படித்தான் நேரும். பல சலவைகளுக்குப் பிறகும் உங்கள் உடைகள் உடம்புக்குப்பொருந்தாதபடி ஒருபோதும் சுருங்காமலிருக்க நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கஜப்பருத்தித் துணியிலும், தயாரான ஆடைகளிலும் 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள்.

லேபில் மேல்

·SANFORIZED·


என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள். உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ. இன்கார்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-3A-TAM

வீட்டைவிட்டு ஊரைவிட்டு ஓடியவன் திரும்பி வந்தான். இனி அவன் என்றைக்குமே ஊரையும் வீட்டையும் விட்டுப் போகமாட்டான்...! அதற்குக் காரணம்....?



'ஜல், ஜல்' என்ற சத்தத்துடன் இரட்டைக் காளைகள் பூட்டிய வில் வண்டி கப்பிச் சாலையில் சென்று கொண் டிருந்தது.

சாலையின் இரு மருங்கிலும் புளிய மர - கள். அங்கங்கே சில ஆலமரங்களும் பரந்து விரிந்து பூதாகாரமாகக் காட்சி தந்தன. தூரத்தே தெரிந்த மாந்தோப்புக்களில் மாவடுக்கள் சூரிய ஒளியில் மரகதக் கற்களாய் மின்னின. சாலையை ஒட்டியே நெல் வயல்கள். நெல் மணிச் சுமையைத் தாங்க முடியாமல் ஒன் றன்மேல் ஒன்றாய்ச் சாய்ந்து கிடந்தன. அவற்றின் தோற்றத்தில் தான் என்ன பசுமை, என்ன மினுமினுப்பு!

தூரத்தில் ஒரு மூங்கில் காடு 'ஹூய்' என்று ஒய்யாரமாகக் கூச்சலிட்டது.

வண்டிக்குள்ளிருந்த சுந்தரம் தன் நினைவு பெறறுப் பெருமூச்செறிந்தான்.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பெற்றோர்களையும், தம்பி தங்கைகளையும் பார்க்க வருகிறான். அவன் தன் சொந்த ஊரான மேலட்டூரை விட்டுச் சென்ற காலத்தில் எல்லோரும் சிறியவர்கள். சுந்தரம் பிறந்து ஏழெட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் நடராஜன் பிறந்தான். அவனுக்கு இரண்டு தங்கைகள்.

'இந்த வருஷம் நாச்சு, ஆறுவது பாரம் பொதுப் பரீட்சை எழுதப் போகிறான் என்று அப்பா கடிதம் எழுதியிருந்தாரே?...மூன்றும் வகுப்போ, நான்காம் வகுப்போ படிக்கும் போது அவனைப் பார்த்தது. இப்போது நன்றாக வளர்ந்து விட்டிருப்பான். ஏன், கமலியும் கச்சியும் கூடத்தான் பெரிய பெண்களாக வளர்ந்திருப்பார்கள்! நான் போய் இறங்கினதும் அடையாளம் தெரிந்து கொள்வார்களோ, மாட்டார்களோ!...'

வண்டியின் வெளிப்புறத்தில் கண்களைப் பதித்திருந்த சுந்தரம் சற்றுத் தொலைவில் புது வண்ணம் பளிச்சிடச் சிறிய கோபுரம் ஒன்று தெரிவதைக் கண்டான்.

''வேம்பையா! அது என்ன புதுக்கோவில்?''

''புதுசு இல்லீங்க, பழைய விநாயகர் கோவில்தான்.''

''தக்ஷிணாமூர்த்தி விநாயகர் கோவிலா?''

''ஆமாம்.''

''போன மாசம் கும்பாபிஷேகம் பண்ணினுங்க. தெற்கு வீதி ராதா அய்யர் இல்லே? அவருதான் முன்னே நின்னு நடத்தி வச்சாரு.''

தட்சிணாமூர்த்தி விநாயகர் கோவிலைத் தாண்டிச் செல்கையில், பளபளவென்றிருந்த அதன் கும்பத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டான் சுந்தரம்.

வண்டி நடுத்தெருவைக் கடந்து மேலத் தெருவில் நுழைந்தது. வரதராஜப் பெருமான் ஆலயத்தின் முன்புறத்தில் தயாராகிக் கொண்டிருந்த பெரும் கீற்றுக் கொட்டகை தெரிந்தது.

''திருவிழாவா?''


''ராம நவமி வர்றதுங்களே?''

''எப்போதும் ராம மடத்திலேதானே ராமநவமி நடக்கும்?''

''இப்பவும் அங்கேதான் பஜனை, பாட்டுக் கச்சேரி எல்லாம். இங்கே, பாகவத மேளம் மட்டும் நடக்கிறது!''

பாகவத மேளம் என்ற சொற்களைக் கேட்டதும் சுந்தரத்தின் உடலில் புல்லரித்தது. முந்திய ஜன்ம நினைவுகளைப் போல, பதினைந்து ஆண்டுகளுக்கு முந்திய நிகழ்ச்சிகள் மனத் திரையில் சலனப் படம் ஆடின. 'பிரஹலாதா'வில் சுந்தரம்தான் பிரஹலாதன். இப்போது அவன் இரண்ய கசிபு வேஷத்துக்குத்தான் தகுதி!...

அதோ, அந்த வீடுதான். காவிப் பட்டை இற்றிய பெரும் திண்ணைகள்.



வாசலில் நிற்பது யார்? நாச்சவா?...அவ ளுக்குப் பின்னே பாவாடையும் மேலாக்குமாக ......கமலியாகத்தான் இருக்க வேண்டும்!

வண்டியிலிருந்து இறங்கினான், சுந்தரம்.

"என்னடா, அப்படிப் பார்க்கிறே?"

நாச்சவையும் இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். அப்பாவும் அம்மாவும் ரேழி யில் நின்று கொண்டிருந்தார்கள்.

"அப்பா......!"

அவனால் அதற்கு மேல் நகர முடியவில்லை. அப்பாவா அது?

ஐம்பது வயதில் எண்பது வயதுக்கான வயோதிகம் தெரிந்தது அப்பாவின் முகத்தில். தலைக் குடுமியில் கருமயிர் ஒன்றைக் கூடக் காணோம். கன்னங்கள் சுருங்கி. உடல் தளர்ந்து...! தும்பைப் பூப் போன்ற பஞ்ச கச்சமும் அங்கவஸ்திரமும்தான் அவரை அப்பா என்று எடுத்துக் காட்டின.

"வாடா......"என்றார் அப்பா.

ஓர் அடி எடுத்து வைத்து அம்மாவைப் பார்த்தான். பசு மஞ்சள் படிந்த துல்லிய மான முகம். பெரிய குங்குமப் பொட்டு. செவிகளில் சிவப்புத் தோடு......அம்மாவின் கண்கள் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன.

இரண்டு நிமிஷங்கள் கழித்து அப்பாதான் பேசினார்: "சரி! சரி! உள்ளே போ. அவன் தான் வந்துவிட்டானே?" இதைச் சொல்லி விட்டுத் தம்மைச் சமாளித்துக் கொள்வதற் காக அவர் வாசற்புறத்துக்கு விரைந்தார்!

***

சுந்தரம், மெலட்டூருக்கு வந்து நான்கு நாட்களாகி விட்டன. முதல் நாளன்று வீட் டில் எல்லோருக்கும் அதிசயப் பிராணியாக இருந்த அவன், இயற்கையான பாசத்துடன் பழக ஆரம்பித்து விட்டான்.

முதல் நாளை நினைத்துப் பார்த்தால் அவ னுக்கே வேடிக்கையாக இருந்தது. பெற்று வளர்த்த அம்மாவுக்கு அவனுடன் பேசத் தயக்கமாக இருந்தது. அப்பா, பட்டும் படா மலும் இருந்தார். நாச்சு ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டிருந்தான். கமலி, இரண்டொரு முறை அவன் கண்களில் பட்ட தோடு சரி. அவன் வலியச் சென்று பேசிய போதும், மௌனப் புன்னகைதான் பதிலாகக் கிடைத்தது. ரிப்பன் வளையல், 'க்ரோஷா' ஊசி முதலியன கிடைத்தபடியால் கச்சிமட் டும் 'அண்ணா! அண்ணா?' என்று அவனைச் சுற் றிக் கொண்டிருந்தாள்.

"கமலி! என்னோடு பேசவேமாட்டேன் என் கிறாளே?" என்று அம்மாவிடம் குறைப்பட்டுக் கொண்டான்.

"அவள் இன்னும் சின்னக் குழந்தையா? ஆச்சு, இந்த ஆவணிக்குப் பதினைந்து நிரம்பப்

போகிறது. காலா காலத்திலே ஒரு கல்யாணத்தைப் பண்ணி....''

'' அவன் என்னோடு பேசுவதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?''

''பெரிய பெண் இல்லையா? வெட்கமாக இருக்கும். இரண்டு நாட்கள் போனால் சரியாகப் போகும். தவிர...''

''சொல்லு, அம்மா...!''

ஆனால் அம்மா சொல்லவில்லை.

திண்ணையை ஒட்டிய அறைக்குள் சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டான் சுந்தரம். எதிரே பழங் காலத்து பெல்ஜியம் நிலைக் கண்ணாடி. அதில் அவன் உருவம் தெரிந்தது. அது மந்திரவாதியின் மாயக் கண்ணாடிபோல், நடந்த சம்பவங்களைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியது.

சுந்தரம் அப்போது பதினேழு வயதுப் பையன். தஞ்சாவூரில் ஆறாவது பாரத்தைப் படித்து முடித்துவிட்டு வீட்டோடு இருந்தான். கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டுமென்று அவனுக்குக் கொள்ளை ஆசை. அப்பா தான் தடை விதித்து விட்டார். நிலபுலன்களையும் தோட்டம் துரவுகளையும் பார்த்துக் கொள்வதற்கு அவனும் தன்னுடன் இருந்தால் நல்லது என்று எண்ணினார். மேலும், சுந்தரத்துக்குத் தேவாங்கு போன்ற உடல். கல்லூரி உணவு, விடுதிச் சாப்பாடு அவன் உடம்புக்கு ஒத்து வராது. அவனுக்காகத் திருச்சியில் ஒரு குடித்தனம் போடுவதென்றால் முடியுமா, என்ன ?

அப்பாவின் அடக்குமுறை சுந்தரத்துக்குப் பிடிக்கவில்லை. எப்படியேனும் அவருடைய கட்டுப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஒரு நாள். கடலைப் பிண்ணாக்கு எரு வாங்குவதற்காக அவனிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பினார் தந்தை ராமச்சந்திரய்யர். அதற்குப் பின் எட்டு வருஷங்கள் சென்ற பின்புதான் சராயும் சட்டையுமாகப் பையனைப் பார்த்தார்.

அன்றைக்கு இரவே எரு வாங்க வேண்டிய பணத்தில், ரயில் டிக்கட் வாங்கிக்கொண்டு பம்பாய்க்குப் பிரயாணமாகி விட்டான் சுந்தரம். 'என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். சௌக்யமாக இருக்கிறேன். அவ்வப்போது கடிதம் எழுதுவேன்' என்று மொட்டைக் கடிதம் எழுத மட்டும் அவன் தவறவில்லை.

பம்பாய் சென்ற புதிதில், மூன்று மாதங்களுக் கொருதரம் அவன் சௌக்கியத்தைத் தெரிவித்துக் கடிதம் வரும். விலாசம் கொடுக்க மாட்டான். கடிதத்தைக் கண்டு பெற்றோர்கள் மனம் கலங்குவார்கள்.

கடந்த மூன்று வருஷங்களாகத்தான் விவரமான கடிதங்கள் எழுதினான். ஒரு வியாபார ஸ்தாபனத்தில் வேலையாக இருப்பதாகத் தெரிவித்தான். விரைவில் ஊருக்கு வருவதாகவும் அடிக்கடி எழுதினான்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் ஒரு நாள் அவன் வந்தே விட்டான் !

அம்மா எப்படி வாய் திறந்து சொல்வாள்? 'நீ எங்களைத் தவிக்க விட்டு ஓடிப் போனவன். எங்கள் அன்பை உதறி விட்டுச் சென்றாய்.



இப்போது திரும்பி வந்தவுடனேயே எல்லோரும் உன்னோடு இழைய ஆரம்பித்து விடுவார்களா?' என்று.

***

அன்றைக்கு அவன் கண் விழித்தபோது மணி ஏழரை. அவன் திடுக்கிட்டு எழுந்து கொல்லைப்புறம் சென்று பல் துலக்கிவிட்டு வந்தான். அம்மா காப்பியும் கையுமாக எதிர்கொண்டு அழைத்தாள்.

'' அப்பா வெளியே போய் விட்டாரா?''

'' ஆமாம். வாய்க்காங்கரை நிலத்திலே அறுவடை நடந்திண்டிருக்கு.''

'' என்னை முன்னமேயே நீங்கள் எழுப்பியிருக்கக் கூடாதோ?''

'' ராத்திரி படுத்துக் கொள்கிறபோது மணி ஒன்றுக்கு மேல் ஆயிட்டுது... நீயும் பஜனையில் பாடினாயாமே? பாட்டெல்லாம் ஞாபகம் இருந்ததோ?''

'' இருந்தது. 'ஹரி நாராயண' என்று ஆரம்பித்துக் கொடுத்தார் ராமையா. எனக்கு ஆவேசம் பிறந்தமாதிரி யிருந்தது. பாட ஆரம்பித்தேன். அபங்கம், மங்களம் வரை ஒன்றையும் விடவில்லை. அஷ்டபதிதான் கொஞ்சம் மறந்து போச்சு!''

காலி டம்ளரை நீட்டினான் சுந்தரம். அம்மா மன நிறைவுடன் அடுக்களைக்குச் சென்றாள்.

''நாச்சு!'' என்று குரல் கொடுத்தான் சுந்தரம்.

''என்ன அண்ணா ?'' இடுப்பில் கட்டிய மேல் துண்டுடன் அவன் ஓடி வந்தான்.

'' என்ன பண்ணிண்டிருக்கே ?''

"துணி துவைக்கிறேன்."

"...ச...ரி..."

"ஏன் கூப்பிட்டே?"

"வாழைத் தோட்டத்துக்கு வேணுமானால் தண்ணீர் பாய்ச்சலாமான்னு பார்த்தேன்."

"அதையெல்லாம் கண்ணுசாமி பார்த்துக் கொள்வான்."

"அது சரிதாண்டா, ஒரு நாளைக்கு ஜாலியா பத்து, இருபது சால் நாம் இறைத்தால் என்ன? நேற்றைக்கே பார்த்தேன். மிளகாய்ப் பாத்தி வாடினமாதிரி இருந்தது."

அம்மா அதட்டிக் கொண்டே வந்தாள். "ஏண்டா! நீ பட்டணத்தான் மாதிரியே இல்லையே? பட்டிக்காட்டான் மாதிரி இருக்கே! யாராவது இப்படி வாழைத் தோட்டத்துக்குச் சால் இறைக்க ஆசைப் படுவார்களோ?"

சுந்தரம் நிமிர்ந்து நின்றான். "அம்மா எனக்கு இங்கே வந்த பிறகுதான் மனசு நிம்மதியா இருக்கு. வாய்க்கால் வெட்டாறு, கிழக்குளம் இவைகளைப் பார்க்கிறபோதுதான் மனசு நாகலப்படுகிறது. பம்பாயில் 'ஷவர் பாத்' பண்ணினேன். உடம்பு நனையவே யில்லை, அம்மா! உடம்பு நனையவில்லை! கிழக் குளத்தில் அக்கரைக்கு நீந்திப் போய்விட்டு வந்தேன். பன்னீர்த் தடாகத்தில் நீராடிய மாதிரி இருந்தது! பம்பாயில் 'வாரலப்பா' பாட்டு கேட்டேன், காதுக்கு இனிமையாக இருந்தாற்போல் தோன்றியது. ஆனால், நேற்றிரவு, பஜனையில் 'பிபரே ராம ரஸம்' பாடக் கேட்டபோது தான் உண்மையான இன்பம் கிடைத்தது! நான் இன்னமும் மெலட்டூரான்தான், அம்மா!"

பையனின் நீண்ட பேச்சு அம்மாவுக்குப் புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. ஆனால் ஒன்று மட்டும் அவள் நிச்சயமாகப் புரிந்து கொண்டாள்: முன்போலவே அவன், தன் இதயத்துக்கு மிக அருகேதான் இருக்கிறான்!

* * *

வெட்டாற்று மணலில் உட்கார்ந்து பேசி விட்டு எழுந்திருக்கும்போது மணி ஆறே முக்கால் ஆகிவிட்டது.

வடக்குத் தெருவிலுள்ள தன் வீட்டை நோக்கி நடக்கும்போது சுந்தரத்தின் மனத்தில் ஒரு பெரும் பூரட்சிகரமான போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

எட்டு ஆண்டுகள் பம்பாயில் இயந்திர வாழ்வு நடத்தியவன், அவன். அடி நாட்களில் அவன் செய்யாத வேலைகள் இல்லை. உயர்வு, தாழ்வு என்ற எண்ணம் தோன்றுவதற்கே இடமில்லை. வயிற்றுப் பசியைப் போக்கியாக வேண்டுமே! முக்காலணா கார்டில் ஒரு வரி எழுதிப் போட்டிருந்தால் அப்பா பறந்து வந்து அழைத்துக் கொண்டு போயிருப்பார். அவனுடைய வீம்பு அப்படிச் செய்ய இடம் கொடுக்கவில்லை.

இப்போது நிலைமை மாறிப் போய் விட்டது. கை நிறையச் சம்பளம், அந்தஸ்து, அதிகாரம். ஆனாலும், மனம் மட்டும் இயந்திர வாழ்வை ரசிக்கவில்லை.

மெலட்டூருக்கு வரும்போது கணக்கற்ற கனவுகளுடன் வந்தான்! கிராமத்தின் சாவதானமான, பரபரப்பற்ற, இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையை அனுபவிப்பதற்காக வந்தான். அது அவனுக்கு ஓரளவு கிடைத்தது. என்றாலும், தெருக்களில் அநேகம் வீடுகள் இடிந்தும் சரிந்தும் பாழடைந்தும் கிடந்தன. எத்தனை வீடுகள் சரிந்தனவோ, அத்தனை குடும்பங்கள் சரிந்தன என்றுதானே பொருள்? இந்த அவலக் காட்சி கிராமத்தார் கண்களில் படவில்லை. மூன்று குழி நிலத்துக்காக உயர்நீதி மன்றப் படிக்கட்டுக்களில் கால் தேய நடந்து கொண்டிருந்தார்கள்! திண்ணையில், கூஜாத் தண்ணீரையும் வெற்றிலைச் சீவலையும் மாறி மாறிப் போட்டுக் கொண்டு வெட்டிப் பொழுது போக்கிய இளைஞர் கூட்டம் 'அவனுக்கு வேணும்யா!' என்று கொக்கரித்துக் கொண்டிருந்தது.

இந்த நிலைமை மாறவே மாறாதா? மாற்ற முடியாதா...? மாற்றுவார் யார்?

அவன் சிந்தனை நீடிப்பதற்குள்ளாக வீடு வந்துவிட்டது. வீட்டுக்குள் நுழைந்ததும், "எங்கேடா போயிருந்தாய்?" என்று அவன் அப்பா கேட்டார்.

"சும்மா, ஆற்றங்கரைப் பக்கம்......"

"வெள்ளிக்கிழமை. கோவிலுக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாயே?" என்றார்.

"ஆமாம். இதோ, புறப்படுகிறேன். விக இல்லையா?"

"இப்போதான் வெளியே போனான். இந்த வருஷம் பாகவத மேளாவில் அவன்தான் மிருகண்டு முனிவர் வேஷம். ஒத்திகை பார்ப்பதற்காகப் பாகவதர் வீட்டுக்குப் போயிருக்கான்...கச்சியை வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போயேன்."

"சரி......!"

இருவரும் தெருவில் இறங்கி நடந்தார்கள். ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் கோவில் வாசலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

உன்னதபுரீசுவரர் சன்னதியில் ஆட்களையே காணோம். இரும்புக் கம்பிகளுக்கு உள்ளே சுவாமி பத்திரமாக இருந்தார்!

அவன் ஒவ்வொரு சந்நிதியாக நின்று தரிசனம் செய்து கொண்டே வந்தான். கச்சி, "அண்ணா, சீக்கிரம் வாயேன்" என்று உரக்கக் கூவினாள்.

"என்ன, அவசரம்?"

"அம்மன் சந்நிதியில் மணி அடிக்கிறது. தீபாராதனை சமயம்."

சுந்தரமும் கச்சியும் அம்மன் சந்நிதிக்குள் நுழையுகையில், குங்குமப் பிரசாதம் பெற்றுக் கொண்ட பெண்களின் கூட்டம் வெளியே வந்து கொண்டிருந்தது.

அதோ, அது யார்? மின்மினிகளுக்கிடையே ஒளி வீசும் தாரகையா?.........முழங்கையை மறைக்கும் சோளியும், சிங்கப்பூர் சில்க் தாவணியுடன் பச்சைப் பாவாடையும், முகத்தில் தெளிவு, உதட்டில் புன்னகை, நடையில் ஒயில்...! தோழியருடன் கூடிய ராஜகுமாரிபோல் நடக்கிறாள்......

அவன் தலை நிமிர்கிறான். சுந்தரத்தை இரு கயல் விழிகளாலும் காண்கிறாள். ஒரு கணம் நிலையாகிப் பின் உயிர் பெறுகிறான்...

இப்போது அவனைக் கடந்து செல்கிறாள். தலை, என்னமோ, குனிந்து தான் இருக்கிறது.

பத்தடி சென்று ஒரு தடவை திரும்பிப் பார்க்கிறான். ஏன்?

கச்சி, குரல் கொடுக்கும் வரை, சுந்தரம் தலையைத் திருப்பவில்லை!

உள்ளே, சிவப்பிரியாம்பிகை திவ்யமாகத் தரிசனம் தந்து கொண்டிருந்தாள். அவள் முகப் பொலிவை, நெய் விளக்குச் சுடர் மிகைப்படுத்திக் காட்டியது. ஒரு கணம், கட்டுக்கடங்காத மனத்தைக் கட்டுப்படுத்தி. அம்பாளைத் தியானித்தான் அவன்.

திரும்பவும் கோபுர வாசலுக்கு வந்தபோது மணி எட்டு அடித்து விட்டது. ஊரில் அரவம் அடங்கி விட்டிருந்தது.

நடுத் தெருவைத் தாண்டி வடக்குத் தெருவுக்குள் நுழைந்த போது வீணையின் சுகமான நாதம் சுந்தரத்தின் செவிகளில் விழுந்தது.

"கச்சி! பிச்சா மாமாவீட்டிலே ரேடியோவா இருக்கு?"

"ஊஹூம்!"

"பின்னே, வீணை வாசிப்பு எங்கே?"

"பிச்சா மாமா வீட்டிலே தான்!... கோவில்லே பார்த்தாயே, ஒரு பெண்-அவள் தான் வாசிக்கிறாள்."

தன்னருகே யாரோ மருடி வாசித்துத் தன்னைக் கட்டிப் போட்டு விட்டாற்போலிருந் தது, சுந்தரத்துக்கு!

"அவளா!"

"ஆமாம்! அதற்கு நீ ஏன் இவ்வளவு சந்தோஷப் படறே?"

"இம்ம்?...ரீதி கௌளை, என்ன நிதான மான சஞ்சாரம் பாரேன்!..."

"ஐயோ, நட, அண்ணா!"

"இரு. இந்தப் பாட்டை மட்டும் கேட்டு விட்டுப் போகலாம்."

கச்சி, அவனைப் புரிந்து கொண்ட மாதிரிச் சிரித்தாள் தன்னுள் மகிழ்ந்தபடியே. சுட்டிப் பெண் ஆயிற்றே அவள்!

***

மொட்டை மாடியில் போட்டிருந்த கீற்றுக் கொட்டகையில் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. கயிற்றுக் கட்டிலில் படுத்து உறங்கி விட்டுச் சுந்தரம் கண் விழித்த போது மணி மூன்று. மாடியிலிருந்து இறங்கிக் கூடத்துக்கு வந்தான்.

கையில் ஜாதகக் குறிப்புக்களுடன் அப்பா உட்கார்ந்திருந்தார். அம்மா அருகில் நின்றாள்

"கபிஸ்தலம் வெங்கட்ராமய்யர் வந்திருந் தார். இப்போது தான் போனார். உனக்குக் கூட அவரைத் தெரியுமே?" என்றார் அவன் தந்தை.

"ஆமாம். நாலு நாட்கள் முன்னே பார்த் தேன். அறுவடையை முடித்துக் கொண்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தார்..."

"இரண்டே பெண்கள். மூத்தவளுக்குக் கல்யாணமாகி விட்டது. இரண்டாவது பெண் ஜாதகத்தைக் கொடுத்திருக்கிறார்..."

அம்மா பெருமிதத்துடன் தனயனின் முகத்தைப் பார்த்தாள். பதினாயிரம் ரூபாய் ரொக்கமும் வீடு கொள்ளாத அளவுக்குப் பாத்திரங்களும் நாலைந்து வேலி நிலமும் அவள் கண்முன் நட்டமாலை சுற்றின!



"ஏனய்யா உங்களை அடிக்க வந்தவனிடம் உங்கள் கைத்தடியையே கொடுத்தீர்களாமே!"

"பின்னே அவன் கைத்தடி, என்னுடையதைவிட ரொம்பப் பருமனாக இருந்தது; அதனால்தான்!"

"எனக்கு இப்போது கல்யாணம் வேண் டாம், அப்பா..."

"ஏண்டா?"

இந்தக் கேள்வி அவன் செவிகளில் விழ வில்லை ரீதிகௌளையின் நிதானமான சஞ் சாரம், மெல்லப் புகுந்து அவனை மயக்கிக் கொண்டிருந்தது!

அவனிடமிருந்து பதில் வராதது, தந்தைக் குத் தவிப்பாய் இருந்தது. "பம்பாயிலே யாரையாவது......"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுந்தரத் துக்கு அழ வேண்டும் போலிருந்தது.

கச்சி அருகே வந்து அவன் கையை அசைத் தாள் "அண்ணா. சொல்லி விடட்டுமா?"

"எதை?"

"அன்னைக்கு ...உம்?...சிவன் கோவிலில்!"

சுந்தரத்துக்கு உடலெங்கும் ஜில்லென்று உணர்ச்சி பரவியது.

அம்மா அதட்டினாள். "என்னடி?...... சொல்லேன்!"

"பிச்சாமாமா வீட்டுக்கு வந்திருக்காளே.."

"......மச்சினிப் பொண்ணு?"

"ஆமாம்!......அவள்தான் இந்த வீட்டுக் குப் பெரிய மருமகள்......!"

பெற்றோர்கள் ஒரு நிமிஷம், பேச்சற்று நின்றார்கள்.

"சுத்தத் திராபையான இடமாச்சே! ஏதோ நாலு கிளாஸ் படிச்சிருக்காளாம். பட்டணத்துப் பொண்ணு. பெரிய லீவுக்காக வந்திருக்காள்......அவள் குலுக்கலும் மினுக் கலும்......!"

"அம்மா!" என்று அலறினான், சுந்தரம்.

"ஏண்டா. என்னை அடக்கறே?... அரைமா நிலம் கூட இல்லாத குடும்பம். கை வீசிச் செலவு பண்ணக்கூட முடியாது. அவர்க ளாலே. அன்னைக்கே விசாலம் வந்து நோட் டம் பார்த்தாள். நான் இடமே கொடுக்க வில்லை. ஆசை இருக்கு. தாசில் பண்ண, அதிர்ஷ்டம் வேண்டாமா......?"

செல்வத்தின் நிலையாமையைக் குறித்து ஒரு சொற்பொழிவே நடத்த விரும்பினான், சுந்தரம். அதற்குள் தந்தை குறுக்கிட்டார்:

"பாலி! நீ உள்ளே போ. அப்புறம் பேசிக் கொள்ளலாம்..."

அம்மா கீழ்ப்படிந்தாள்.

***

இருபத்தெட்டு நாட்கள் கணப்பொழுதாக மறைந்து விட்டன. இன்னும் இரண்டு நாட்களில் சுந்தரம் புறப்பட்டாக வேண்டும். எதிலுமே விருப்பமில்லாதவன் போல் காணப்பட்டான் அவன்.

வழக்கம் போல் அன்றைக்கும் திண்ணையில் நீராடிக் கொண்டிருந்தான் சுந்தரம். கச்சி வந்து அழைத்தாள். "அண்ணா! உன்னை யாரோ பார்க்க வந்திருக்கா."

"என்னையா?...யாரு?..."

"தெரியல்லே. புதுசா இருக்கு."

"உட்காரச் சொல்லு. வந்துட்டேன்."

பத்து நிமிஷங்களுக்குப் பின், வேஷ்டியைக் கட்டிக் கொண்டு திண்ணைப் பக்கம் வந்தான். திண்ணையில் காத்துக் கொண்டிருந்தவரைக் கண்டு பிரமித்துப் போனான்.

"சார்! நீங்களா!"

"நீ எப்படி இங்கே வந்தாய்?"

"இது எங்கள் வீடு. உள்ளே வாருங்கள். நான் இங்கே இருப்பதை நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?"

"உன்னை எதிர்பார்க்கவில்லை, நான்! யாரோ பம்பாய்வாசி இருப்பதாகப் பெரியப்பா சொன்னார். யார் என்று பார்க்கலாம் என்பதற்காக வந்தேன்."

இருவரும் உள்ளே வந்தார்கள். அப்பா பாராயணத்தை முடித்துக் கொண்டு எழுந்து வந்தார்.

"அப்பா! இவர் வந்து...என் தெய்வம்!" உணர்ச்சியோடு கூறினான் சுந்தரம்.

"சேச்சே, அப்படியெல்லாம் சொல்லாதே!"

"நான் பம்பாயில் காலடி வைத்தவுடன் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? புது இடம், புது முகங்கள், புது பாஷை! கையிலிருந்த காசெல்லாம் கரைந்து பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்தேன். இவர்தான் காப்பாற்றினார்! இன்றைக்கு நான் இருக்கும் நிலைமைக்கு இவர்தான் காரணம்!" அவன் கண்கள் பளபளத்தன.

"ரொம்பப் புகழாதே, சுந்தரம்! நீ பெரிய இடத்துப் பிள்ளை. எல்லாம் பெரியப்பா சொன்னார்."

"இச்சா வீட்டுக்கு வந்திருப்பது நீதானா?" என்று தந்தை கேட்டார்.

"ஆமாம்."

"அந்தப் பெண்....?"

"என் கடைசித் தங்கை. சகுந்தலா என்று பெயர். இந்த வருஷம் பாகவதமேளாவைப் பார்ப்பதற்கென்றே இங்கே வந்தாள். ரொம்பப் பிரமாதமாக நடந்ததாமே? 'இவர்களெல்லாம் பட்டணத்துக்குப் போய் நடத்தினால் என்ன?' என்று கேட்கிறாள்! இந்தக் கிராமமே அவளுக்குப் பிடித்து விட்டதாம்!"

சுந்தரத்தின் நெஞ்சம் விம்மிதமுற்றுக் கொண்டிருந்தது. ஓரக் கண்ணால் அப்பாவைப் பார்த்தான். அவர் தம்மெதிரே நின்று கொண்டிருந்த சகுந்தலாவின் தமையன் நாராயணனை ஊடுருவிக் கொண்டிருந்தார்.

"உங்கள் தங்கைக்கு இந்த வருஷம் கல்யாணம் பண்ண வேண்டுமோ?"

"ஆமாம்! நான் அதற்காகத்தான் லீவு போட்டு விட்டு வந்திருக்கிறேன். வரன் ஒன்றும் குதிரவில்லை."

"அவள் இந்த வீட்டுக்கு மருமகளாக வருவதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?"

நாராயணன் திகைத்து விட்டார்.

"நாங்கள் அதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும், ஸார்......! யாதச் சம்பளத்தை நம்பிப் பிழைப்பவர்கள், நாங்கள். பத்துவேலி மிராசுதார் குடும்பத்துடன்..."

"வேண்டாம். இனி ஒன்றும் சொல்லாதீர்கள். என் பிள்ளையைக் காப்பாற்றியிருக்கிறீர்கள், நீங்கள். நான் அதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்...?"

அப்பாவின் கம்பீரமான உள்ளத்தைக் கண்டு சுந்தரம் பெருமிதம் அடைந்தான். அவருடைய பண்பட்ட இதயம் அவன் நெஞ்சத்தைத் தொட்டது.

"அப்பா..."

"இன்னும் ஒரு மாதம் லீவு வாங்கிக் கொள்கிறாயா? அல்லது..."

"நான் நாளன்றைக்கே புறப்பட்டாக வேண்டும். போய்க் கால் கடுதாசியை எழுதிக் கொடுத்துவிட்டு இங்கேயே வந்து விடப் போகிறேன்!"

சமையற்கட்டிலிருந்து, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அம்மாவுக்கு வயிற்றில் பால் வார்த்தாற் போலிருந்தது.

***

வேம்பையன் வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான், திட்டை ஸ்டேஷனை நோக்கி.

"வேம்பையா!"

"எசமான்!"

"உன்னை ஒன்று கேட்பேன். ஒளிக்காமல் பதில் சொல்வாயா?"

"கேளுங்க, எசமான்."

"இந்தக் கல்யாணத்தைப் பற்றி அப்பா உன்னிடம் என்ன சொன்னார்?"

"ஐயாவுக்குச் சம்மதம்தான். இப்பவே பெரிய திட்டம் போட ஆரம்பிச்சிட்டாங்க. அம்பலூரார் மணி அய்யர் சமையல், செம்பனார் கோவில் மாரிமுத்துப் பிள்ளை தவுல்...!"

"இன்னும் இருபது நாள்தானே, இருக்கு."

"நீங்க, அடுத்த வாரமே திரும்பி வந்துவிடுவீங்களாமே?"

"ஆமாம். வந்து, நான் என்ன செய்யப் போகிறேன், தெரியுமா?...நானும் சகுந்தலாவும் இந்தக் கிராமத்தை மேன்மையான நிலைக்குக் கொண்டு வரப் போகிறோம்! எனக்கு உதவி செய்வதாக அவள் நேற்று என்னிடமே சொன்னாள்..."

"உங்ககூடப் பேசினாங்களா?"

"ஆமாம்."

"டவுன்காரங்க இல்லே?"

சுந்தரத்தின் நினைவு புது உலகத்தைப் படைக்கும் திட்டத்தில் ஈடுபடத் தொடங்கியது. ஆம், அவன் புது உலகத்தில் நடமாடும் நாள் அதிக தூரத்தில் இல்லை!

இந்தக் கதையில் வரும் ஒரு காட்சியைத்தான் இவ்விதழ் அட்டைப்படமாக ஓவியர் லதா வழங்கியிருக்கிறார்.


REX
ரெக்ஸ் "பானங்களின் ராஜா"
ஆரஞ்சு ஸ்க்வாஷ் . லெமன் ஸ்க்வாஷ் . லைம் ஜூஸ் கார்டியல் . லெமன் பார்லி . ஸிரப்ஸ்
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம். (இந்) பிரை லிட்.
பம்பாய் 1
இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்:
பாரி அன்டு கோ. லிமிடெட்.

அத்தியாயம் 12

அறிவும் வீரமும்

படைகளைப் போர்முனைக்கு அனுப்பச் செய்கிறவரை தன்னிடம் கோபித்துக் கொள்ளாமல் தந்திரமாக நடந்து கொண்ட மகாமண்டலேசுவரர் காரியம் முடிந்ததும் அவ்வாறு கண்டிப்பும், கடுமையும் காட்டுவாரென்று தளபதி எதிர்பார்க்கவே இல்லை. பொங்கும் சினத்தோடு அவர் வாரி இறைத்த வரம்பு கடந்த ஆத்திரச் சொற்கள் அவனது இயற்கைக் குணமான முரட்டுத்தனத்தைக் கிளர்ந்தெழச் செய்தன. பழக்கப்படாத புதுப்பாகன் பயந்து கொண்டே பெரிய மதயானையை நெருங்குகிற மாதிரித் தயங்கும் மனத்தோடும், தயங்காமல் சிவந்து சினம் கனலும் கண்களோடும், மகா மண்டலேசுவரரைப் பார்த்தான் தளபதி. அந்தப் பார்வையைப் பொறுக்காமல்; சீறினார் மகாமண்டலேசுவரர்.

"அப்படிப் பார்க்காதே நீ! உன் கோபம் என்னை ஒன்றும் செய்து விடமுடியாது. அன்று கன்னியாகுமரியிலிருந்து நீ இடையாற்று மங்கலத்துக்கு என்னைத் தேடிக் கொண்டு வந்த இரவிலிருந்து இந்த விநாடி வரை ஒவ்வொன்றாக எத்தனை தவறுகள் புரிந்திருக்கிறாய் என்று எண்ணிக் கொண்டே வந்திருக்கிறேன் நான். ஒழுக்கத்தையும், பண்பையும், போற்றி ஆளத் தெரியாத நீ படைகளை ஆளத் தகுதியற்றவன். வீரத்தை ஆளத் தகுதியற்றவன். போரை ஆளத் தகுதியற்றவன். போர்க்களத்தை மிதிக்கக் கூடத் தகுதியற்றவன்."

"நிறுத்துங்கள். மகாமண்டலேசுவரர் என்ற பதவிக்கும், அறிவுக்கும், என் நெஞ்சம் செலுத்தி வந்த மரியாதையை நான் விடவேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. இந்தக் கணம் முதல் அந்த மகாமேதையை நான் ஒரு சாதாரண எதிரியாகப் பாவிக்க வேண்டியதுதான். நான் சாதாரண எதிரியாகப் பாவிக்கத்தக்க மனித உணர்ச்சிக்கு அவரும் ஆளாகிவிட்டார்" என்று தளபதி அவர் முகத்தைத் துணிவுடன் நிமிர்ந்து பார்த்துக் கொண்டே கூறினான். அவன் வார்த்தைகள் அவருடைய கோபத்தை மேலும் தூண்டிவிட்டன.

"முட்டாள்களின் மரியாதையை அறிவாளிகள் எப்போதுமே எதிர்பார்ப்பதில்லை, தளபதி! என்னை எதிரியாக ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நீ பெரியவன் என்பதைக் கூட நான் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. ஒரு இரகசியத்தை நீ இந்தச் சமயத்தில் என்னிடமிருந்து தெரிந்து கொள். அறிவின் நுனி மிகவும் கூர்மையானது. நன்றாகத் தீட்டப்பட்ட கத்தியைப் போல் சந்தர்ப்பமும் வீசும் இலக்கும் கிடைத்தால் அதற்கு எதையும் குத்தி அழிக்க வலிமை உண்டு. சந்தர்ப்பமும் இலக்கும் தவறி விட்டால் கை தவறி விழுந்து தானே கூராழியும் கத்தியைப் போல் தன்னையே அழித்துக் கொள்ள வேண்டியதுதான்."

தளபதியின் முகத்தில் கோபவெறி கூத்தாடியது. கைகள் எதற்காகவோ துடித்தன. முகம் முழுதும் கருணைக் கலப்பற்ற கொடுமை மறம் வந்து குடி கொண்டிருந்தது. அவன் வெறியனாக மாறினான்.

"மகா மண்டலேசுவரரே! எனக்கு அறிவின் வலிமையைப்பற்றிய இரகசியம் தெரிய வேண்டியதே இல்லை. ஆனால் வீரத்தின் இரகசியம் இதுதான் என்பதை இப்போதே உங்களுக்குத் தெரிவிக்கிறேன். தான் அழிவதாயிருப்பினும் அப்படி அழியுமுன் எதிரியை முதலில் அழித்துத் தீர்ப்பதுதான் வீரத்தின் வலிமை" என்று கூறிக் கொண்டே குபீரென்று வாளை உருவிக் கொண்டு; அவர்மேல் பாய்ந்தான்.

அவன் நினைத்தது போல்; அவர் பயந்து ஓடவோ, இடுக்கிட்டுக் கூச்சலிடவோ இல்லை. அவன் அப்படிச் செய்வான் என்பதை முன்பே எதிர்பார்த்தவர்போல் அசையாமல் நின்றார். அளப்பரிய ஆற்றல் நிறைந்த தம் கண்களை இமைக்காமல் குத்துவதற்கு வாளை ஓங்கிக்கொண்டு வரும் அவனையே பார்த்தார். சலனமும் அசைவுமற்ற சிலையாகி விட்டாரா அவர்? பின்னால் கட்டிக் கொண்ட கைகளை எடுக்காமல் மார்பை நிமிர்த்திக் கொண்டு நின்ற அந்தத் தோற்றத்தை நெருங்கி நெஞ்சுக்குக் குறி வைத்து வாளை ஓங்கிய போது தளபதியின் கை வெடவெடவென்று நடுங்கியது; மனமும் நடுங்கியது. கால்களும் நடுங்கின. நேர் கொண்டு பார்க்கும் அந்தக் கண்கள் இரண்டும் கணத்துக்குக் கணம் பெரிதாய்ப் பிரமாண்டமாய் அகன்று விரிந்து தன்மேல் கவிந்து தன்னை அமுக்குவது போல் ஒரு பிரமை ஏற்பட்டது அவனுக்கு.

அந்தப் பிரமை ஏற்பட்ட அடுத்த விநாடி அவன் முகம் வெளிறியது.

பாண்டிமாதேவி

நா. பார்த்தசாரதி



கண்கள் மருண்டன. உடல் நடுங்கி ஓய்ந்தது. கையிலிருந்த வாள் நழுவிக் கீழே விழுந்தது. ஏதோ ஒரு பயம்—காரணமற்ற பயம் அவனைத் தடுத்தது. ஒவ்வோர் அடியாக நகர்ந்து பின் வாங்கினான் அவன். என்ன செய்கிறோம் என்ற உணர்வே யின்றிப் பின்னால் நகர்ந்துகொண்டே இருந்தான் தளபதி. மகாமண்டலேசுவரர் என்ற அகண்டமான தோற்றம் அப்படியே நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது.

"தளபதி! ஏன் தயங்குகிறாய்? எதற்காகப் பின்வாங்குகிறாய்? என்னை அழித்து விடுவதற்கு இதைப்போல் தனிமையான சந்தர்ப்பம் இனி வேறு எப்போது உனக்கு வசதியாகக் கிடைக்கப் போகிறது? இப்போது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்" என்று மகாமண்டலேசுவரர் வாய்திறந்து சொன்னபோது தளபதி அவருக்கு அருகிலேயே இல்லை. சிறிது தொலைவு தள்ளி ஒதுங்கிப் பயந்து நிற்பவன்போல் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் வியர்வை அரும்பி வழிந்தது. உடலில் ஏற்பட்டிருந்த நடுக்கம் இன்னும் முழுமையாகத் தீரவில்லை. தெரியாமல் பாம்புப் புற்றை மிதித்துவிட்டு இடறி விழுந்தவன் பயத்தோடு எழுந்து நிற்கிறமாதிரி நின்றான் வல்லாளதேவன்.

வானத்துக்கும், பூமிக்குமாக, நிறுத்தி வைத்த சிலைபோல் அசையாமல் நின்று கொண்டிருந்த மகா மண்டலேசுவரர் மெல்லக் கீழே குனிந்தார். நழுவி விழுந்து கிடந்த தளபதியின் வாளைக் கையில் எடுத்துக் கொண்டார். நிதானமாக அடி யெடுத்துவைத்து நடந்தார். அவனை அணுகினார். ஒருவர் மூச்சுக் காற்றை மற்றொருவர் உணர முடிகிற அளவுக்கு நெருங்கி நின்று கொண்டார்.

"இந்தா; உன்னுடைய வாள். இப்போது என் நெஞ்சுக் குழி உன் கைக்கு மிக அருகில் இருக்கிறது. பாய்வதற்கும், வாளை ஓங்குவதற்கும் வேண்டிய சிரமத்தைக் கூட உனக்கு நான் அளிக்கத் தயாராயில்லை. என்னை இந்த வாளால் கொன்று விடு. நான் அழிந்து போக வேண்டிய காலம் வந்துவிட்டது. இப்போதுள்ள சூழ்நிலையில் நான் அழிவது உன்னைப் போலவே இன்னும் பல பேருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். குழற்கால் மாறனும், அவரோடு சேர்ந்த கூற்றத் தலைவர்களும் என்னை இவ்வளவு சுலபமாகக் கொன்றதற்காக உன்னைப் பாராட்டுவார்கள். படையெடுத்து வந்திருக்கும் பகையரசர்கள் பெருமை கொள்வார்கள். என்னுடைய அறிவின் கூர்மைக்குப் பயந்து தங்களுடைய எண்ணற்ற பேராசைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தெரியாமல் தயங்கிக் கொண்டிருக்கும் எத்தனை பேருக்குத் திருப்தி யளிக்கும் தெரியுமா, இந்தக் கொலை?" அவருடைய சொற்களின் வேகத்தையும், கண்களின் கூர்மையான பார்வையையும் மிக அருகில் தாங்கிக் கொள்ள முடியாமல் தலைகுனிந்தான் தளபதி.

"இவ்வளவுதானா உன் துணிவு? நீ உண்மை வீரன் இல்லை. உணர்ச்சியால் முரடன். மனத்தால் கோழை. உன்னை எதிரியாகக் கொள்வதற்கேற்ற தகுதியும், பெருமையும் கூட உனக்குக் கிடையாது. நீ சாமான்யமானவன்" என்று ஏளனமாகச் சொல்லிக் கொண்டே கையிலிருந்த வாளை அலட்சியத்தோடு சுழற்றி மூலையில் வீசி எறிந்துவிட்டார் மகா மண்டலேசுவரர். வல்லாளதேவன் தலை நிமிரவே இல்லை.


"உன் உணர்ச்சிகளை என் சாமர்த்தியத்தினால் கிளறி வேடிக்கை பார்க்க விரும்பவில்லை நான். ஆயிரக்கணக்கான வீரர்களின் மதிப்புக்குரிய படைத் தலைவனே! நீ உண்மையில் குற்றவாளி. நான் உன் மேல் கொண்ட ஆத்திரம் நியாயமானது. நீ பதிலுக்கு என் மேல் ஆத்திரப்படுகிறாயே; அதுதான் நியாயமற்றது. என் மேல் அவ்வப்போது உனக்கு ஏற்பட்ட அவநம்பிக்கைகளும், சந்தேகங்களும், உன்னை என்னென்னவோ செய்யத் தூண்டி யிருக்கின்றன. அறியாமையால் தாயின் ஒழுக்கத்தைப் பற்றியே சந்தேகப்படும் பேதைப் புதல்வனைப் போல் நீ என்னைச் சந்தேகத்தோடு நோக்கி வந்திருக்கிறாய். உன்னுடைய சந்தேகங்களை இதுவரை மன்னித்து வந்திருக்கிறேன். நீ கடைசியாகச் செய்த தவறு குமாரபாண்டியனைக் காண்பதற்காக உன் தங்கையை இரகசியமாக ஈழ நாட்டுக்கு அனுப்பியது. இவையெல்லாம் எனக்குத் தெரியாதென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். முகத்தின் கண்களால் முதுகுக்குப் பின் நடப்பதையும் உணர எனக்குத் தெரியும்."

"எல்லாம் தெரிந்த உங்களுக்கு நீங்களே செய்கிற சில தவறுகள் மட்டும் ஏன் தெரியவில்லையோ? நேற்று வரை தென்பாண்டி நாட்டின் படைகளைக் கட்டிக் காத்து அணி வகுத்தவன் நான். போருக்குப் பயிற்சி கொடுத்தவன் நான். இப்போது திடீரென்று படைகளை முன்னால் அனுப்பிவிட்டுஎன்னைத் தனியே நிறுத்தி அவமானப் படுத்துகிறீர்கள். நான் போருக்குத் தலைமை தாங்கத் தகுதியற்ற குற்றவாளி என்கிறீர்கள். குமாரபாண்டியர் வந்துவிசாரித்துத் தீர்ப்புக் கூற வேண்டும் என்கிறீர்கள்? விசாரித்துத் தீர்ப்புக் கூறுமளவுக்கு நான் என்ன தப்புச் செய்திருக்கிறே



னென்று எனக்கே தெரியவில்லை." தலைகுனிந்து நின்ற தளபதி வல்லாளதேவன் சற்றே நிமிர்ந்து அவரைக் கேட்டான்.

"தெரியவில்லையா உனக்கு? நீ செய்தவற்றில் எது ஒழுங்கு, எது தவறு என்று உனக்கே பகுத்துணர முடிந்தால்தானே உன் குற்றங்களை நீ தெரிந்து கொள்ள முடியும். முதன் முதலாக என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் இடையாற்று மங்கலத்திலிருந்து ஓடி வந்தாயே; அந்த இரவிலிருந்தே உன் தவறுகள் ஆரம்பமாகி விட்டன. அரண்மனையில் உளவறிவதற்கு ஆபத்துதவிகள் தலைவனை உன் கையாளாகப் பயன்படுத்தினாய். இடையாற்று மங்க



லத்தில் என் மாளிகையிலிருந்து இரவோடு இரவாக ஆயுதங்களைத் திருட ஏற்பாடு செய்தாய். குமாரபாண்டியரை அழைத்து வர நான் ஒருவன் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை நம்பாமல் நீ உன் தங்கையை அனுப்பினாய்."

"இதே வகையில் எனக்குத் தாங்களும் சில தவறுகளையும், குற்றங்களையும் செய்திருக்கிறீர்களென்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்."

"செய்திருக்கலாம். மறுக்கவில்லை. எனக்குப் பொறுப்புகள் அதிகம். என் நிர்வாகம் பெரியது. நான் உன் மேல் சந்தேகப்பட்டு உன்னைச் சோதனை செய்திருந்தால் அது நியாயமானது. படைகளைத் தவிர வேறெந்தப் பொறுப்பையும் பற்றிக் கவலைப்பட வேண்டாத நீ அனாவசியமான

கவலைகளை உண்டாக்கிக் கொண்டு இப்படி யெல்லாம் செய்தது மன்னிக்க முடியாத தவறு."

"நான் நினைத்தால் இன்னும் ஒரு பெரிய தவற்றையும் செய்ய முடியும். இப்போதே ஓடிப் போய் என் அதிகாரத்துக்கு அடங்கிய அத்தனை படைகளையும் போர்முனைக்குப் போகாமல் தடுத்து நிறுத்திவிட முடியும். மகாமண்டலேசுவரர் அப்போது என்னைக் கெஞ்சுவதைத் தவிர வேறு வழியில்லை."

"கனவிலும் அப்படி நினைக்காதே, தளபதி! உன்னால் அதைச் செய்ய முடியாது. நீ இப்போது என் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நிற்கும் சாதாரணக் குற்றவாளி. அகந்தையினால் உன் நிலையைப் புரிந்து கொள்ளாமல் பேசாதே!"

"முடிகிறதா, இல்லையா என்றுதான் பாருங்களேன்" எனத் தன்மானத்தோடு சொல்லிவிட்டு வெளியேறினான் அவன். பின்னால் அவர் சிரிக்கும் ஒலி அவனுடைய செவிகளை எட்டியது. மகாமண்டலேசுவரரிடம் வீறாப்பாகப் பேசி விட்டு வெளியே வந்த அவன் மேலே நகர முடியாமல் அப்படியே திகைத்துப் போய் நின்றான். வெளியே அந்த இடத்தைச் சுற்றிலும் இடையாற்று மங்கலத்து யவனக் காவல் வீரர்கள் உருவிய வாளுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான் தளபதி. மகாமண்டலேசுவரரின் முன்னேற்பாடு அவனுக்குப் புரிந்தது. எப்போது எப்படி அந்த வீரர்களை அங்கே வரவழைத்துக் காவல் போட்டாரென்று அனுமானிக்கவே முடியாதபடி அவ்வளவு சாதுரியமாகச் செய்திருந்தார்.

"ஓகோ! புரிகிறது..." என்று கடுமையாகக் கூறிக்கொண்டே பின்னால் சிரித்தவாறு நின்ற மகாமண்டலேசுவரரைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

"வேறொன்றுமில்லை, தளபதி! உன் அதிகாரத்துக்குட்பட்ட படைக் கோட்டத்திலேயே உன்னைச் சிறை வைத்துப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை. அதை நிறைவேற்றிக் கொண்டேன்" என்றார் அவர்.



"இது கேவலமான சூழ்ச்சி!"

"இருக்கட்டுமே. அப்படியே பார்த்தாலும் நீ செய்த காரியங்களை விடக் கேவலமானதில்லை இது. குமார பாண்டியர் வருகிற நாளாயிற்று. நான் விழிஞத்தில் போய் அவரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். அவர் வந்ததும் இங்கே அழைத்து வருகிறேன். அதுவரையில் உன் நிலை இதுதான்" என்று சிறிதும் இரக்கமின்றிச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினார் மகாமண்டலேசுவரர். கூண்டிலடைபட்ட புலி போல் வெகுண்டு நின்றான் தளபதி வல்லாளதேவன். போர்க்களத்தில் படைகளை ஆண்டு போர் புரிய வேண்டிய நல்ல சமயத்தில் அநாதையைப் போல் தனியே நிறுத்திக் காவல் வைக்கப்பட்ட சூழ்ச்சியை எண்ணிக் குமுறினான் அவன்.

மகாமண்டலேசுவரரோ தளபதி என்ற வீரப் புலியைச் சாமர்த்தியமாகச் சிறைப்படுத்திவிட்ட பெருமிதத்தோடு மகாராணியைச் சந்திப்பதற்காக அரண்மனைக்குச் சென்றார். நாடு முழுவதும் வென்றூரில் நடந்து கொண்டிருக்கும் போரின் முடிவு என்ன ஆகுமோ என்ற பயமும், கலவரமும் நிலவிக் கொண்டிருந்தன. நாட்டின் வடக்கு எல்லையில் மாபெரும் போர் நடந்து கொண்டிருப்பதன் அறிகுறியாக அங்கங்கே வளமிகுந்த நாஞ்சில் நாட்டு ஊர்கள் களையிழந்து கலகலப்புக் குன்றிக் காணப்பட்டன. பண்டங்கள் விலையேறி விற்றன. எங்கிருந்தாலும் இந்தப் போர்க்காலத்தில் குமாரபாண்டியர் திரும்பி வந்து விடுவாரென்ற நம்பிக்கை நாட்டு மக்கள் எல்லோருக்கும் இருந்தது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில்தான் கழற்கால் மாறனார் முதலிய கூற்றத் தலைவர்கள் மகாமண்டலேசுவரரைப் பற்றிய தீய செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாக் குழப்பங்களுக்கும் மனத்தை ஈடு கொடுக்க முடியாமல் அரண்மனை அந்தப்புரமே கதியென்று கிடந்தார் மகாராணி. கருணையும், அன்பும் நிறைந்து சாந்தம் ததும்பும் அவருடைய மனத்துக்கு மகாமண்டலேசுவரருக்கு இருந்தது போல் துன்பங்களை விழுங்கி விட்டு நிமிர்ந்து நடக்கும் ஆற்றல் இல்லை. உணர்ச்சிகளுக்கு நெகிழ்ந்து கொடுத்து விடும் மெல்லிய பெண் மனம் அவருடையது. 'குமாரபாண்டியனை அழைத்துவர ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில் தாங்கள் அவரைக் காணலாம்' என்று மகாமண்டலேசுவரர் கூறிய சில வார்த்தைகள்தாம் மகாராணியின் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தன. அதுவும் அன்று மாலை கோட்டாற்றுப் பண்டிதர் வந்து சென்றபின் மறுநாள் காலை தூண்டா மணிவிளக்கு அணைந்ததிலிருந்து மகாராணியின் மனம் நிம்மதியாகவே இல்லை. ஊமைக் குழப்பங்கள் மனத்தைச் செல்லரித்தன. குமார பாண்டியனின் கப்பல் வந்ததும், தகவல் சொல்லி அனுப்புமாறு விழிஞத்தில் ஆள்

நிறுத்தி யிருந்தாலும் மகாராணியின் மனத்துக்கு உற்சாகமூட்டுவதற்காகத் தாமே அவரையும் அழைத்துக் கொண்டு விழிஞத்துக்குச் செல்லலாம் என்று மகாமண்டலேசுவரர் நினைத்தார். அதனால்தான் யாரும் அறியாமல் தளபதியைச் சிறைப்படுத்தி விட்டுத் தாம் மட்டும் அரண்மனைக்குப் புறப்பட்டிருந்தார் அவர்.

மகாமண்டலேசுவரர் அரண்மனைக்கு வந்து சேர்ந்த போது, காந்தளூர் மணியம்பலத்திலிருந்து பவழக் கனிவாயர், அதங்கோட்டாசிரியர், விலாசினி ஆகியோர் ஏற்கெனவே அங்கு வந்திருப்பதைக் கண்டார். அவர்கள் எப்போது எதற்காக வந்தார்கள் என்று புவனமோகினியிடம் விசாரித்தார். மகாராணியே ஆள் அனுப்பி அவர்களை வரவழைத்திருப்பதாகப் புவனமோகினி தெரிவித்தாள். பவழக்கனிவாயர், அதங்கோட்டாசிரியர் ஆகியோருக்கும், மகாமண்டலேசுவரருக்கும் எப்போதுமே அவ்வளவு சுமுகமான உறவு இல்லை. காய்ந்த மண் பிண்டத்தோடு மற்றோர் காய்ந்த மண் பிண்டம் ஒட்டாத மாதிரி முற்றிய அறிவுக்கும் முதிர்ந்த அறிவுக்கும் இடையேயுள்ள பொறாமை அவர்களுக்குள் வெளியே தெரியாமல் இருந்து வந்தது. சந்திக்கும்போதோ, பழக நேரும் போதோ, அதைக் காட்டிக் கொள்ளாமல் நாகரிகமாக நடந்து கொண்டு விடுவார்கள். ஒருவர் காரியத்தில் மற்றொருவர் அநாவசியமாகத் தலையிட மாட்டார்கள். காந்தளூர் மணியம்பல நிர்வாகத்தில் மகாமண்டலேசுவரரோ, மகாமண்டலேசுவரருடைய நிர்வாகத்தில் அவர்களோ குறுக்கிடாமல் கண்ணியமாக நடந்துகொண்டு விடுவது வழக்கம்.

அன்றைக்கு அந்தச் சூழ்நிலையில் அவர்களை அங்கே எதிர்பார்க்கவில்லை அவர். சந்தித்தபோது வெறுப்பதாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை. மகாராணியைச் சந்தித்துப் போர்க்கள நிலைமையையும் படை ஏற்பாடுகளையும் கூறி விட்டு, 'விழிஞத்துக்குப் போகலாம்' என்பதையும் தெரிவித்தார். தளபதியைத் தடுத்து நிறுத்திக் காவல் வைத்ததை மட்டும் சொல்லவில்லை.

"ஆகா! இது என் வாழ்க்கையிலேயே நல்ல நாள். குமார பாண்டியனை வரவேற்க நாம் எல்லோருமே விழிஞத்துக்குப் போகலாம். விழிஞத்தில் என் மகனை நான் சந்திக்கா விட்டால் அவன் நேரே போர்க்களத்துக்குப் போனாலும் போய் விடுவான். அப்புறம் போர் முடிகிற வரை எனக்கு அவனைச் சந்திக்க அவகாசமே இராது. கப்பல் எப்போது வந்தாலென்ன? இன்றே விழிஞத்தில் போய்க் காத்திருப்போம்" என்று மகாராணி மற்றவர்களையும் உடன் சேர்த்துக் கொண்டார். அவர்கள் உடன் வரவேண்டாம் என்று எண்ணியும் மகாமண்டலேசுவரரால் அதைத் தடுக்க முடியவில்லை.

அத்தியாயம் 13


குமார பாண்டியன் வந்தாலை.

இறந்துபோன பெண் பகவதிதான் என்ற உண்மையைத் தெரிந்து தாங்கிக் கொள்வது கடினமாயிருந்தது குமார பாண்டியனுக்கு. ஏற்றுக் கொள்ள முடியாத அந்தத் துயர உண்மையிலிருந்து மீள வழியறியாது தவித்தான் அவன். கப்பல் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. தளத்தில் அவனருகே குழல்மொழியும், சேந்தனும், மௌனமே உருவாய்க் கன்னத்தில் கையூன்றி வீற்றிருந்தனர்.

"தளபதிக்கு முன்னால் எந்த முகத்தோடு போய் நிற்பேன்? இப்படி அநியாயமாக அந்தப் பெண் இறக்கும்படி நேரிட்டு விட்டதே? போறும், படையெடுப்பும் ஏற்பட்டுத் தளபதியின் ஊக்கமும், உற்சாகமும், நன்றாகப் பயன்பட வேண்டிய சமயத்தில் இந்தச் செய்தியைப் போய்ச் சொன்னால் அவனுக்கு எப்படி இருக்கும்? நீங்கள் மட்டும் கவனமாக இருந்திருந்தால் அந்தப் பெண் கப்பலிலிருந்து தப்பி ஓடி இப்படித் துர் மரணமடைந்திராமல் தவிர்த்திருக்க முடியும்" என்று சேந்தனையும் குழல்மொழியையும் நோக்கித் துக்கத்தோடு சொன்னான் இராசசிம்மன். துயர வேதனையினால் பேசும்போது தொண்டை தடுமாறி நாக்குழறியது அவனுக்கு.

"இளவரசே! நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களைக் கேட்டுக் கொண்டா அந்தப் பெண் இந்தக் காரியங்களைச் செய்தாள்? அவளுடைய முரட்டுத்தனம் அவளுக்கே அழிவைத் தேடிக் கொடுத்து விட்டது. விழிஞத்தில் அந்தப் பெண் ஆண் வேடத்தோடு வந்தபோதே சந்தேகப்பட்டுக் கப்பலில் இடங்கொடுக்க மறுத்தேன் நான். மகாமண்டலேசுவரருடைய திருப் புதல்வியாரின் நல்ல மனத்தால் கப்பலில் இடம் பெற்றுத் தன் பெயர் கூத்தனென்று பொய் கூறி நடித்தாள் அந்தப் பெண். கப்பலில் பலமுறை என்னுடைய சந்தேகம் வலுத்தும் பேசாமல் அடக்கிக் கொண்டிருந்தேன் நான். கடைசியில் தனக்கு இடங் கொடுத்த இடையாற்றுமங்கலத்து நங்கையிடமே கத்தியைக் காட்டி மிரட்டிக் கட்டிப் போட்டுவிட்டுத் தப்பியிருக்கிறாள் அவள். நாங்கள் ஒரு குற்றமும் அறியோம்" என்று அந்தச் சோக மயமான சந்தர்ப்பத்திலும் தெளிவாகப் பதில் சொன்னான் நாராயணன் சேந்தன்.





ரூர்க்கி தென்னிந்திய கழகத்தினர் வருஷாந்திர விழாவை நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர் தலைமையில் அதி விமரிசையாகக் கொண்டாடினர். குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெற்றிருந்தன. குழந்தைகள் அருணாவும் துவாரகாவும் தோன்றும் ஒரு ஹாஸ்யக் கட்டத்தைப் படத்தில் காணலாம். அங்கத்தினர்கள் நடத்திய கதம்பக் கலைநிகழ்ச்சி அரிய விருந்தாக அமைந்தது.

"நீங்கள் ஏன் வீணாக அவருக்குப் பதில் சொல்லிச் சிரமப்படுகிறீர்கள்? இப்போது அந்தப் பெண்ணுக்குப் பதிலாக நானே இறந்து போயிருந்தால் கூடக் குமார பாண்டியர் இவ்வளவு துக்கப்படமாட்டார். பொய்யும், வஞ்சகமும் நிறைந்தவளாயிருந்தாலும் அவள் கொடுத்து வைத்தவள். அதிர்ஷ்டக்காரி. இல்லாவிட்டால் குமாரபாண்டியரை இவ்வளவு தூரம் அனுதாபத்துக்கு ஆளாக்க முடியுமா?" என்று சற்றே அசூயை தொனிக்கும் குரலில் சேந்தனை நோக்கிச் சொன்னாள் குழல் மொழி. இந்தச் சொற்களைக் கேட்டுச் சினமும் வெறுப்பும் அடைந்த இராசசிம்மன், "நீங்கள் இருவரும் பேசுகிற விதம் கொஞ்சங்கூட நன்றாயில்லை. அந்தப் பெண் பகவதி என்னதான் பொய்யாக நடந்து ஏமாற்றியிருக்கட்டுமே! அதற்காக இப்படியா ஈவிரக்கமின்றிப் பேசுவீர்கள்? உங்களுக்கு மனித மனத்துக்குரிய நெகிழ்ச்சியே இல்லையா? மரணத்துக்குப் பின்னும் பகைகளை மறந்து துக்கப்படத் தெரியாமல் இப்படியா விலகிப் பேசுவது?" என்று அவர்கள் இருவரையும் கடிந்து பேசினான்.

"குமார பாண்டியர் என்னை மன்னிக்க வேண்டும். நான் வெளிப்படையாக மனம் விட்டுக் கூறுகிறேன். நெஞ்சில் துக்கம் ஊறாமல் துக்கப்படுவது போல் நடிக்க எனக்குத் தெரியாது!" என்று வெடுக்கெனச் சொன்னாள் குழல்மொழி.

"குழல்மொழீ! நீ கல்நெஞ்சுக்காரி."

"நீங்களும் சில சமயம் கல் நெஞ்சுக்காரராக இருந்திருக்கிறீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்."

"போதும், நிறுத்து! இதற்குமேல் இப்போது உன்னுடன் நான் பேச விரும்பவில்லை."

"ஓ! தாராளமாக நிறுத்தி விடுகிறேன். எனக்குங் கூட விருப்பமில்லைதான்."

"உங்கள் இருவருடனும் இந்தக் கப்பலில் நான் புறப்பட்டதே தப்பு. அதை இப்போது உணர்கிறேன்" என்று வெறுப்போடு சொன்னான் இராசசிம்மன்.

"நீங்கள் எங்களுக்காகப் புறப்படவில்லை. உங்கள் சொந்த நாட்டையும் அருமைத் தாயையும் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டிருக்கிறீர்கள்" என்றாள் குழல்மொழி.

அங்கேயிருந்து அவர்கள் இருவருடனும் மேலும் பேசிக் கொண்டிருப்பதை விரும்பாதவன் போல் விருட்டென்று எழுந்து மேல்தளத்துப் படிகளில் ஏறினான் குமாரபாண்டியன். அவன் கையில் எடுத்துச் சென்ற வலம்புரிச் சங்கைக் கடுப்புடன் நோக்கினாள் குழல்மொழி. சேந்தனும் வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றான். குமாரபாண்டியனின் உருவம் மேல்தளத்துப் படிகளில் ஏறி மறைந்ததும் குழல்மொழி அவசரமாகச் சேந்தன் பக்கம் திரும்பினாள்.

"இடை வழியில் செம்பவழத் தீவு வராமல் கப்பலை வேறு மார்க்கமாக விலக்கிச் செலுத்திக் கொண்டு போக வேண்டுமென்று உடனே மீகாமனுக்கு இரகசியமாகத் தெரிவித்து விடுங்கள்." - அவளுடைய குரலிலிருந்த உணர்ச்சிக் கொதிப்பைக் கண்டு சேந்தனே திகைத்துப் போனான்.

"அப்படியே தெரிவித்து விட்டு வருகிறேன், அம்மணீ!" என்று உடனே மீகா

மனைச் சந்திப்பதற்கும் சென்றான். குழல்மொழி ஆத்திரத்தோடு இரண்டு கை விரல்களையும் சேர்த்துக் கோத்து முறித்துச் சொடுக்கினாள். விரல்கள் சொரிந்த ஒலி அவள் சினத்தை எல்லையிட்டுக் காட்டியது. தந்தைக்கு அறிவில் இறுமாப்பு என்றால் மகளுக்கு அன்பில் இறுமாப்பு. தான் உரிமை கொண்டாடி அனுபவிக்கும் அழகைத் தன்னைத் தவிர வேறொருவர் உரிமை கொண்டாட விடக்கூடாது. பிடிவாதத்திலும், இறுமாப்பிலும் அவள் தன் அருமைத் தந்தையைக் கொண்டிருந்தாள்.

"அம்மணி! கவலை வேண்டாம். கப்பல் செம்பவழத் தீவு வழியே போகாது" என்று சேந்தன் திரும்பி வந்து உறுதி கூறிய போதுதான் அவளுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. அதன்பின் அந்தப் பயணத்தின்போது குழல்மொழியும் இராசசிம்மனும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவே இல்லை. பேச்சில் தொடங்கிய பிணக்கு ஊடலாகி, ஊடல் பெருங் கோபமாக மாறியிருந்தது. பயணம் தொடங்கிய மூன்றாம் நாள் மாலை, "போகிற வழியில் இந்தக் கப்பலைச் செம்பவழத் தீவில் சிறிதுநேரம் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று நாராயணன் சேந்தனை அழைத்துக் கூறினான் இராசசிம்மன்.

"குமார பாண்டியர் என்னை மன்னிக்க வேண்டும். செம்பவழத் தீவு கடந்து விட்டது. அவசரமாக விழிஞத்தை அடைய வேண்டுமென்பதற்காகக் கப்பலை வேறு வழியாக விலக்கிச் செலுத்திக் கொண்டு வந்து விட்டோம்" என்று கவலைப்படுவது போன்ற முகபாவத்தை வருவித்துக் கொண்டு சொன்னான் நாராயணன் சேந்தன்.

"நல்லது, அப்படியானால் விழிஞத்தை எப்போது அடையலாம்?" என்று தன் மனவேதனையைக் காட்டிக் கொள்ளாமல் கேட்டான் இராசசிம்மன்.

"வழக்கமாக ஆகிற நாட்களைக் காட்டிலும் இரண்டு நாட்கள் முன்னதாகவே போய் விடலாம்" என்று சேந்தனிடமிருந்து பதில் வந்தது. குமாரபாண்டியன், சேந்தன், குழல்மொழி ஆகிய இவர்கள் மூவரும் இப்படி அவசரமாகக் கப்பலில் வந்துகொண்டிருந்த இதே சமயத்தில் இவர்களை எதிர்பார்த்து விழிஞத்தில் காத்திருந்தவர்களின் நிலை என்ன என்று இனிமேல் கவனிக்கலாம்.

* * *

மகாராணி, பவழக்கனிவாயர், அதங்கோட்டாசிரியர், 'விலாசினி ஆகிய எல்லோருடனும் விழிஞத்துக்குப் புறப்பட்டு வந்திருந்தார் மகா மண்டலேசுவரர். போர்க்களத்திலிருந்து வீரர்கள் எவரேனும் அவசரச் செய்தி கொண்டு வந்தால் அவர்கள் தம்மை விழிஞத்தில் வந்து சந்திக்க ஏற்பாடு செய்துவிட்டு அதன் பின்பே புறப்பட்டிருந்தார் அவர். கோட்டாற்றுப் பெரும் படைகளையெல்லாம் திரட்டி அனுப்பியிருப்பதால் உடனடியாகக் கவலைப்படும்படியான நிகழ்ச்சி எதுவும் போர்க்களத்தில் நடந்துவிடாது என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாகியிருந்தது.

விழிஞத்துக்குப் போனதும் போகாததுமாக அவருடைய கண்கள் ஆபத்துதவிகள் தலைவன் எங்கே நின்று கொண்டிருக்கிறான் என்பதைத்தான் தேடின. மகாராணி முதலியவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து விட்டுத் தாம் மட்டும் தனியே புறப்பட்டுத் துறைமுகப் பகுதிகளில் சுற்றினார் அவர். தளபதியின் ஏற்பாட்டால் ஆபத்துதவிகள் தலைவன் மகரநெடுங்குழைக்காதன் அங்கே எங்கேயாவது மறைந்து காத்திருப்பானென்று அவர் எதிர்பார்த்தார்.

அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ஏற்றுமதிக்காகக் குவிக்கப்பட்டிருந்த மிளகுக் குவியல்களுக்கப்பால் ஒரு பெரிய சுரபுன்னை மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தான் குழைக்காதன். பூதாகாரமான தோற்றத்தையுடைய நாலைந்து யௌவனக் கப்பல் மாலுமிகள் குடித்து விட்டு மாமிச பர்வதங்கள் உருளுவது போல் அந்த மரத்தடியில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தனர். குழைக்காதனும் கொஞ்சம் யவனத்து மதுவைச் சுவைத்திருப்பான் போல்தான் தோன்றியது.

ஆனாலும் அவன் தன் நினைவிழந்து விடவில்லை. திடீரென்று மகாமண்டலேசுவரரை எதிரே பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்து நின்றான். தள்ளாடிக் கொண்டே வணங்கினான். அந்த நிலையில் அவர் தன்னைக் கண்டு கொண்டாரே என்று நாணமடைந்தான்.

"ஓகோ! நீயும் பெருங் குடிமகனாகி (நிறைய குடிப்பவன்) விட்டாயா? பரவா



செஞ்சுரி பிளவர் மில்லின் இரண்டாவது தொழிற்சாலைக்குப் பிரதமநீதிபதி பி. வி. ராஜமன்னர் அவர்கள் அங்குரார்ப்பணம் செய்தார். செஞ்சுரி பிளவர் மில்லின் மானேஜிங் டைரக்டர் திரு பி. மருதைப்பிள்ளை விழாவுக்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

யில்லை. கொஞ்சம் என் பின்னால் நடந்து வா... உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்'' என்று மகாமண்டலேசுவரர் கூப்பிட்டபோது அவன் மறுக்காமல் அவர் பின்னால் அடக்கமாக நடந்து சென்றான். அப்படிச் சிறிது தொலைவு நடந்து சென்றதும் சற்றும் தளர்ச்சியில்லாத குரலில் அவனை நோக்கிக் கூறினார் அவர்:—

''நான் இப்போது படைத்தளத்தில் தளபதியைச் சந்தித்து விட்டுத்தான் வருகிறேன். உன்னை இங்கே அனுப்பியிருப்பதைப் பற்றியும் அவன் என்னிடம் சொன்னான். படைகளையெல்லாம் போர் முனைக்கு அனுப்பியாயிற்று. புறப்படுகிற சமயத்தில் திடீரென்று உடல்நலங் குன்றிப் போய் வல்லாளதேவன் மட்டும் படைக் கோட்டத்திலேயே தங்கி விட்டான். பாவம்! அதைக் கண்டு எனக்கே பரிதாபமாக இருந்தது. இடையாற்று மங்கலத்திலிருந்து என்னுடைய காவல் வீரர்கள் சிலரை வரவழைத்து ஒத்தாசைக்கு வைத்துவிட்டு வந்திருக்கிறேன். இந்தச் சமயத்தில் நீயும் அங்கு போனால் உதவியாயிருக்கும். தளபதி எல்லா விவரமும் என்னிடம் சொன்னான். கப்பலில் அவன் தங்கை பகவதி வந்தால் அவளை நானே அங்கு அழைத்து வந்து விடுவேன். படைத்தளத்தைச் சுற்றிக் காவல் பலமாக இருக்கிறது. ஆனாலும் தளபதியைக் கவனித்துக் கொள்வதற்காக உன்னை மட்டும் உள்ளே விடச் சொல்லி நான் அனுமதி ஓலை எழுதித் தருகிறேன். நீ உடனே புறப்படு.''

இதைக் கேட்டதும் குழைக்காதனுக்கு உடம்பு விதிர்விதிர்த்துப் போய்விட்டது. மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அறிவின் சிகரமென விளங்கிய மகாமண்டலேசுவரர் மட்டும் இந்தச் செய்தியைச் சொல்லியிராமல் வேறு யாரேனும் சொல்லி யிருந்தால் அவன் சிறிதும் நம்பி யிருக்க மாட்டான். தென்பாண்டி நாட்டு வீர தளபதி வல்லாள தேவனுக்கா உடல் நலம் சரியில்லை? எத்தனையோ போர்க்களங்களில் பெரும் படையுடன் சென்று பகைவர்களைப் புறமுதுகு கண்டு வெற்றி வாகை சூடிய வல்லாள தேவனுக்கா திடீரென்று உடல் நலக் குறைவு ஏற்பட்டது என்று பல கேள்விகள் அவன் உள்ளத்தில் எழுந்து பெரும் ஐயத்தை உண்டாக்கியிருக்கும். மகா மண்டலேசுவரரின் வாய்ச் சொல்லாகவே வருகின்ற விஷயம் எதுவாயினும் அதை நம்பித்தானேயாக வேண்டும்? ''இந்த நல்ல சமயத்திலா தளபதிக்கு உடல்நலமில்லாது போக வேண்டும்?'' என்று மனம் கலங்கினான் அவன்.

''இங்கேயே நின்று கொண்டிரு; இன்னும் சிறிது நேரத்தில் ஓலையை எழுதிக் கொண்டு வந்து விடுகிறேன்.''— என்று சொல்லி விட்டுப் போனார் மகாமண்டலேசுவரர். அவன் அங்கேயே இருந்தான். சிறிது நேரத்தில் உறையிட்டு அரக்குப் பொறி வைத்த ஓலையோடு வந்தார் அவர். அதை அவனிடம் கொடுத்து விட்டு, ''போய் வா! இந்த ஓலையைக் கொடுத்ததும் உன்னை உள்ளே அழைத்துப் போய் விட்டு விடுவார்கள்'' என்றார். அவன் அவசரமாகப் புறப்பட்டான். வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு புன்னகை பூத்தார் மகாமண்டலேசுவரர்.

மகாமண்டலேசுவரருடைய ஓலையோடும், தளபதியின் உடல் நிலை எப்படியிருக்கிறதோ என்ற பயத்தோடும், அவசரமாகப் பயணம் செய்து கோட்டாற்றுக்குப் போய்க் கொண்டிருந்த மகரநெடுங் குழைக்காதனுக்கு இடைவழியில் என்ன சந்தேகம் உண்டாயிற்றோ, தெரியவில்லை. மகாமண்டலேசுவரரின் ஓலையைப் பிரித்துப் படித்து விட்டான்.

''இந்த ஓலை கொண்டு வரும் ஆபத்துதவிகள் தலைவனையும். தளபதியைச் செய்தது போலவே செய்யவும்.''

மகாமண்டலேசுவரர் என்ற ஒரே வாக்கியம்தான் அந்த ஓலையில் இருந்தது. ஆபத்துதவிகள் தலைவன் திகைத்தான். அவனுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. ஏதோ 'சூழ்ச்சிக்கு இரையாகப்போகிறாய்' என்று மனம் எச்சரித்தது. என்ன ஆனாலும் மகாமண்டலேசுவரர் சொற்படி கேட்பதில்லை என்ற மன உறுதியுடன் விழிஞத்துக்கே திரும்பி, அந்த ஓலையையும் கிழித்தெறிந்து விட்டான். (தொடரும்)

பார்த்த மாத்திரத்தில் பளிச்சிடும் உண்மை..

ரின்ஸோ வெளுப்பது

அதிவெண்மை

உண்மை. வெள்ளைத் துணிகளை வெள்ளைவெளேரென்றும் வர்ணத் துணிகளை அதிகப் பிரகாசமாகவும் வெளுப்பது ரின்ஸோ. அது மட்டுமா? ரின்ஸோவினால் சலவை செய்வது மிகவும் இலகுவானது-அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ தேவையின்றி, அழுக்கை அறவே அகற்றி விடும். குடும்பத்தின் சகல சலவைகளுக்கும் உகந்தது ரின்ஸோ; நீங்கள் உபயோகிக்கவேண்டியது ரின்ஸோ.



உங்கள் வேலையை இலகுவாக்குவதற்கென்றே
தயாரிக்கப்பட்ட அற்புத சோப் பவுடர்.

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

R.17-50 TM

பினிக்ஸாரால் தயாரிக்கப்பட்ட
துணிகளை அணிந்தீர்களானால்
உயர்ந்த மனப்பான்மையுடையவர்
களாகவும் ஆடம்பரக்காரர்க
ளாகவும் காணப்படுகிறீர்கள்

ரேயா துணிகள்

ரேயாவினால் தயாரிக்கப்பட்ட துணிகள், உங்களைப் பரவசப்படுத்தும் டிசைன்களிலும், அநேக விதமான வர்ணங்களிலும், உங்களுக்குக்கிடைக்கின்றன. தூய்மையான எழிலுக்கு **பினிக்ஸ் மில்ஸாரின்** வாயில்களும், ப்ரின்டுகளும் மற்றும் லினேனும், ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட்
லோயர் பரேல், பம்பாய்-13



RPY-3



கல்லோவியத்தின் சொல்லோவியம்

1. பயணம்

சூரியாலயத்தின் அறைக் கதவைப் 'படார்' என்று திறந்துகொண்டு கலவேக மாக நுழைந்தார் திரு அகிலன். நான் சற்றுப் பயந்து போனேன். எப்போதுமே மிக மிகப் பணிவாகக் காணப்படும் அவரது இந்த விறைப்புக் கோலம் என்னைக் கலக்கிவிட்டது.

''சார்! தீர்மானித்துவிட்டேன்! சரித்திரக் கதைதான் எழுதுவதென்று முடிவாகத் தீர் மானித்து விட்டேன்!'' என்றார்.

அவருடைய விறைப்பு எனக்கு அப்போது புரிந்தது. 'சமூகக் கதையா? சரித்திரக் கதையா?' என்ற சர்ச்சையில் தம்மைத் தாமே ஈடுபடுத்திக் கொண்டு குழம்பிக் கொண் டிருந்த அவர், முடிவுக்கு வந்ததும் நிம்மதி யாக நிமிர்ந்து நின்று கம்பீரநடை போட்ட தில் ஆச்சரியமில்லைதான். இருவருமாகச் சேர்ந்து ஆசிரியர் திரு சதாசிவம் அவர்க ளிடம் சென்றோம்.

''சரித்திரத்தில் எந்தக் காலத்தைக் கதை யின் பின்னணியில் வைத்து எழுதப் போகி றீர்கள்?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''ராஜேந்திரனைத்தான் கதையின் கருவூல மாகக் கொள்ள நினைத்திருக்கிறேன்.''

நான் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மார்பை முன்னால் தள்ளிக் கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

ஆசிரியர் என்னைப் பார்த்துச் சிரித்தார். ''அவர் உன்னைப் பற்றிச்சொல்லவில்லை; ராஜேந்திர சோழனைச் சொல்கிறார்'' என்று விளக்கினார்.

''ஓகோ!'' என் றேன் நான் பெருத்த ஏமாற்றத்துடன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எனக்குப் போட்டியாகத் தோன்றிவிட்ட அவன் மட்டும் என் எதிரில் அப்போது இருந்திருந்தால்...... ஒன்றும் செய்திருக்க முடியாது என்பதால் போனால் போகிறான் என்று அவனைச் சும்மா விட்டு விட்டேன்!

''சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களைப் போய்ப் பார்க்க வேண்டும்'' என்றார் அகிலன்.

''அதற்கென்ன, பேஷாகப் போகலாம்!'' என்றுகூறி,மோட்டாருக்கும் உடனடியாக ஏற் பாடு செய்து விட்டார் ஆசிரியர். அகிலன் அவர்களுடன் அந்த இடங்களுக்குப் போகும் வாய்ப்பு அடியேனுக்கும் கிட்டியது. எங்க ளுடன் ஓவியர் திரு வினு அவர்களும், 'சர்க்கு லேஷன்' மானேஜர் திரு ஆத்மநாதன் அவர் களும் வந்தார்கள்.


2. கொடும்பாளூர்

மோட்டார் கார் தேரும்பேட்டையை நெருங்கியபோது, ''சிவப்பு நோட்டு! சிவப்பு நோட்டு!'' என்று அலறினார் அகிலன். நாங்கள் ஒருவரை யொருவர் பார்த்து விழித் தோம். '''சிவப்பு நோட்'டைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை, சார்!'' என்றார் ஓவியர் வினு சிரிப்புக்கிடையே.

'' அடாடா! நான் அந்த நோட்டைச் சொல்லவில்லை. சிவப்பு நோட்டுப் புத்த



கி.ராஜேந்திரன்





கத்தை வீட்டிலேயே வைத்து விட்டு வந்து விட்டேன், சார்!'' என்றார் அகிலன் பரிதாபமாக.

மோட்டாரோட்டி தனபாலை அகிலன் வீட்டுக்கு வண்டியைத் திருப்பச் சொன்னோம்.

நோட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு போன உயிர் திரும்பி வந்தது போல் 'அப்பாடா' என்று பெருமூச்செறிந்து காரில் ஏறி உட்கார்ந்தார் அகிலன்.

வண்டி மறுபடியும் புறப்பட்டுச் சென்றது.

''எனக்கு மறதி ரொம்ப அதிகம், சார்! நீங்கள் இதைப் பத்திரமாக வைத்திருங்கள்'' என்று கூறி என்னிடம் சிவப்பு நோட்டுப் புத்தகத்தை ஒப்படைத்தார்.

அவருடைய கதையின் கருவூலமும் சரித்திரச் சான்றுக் குறிப்புக்களும் அடங்கிய நோட்டுப் புத்தகம் அது என்று அறிந்தபோது, உண்மையாகவே 'சிவப்பு நோட்'டைக் கொடுத்திருந்தால் கூட அவ்வளவு மகிழ்ச்சி உண்டாயிருக்காது என்று தோன்றியது. ஆகா! அந்தச் சிவப்பு நோட்டுப் புத்தகம் தான் எத்தனை எத்தனை அற்புத விஷயங்களை எனக்குச் சொல்லிற்று?

மூன்று இளம் உள்ளங்களில் கள்ளம் புகுந்த கதையைச் சொல்லவா? அவர்களிடையே நிலவிய அழியாக் காதலைக் கூறவா? அவர்கள் அனுபவித்த இன்பச் சந்திப்புக்களை விவரித்துச் சொல்லவா? பிரிவுத் துயரை யெல்லாம் எழுதவா?

எதையுமே நான் சொல்வதற்கில்லைதான். நேயர்கள் இன்னும் சில நாட்கள் பொறுமையுடன் இருக்க வேண்டியதுதான்.

முதல் நாள் இரவு திருச்சியில் தங்கி மறு நாள் சில எழுத்தாள அன்பர்களைச் சந்தித்து விட்டுக் கொடும்பாளூருக்குப் பயணமானோம்.

கல்கியின் பொன்னியின் செல்வனைப் படித்திருப்பவர்கள் நிச்சயம் கொடும்பாளூரைப் பற்றி ஓரளவுக்கு அறிந்திருப்பார்கள். அருள்மொழி வர்மனாகிய ராஜராஜனின் உள்ளங் கவர்ந்த வானதி என்னும் வானவன் மாதேவி கொடும்பாளூர் அரசகுமாரி. பின்னால் ராஜேந்திர சோழனைப் பெற்றெடுத்தபுண்ணியவதி.


சோழ மன்னர்களுக்கும் கொடும்பாளூர் சிற்றரசர்களுக்குமிடையே பிரிக்க முடியாத ஒரு நட்பு முறை சரித்திரத்தில் இருந்து வந்திருக்கிறது. இருவருக்குமிடையே பெண் கொடுப்பதும் கொள்வதும் சகஜமாக இருந்திருக்கிறது. வேளிர் எனஅழைக்கப்படும் கொடும்பாளூர் குறுநில மன்னர்கள் சோழப் பேரரசர்களுக்குக் கீழ்ப் படைத் தலைவர்களாகத் தொண்டாற்றி யிருக்கிறார்கள்.

வானதியின் தந்தை பராந்தகன் சிறிய வேளானைப் பெரும் படையுடன் சிங்களத்துக்கு அனுப்பி வைத்தார் சுந்தர சோழர். அங்கே போர்க்களத்தில் உயிர் துறந்து 'ஈழத்துப்பட்ட வேளான் சிறிய வேளான்' என்று சரித்திரக் கல்வெட்டுக்களில் பெயர் பெற்றான்.


சுந்தர சோழரின் மகன் ஆதித்த கரிகாலனுடன் சென்று வீரபாண்டியனை முறியடித்தான் மற்றொரு வேளிர் குலக்கொழுந்து, பூதி விக்கிரம கேசரி. இவனது மனைவி முதல் பராந்தக சோழனின் மகள் அநுபமா. பூதி விக்கிரமகேசரியின் மகள் அரிஞ்சய சோழனை மணந்தாள்.

நிலைமை இப்படி இருக்க, பூதி விக்கிரம கேசரியின் காலத்தை ஏழாம் நூற்றாண்டு என்று ஒரு சரித்திர ஆசிரியர் கூறியிருந்தது அகிலன் அவர்களுக்கு மிகுந்த மனக்குழப்பத்தை உண்டாக்கியிருந்தது. பிற்காலச் சோழர்களின் காலமோ ஒன்ப









தாம் நூற்றாண்டின் இடையிலிருந்துதான் தொடங்கு கிறது. இந்தக் குழப்பம் இந்தப் பிரயாணத்தின் போது நீங்கியதைப் பின்னால் கூறுவோம்.

பண்டைக் காலத்தில் கொடும்பாளூர் வேளிருக்கு இருந்து வந்த பெருமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இப்போது மூவர் கோயில் இருக்கிறது.

தன் பெயராலும் தனது இரு மனைவிமார் பெயராலும் மூன்று கோவில்களை எழுப்பினான் பூதி விக்கிரம கேசரி. மூன்றில் இரண்டு மட்டுமே நிற்கின்றன இப்போது. மூன்றாவது கோவிலும், நந்தி மேடைகளும் சுற்றிலும் பதினாறு சிறிய கோபுரங்களும் இருந்ததற்கான அடையாளங்கள் இன்னும் காணப்படுகின்றன. சுற்றிலும் ஏராளமான சிற்பங்களை, கற்சிலைகளைக் காண்கிறோம்.



சரித்திரக் கதைக்குப் படம் வரைவதானாலும் ஆடை அணிகளும் சரித்திரக் காலத்துக்கு ஏற்பச் சரியானபடி அமைய வேண்டுமல்லவா? அதற்காகப் பல சிற்பங்களையும் பார்த்துப் படம் எழுதிக் கொண்டார் ஓவியர் வினு.

பூதி விக்கிரமகேசரிக்குப் பின் மதுராந்தக உத்தம சோழனுடன் கொடும்பாளூரில் வேளிர் ஆட்சி முடிவடைகிறது. அதன்பிறகு தனிப்பட்ட குறுநில மன்னர்களாயிராமல் சோழப் பேரரசர்களுடனேயே ஒன்றி விடுகிறார்கள். ராஜேந்திர சோழனின் ஆட்சிக்குப் பிறகு வேளிரைப் பற்றி நாம் குறுநில மன்னர்கள் என்ற முறையில் அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

3. திருமயில் குன்றம்

திருச்சியிலிருந்து கொடும்பாளூர் செல்லும் வழியில் இருக்கிறது விராலிமலை. மலை மீது இருந்த முருகனைத் தரிசித்து வர ஏறத் தொடங்கினோம். சற்றுத் தூரம் படிகளில் ஏறிச் சென்றதும் ஒரு மயில் வண்ணத் தோகை விரித்து ஆடுவதைக் கண்டோம். அதன் அழகில் சொக்கி நின்று கொண்டிருக்கும்போதே இன்னொரு மயில் 'ஜிவ்'வென்று பறந்துவந்து அதன் அருகே இறங்கியது. அடுத்த சில விநாடிகளில் இன்னும் இரண்டு மயில்களைப் பார்க்க முடிந்தது. சில நிமிஷங்களில் மந்தைபோல நூற்றுக் கணக்கான மயில்களை ஒரே சமயத்தில் இயற்கையான சூழ்நிலையில் கண்டு மகிழ்ந்தோம்.

''உங்களுடைய கதாநாயகிகள் இந்த மயில்களுடன் கொஞ்சிக் குலவி விளையாடலாமல்லவா?'' என்று வேடிக்கையாகக் கேட்டு யாரும் சிரிக்காமல் இருந்து விடப் போகிறீர்களோ என்ற பயத்தில் நானே உரக்கச் சிரித்தேன். ஓவியன் அதை வேடிக்கையாக எடுத்துக் கொள்ளவில்லை. ''ஏன் சார் சிரிக்கிறீர்கள்? திருமயில்குன்றம்என்று பெயரை மாற்றி விட்டால் என்ன?'' என்று கேட்டபடியே கதைக்கான திட்டம் வகுத்துச் சிவப்பு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளவும் ஆரம்பித்து விட்டார்!

---

1. விஜயாலய சோளீசுவரம்—நார்த்தமலை. 2-3. குகைக்கோயில் அமைத்த மன்னர்கள் தங்களையே துவாரபாலகர்களாகப் பாவித்துச் சிலை அமைக்கச் செய்வார்களாம்-திருமெய்யம். 4. திருவரங்குளத்து முருகன். 5. நர்த்தன விநாயகர்- உச்சிப் பிள்ளையார் கோயில். 6. கொடும்பாளூர் மூவர் கோயில், 7. திருமெய்யம் ஊமையன் கோட்டை. 8. விராலி மலையின் ஒரு தோற்றம். 9.''தேர் புறப்படப்போகிறது''- குன்றுண்டார் கோயில். 10. திருக்கோகரணத்தில் அகலிகையின் கவனத்தைக் கவர்ந்த பாவை விளக்கு.







4. திரு டி. எஸ். சுந்தரம்

புதுக்கோட்டை மியூஸியத்தின் கியூரேட்டர் திரு டி. எஸ். சுந்தரம் ரொம்பப் பொல்லாத மனிதர். ''என்னாலான சிறிய உதவி, என்னாலான சிறிய உதவி'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே பெரிய உதவிகளை எங்களுக்குச் செய்து விட்டார். நாங்கள்தான் என்ன ஏமாந்து விடுவோமா? பதிலுக்கு ''இல்லை! இல்லை! நீங்கள் ரொம்ப உதவியாக இருந்தீர்கள்'' என்று அடிக்கொருதரம் சொல்லி வந்தோம்.

உண்மையிலேயே எங்களுக்கு, குறிப்பாக அகிலன் அவர்களுக்குப் பேருதவியாகத்தான் இருந்தார்கள் திரு சுந்தரம்.

''கற்காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை ஆதாரங்கள் முதல், பற்பல காலங்களின் சரித்திர வளர்ச்சியைக் காட்டும் ஆதாரங்கள் அனைத்தும் புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிறைய இருக்கின்றன. முதன் முதலாக இந்தப் பகுதியை வைத்துக்கொண்டு சரித்திர நவீனம் எழுதுவது பெருமைக்குரிய விஷயந்தான்'' என்று கூறினார் திரு டி. எஸ். சுந்தரம். அகிலன் படிக்கும் காலத்தில் தம் முடைய மாணவராக இருந்ததையும், அவருக்கு இப்போது உதவ முடிந்ததில் தாம் மகிழ்ச்சியுற்றதையும் கூறினார்.

பாண்டியன் சமண மதத்திலிருந்து திருஞானசம்பந்தர் உபதேசத்தால் சைவனாக மாறியதையும் அப்போது பாண்டி நாட்டிலிருந்து ஆதரவற்ற சமணர்கள் பல்லவர்களின் தலைநகரான காஞ்சிக்குச் செல்கையில் புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பிரதேசத்து மக்கள் அவர்களுக்குப் பணிவன்புடன் உதவியதையும் கூறினார். ''அதனால்தான் புதுக் கோட்டையைச் சுற்றிப் பல இடங்களிலும் நீங்கள் சமணப் பள்ளிகளைக் காண முடிகிறது. சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளும் ஏராளமாகப் பார்க்கலாம். தங்கள் இறுதிக் காலத்தில் கடுமையான விரதங்கள் பூண்டு நிர்வாண நிலையை அடைந்து அன்ன ஆகாரமின்றி நீர் மட்டுமே அருந்தி உயிர் நீத்தார்கள்'' என்றார்.

''புதுக்கோட்டைக்கு அருகே புத்தர் சிலை ஒன்றைப் பார்த்ததாக நண்பர் ஒருவர் எழுதியிருக்கிறார்'' என்று மெள்ள ஆரம்பித்தார் அகிலன்.

''கிடையவே கிடையாது! இருக்க முடியாது. புத்த மதம் இந்தப் பக்கம் பரவவேயில்லை. அதனால் 2500வது புத்த ஜயந்தியை மத்திய சர்க்கார் கொண்டாடியபோது நான் எப்படித் தவித்துப் போனேன், தெரியுமா!'' என்றார் அவர்.

பொறுமையுடன் பலசந்தேகங்களைத் தீர்த்து வைத்து மியூஸியம் முழுவதையும் சுற்றிக் காட்டினார் அவர். கொடும்பாளூர் மூவர் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று அற்புதமான சிலைகளைக் காட்டினார். அதில் ஒன்று மட்டுமே உண்மையான சிலையாகத் தோற்றமளித்தது. மற்ற இரண்டும் — திரிபுராந்தகரும், திரிபுரசுந்தரியும் — அச்சில் வார்க்கப்பட்ட போலிகளாகத் தோன்றின. அதைப்பற்றிக் கேட்டபோது அந்தச் சிலைகள் இரண்டும் சென்னை மியூஸியத்தில் இருப்பதாகச் சற்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

இந்தச் சமயத்தில் மூவர் கோயிலை எழுப்பித்த பூதி விக்கிரம கேசரியின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடு இருப்பதைக் குறிப்பிட்டார் அகிலன்.

சுந்தரத்துக்கு மறுபடியும் உற்சாகம் கிளம்பி விட்டது. கோவில்களின் அமைப்பு முறைகளைக் கொண்டு எப்படி அதைக் கட்டிய மன்னர்களின் காலத்தை நிர்ணயிக்கலாம் என்பதை விளக்கினார். பூதி விக்கிரமகேசரியின் காலம் பத்தாம் நூற்றாண்டுதான் என்று ஆணித்தரமாகச் சொன்னார். ''சந்தேகம் இருந்தால் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி எழுதியிருப்பதைப் பாருங்கள்!'' என்று கடைசியில் ஒரு போடு போட்டார் அவர்.

'இவ்வளவு விளக்கமாகக் கூறிய பின் சந்தேகத்துக்கிடமேது!' என்று நினைத்துக் கொண்ட நாங்கள் நீலகண்ட சாஸ்திரியின் ஆராய்ச்சித் திறனையும் அதனால் உணர முடிந்தது. சதாசிவப் பண்டாரத்தாரும் பத்தாம் நூற்றாண்டு என நிர்ணயித்திருக்கிறார் என்பதும் அவரைப் பின்பற்றியே கல்கி அவர்களும் எழுதியிருக்கிறார் என்பதும் தெரிய வந்தது.

''புதுக்கோட்டை ஸ்டேட் மான்யுவலைச் சில நாட்கள் தர முடியுமா? முத்தரையர்கள் பற்றியும் இருக்குவேளிர் பற்றியும் சில விவரங்களை எடுத்துக் கொண்டு தருகிறேன்'' என்று கேட்டார் அகிலன்.

மறுத்து விட்டார் சுந்தரம். ''என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், சொல்கிறேன். புத்தகங்களை உங்களிடம் கொடுத்து வைக்க எனக்கு விருப்பமிருந்தும் உரிமையில்லை'' என்று கூறினார் வெகு அழகாக.



முன்னால் நிற்பவர்கள் திரு சுந்தரமும் திரு அகிலனும்.

தம்முடைய வேலையில் அவர் வைத்திருந்த பக்தியையும் கண்டிப்பையும் மனத்துக்குள் வியந்து பாராட்டிக்கொண்டே விடை பெற்றுக் கொண்டோம்.

5. சித்தன்ன வாசல்

தங்களைத் தாங்களே சிரமப் படுத்திக் கொள்வதில் சமண முனிவர்களுக்கு ஈடு சமண முனிவர்கள் தான்! தங்களை எப்படியெல்லாம் வருத்திக் கொண்டார்கள் என்று பாருங்கள்: துறவு கொள்வதற்கு முன்னால் தலைமயிரைக் கத்தியால் வெட்டாமல் பிடுங்கியே களை

கல்கி

மாவட்டச் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு ரூ. 200. இரண்டாவது பரிசு ரூ. 100

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும், எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவது போட்டி

நெல்லை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் நெல்லை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். நெல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், பழக்க வழக்கம், தொழில், பாபநாசம், குற்றாலம் அருவிக்கரை, தாம்பிரவர்ணி நதிதீர வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதி யுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப்பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. நெல்லை மாவட்டப் போட்டிக்கான கதைகள் 31 — 5 — 1959 தேதிக்குள் 'கல்கி காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும்.

9. போட்டி முடிவு ஜூன் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி நெல்லை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு: நெல்லை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியானதும், அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

வார்கள். வெயிலோ குளிரோ காற்றோ மழையோ, நிர்வாணமாகவே இருப்பார்கள். நீரில் இருக்கக் கூடிய கண்ணுக்குத் தெரியாத உயிரினங்கள் இறந்து விடுமோ என்று குளிக்காமலே இருந்து விடுவார்கள். பாய் படுக்கை ஒன்றுமின்றித் தரையில்தான் படுப்பார்கள். பல் கூடத் தேய்க்க மாட்டார்கள்! நின்ற படியேதான் சாப்பிடுவார்கள்: அதாவது தப்பித் தவறிச் சாப்பிடுவதாக இருந்தால்! ஆமாம்! இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மூன்று நாட்களுக்கு ஒரு முறை எட்டு நாட்களுக்கு ஒரு முறை என்றுதான் சமணத் துறவிகள் உண்பது வழக்கம். உண்ணாமலே வடக்கிருந்து இறப்பவர்களும் உண்டு.

இதையெல்லாம் பார்க்கும்போது 'ஐயோ, பாவம்' என்று தோன்றவில்லையா? எனக்குக்கூட அப்படித்தான் முதலில் தோன்றியது. ஆனால் தாங்கள் உடலை வருத்திக் கொண்டதோடல்லாமல் என் போன்றவர்களையும் சிரமப்படுத்த ஆரம்பித்தபோது இரக்கமெல்லாம் போய்க் கோபம் தான் வந்தது. சித்தன்ன வாசலில் சமணர்கள் விரதங்கள் பூண்டும் தவமிருந்தும் வந்த ஏழடிப் பட்டத்தைப் பார்க்க நாங்கள் ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் போனோம். யாரும் எளிதில் அணுக முடியாதபடி மலை உச்சியில் ஒளிந்து கொண்டிருக்கும் அந்த இடத்தை அடைய மலைச்சரிவில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஏறிச் சென்றோம். நாலுமுறை சறுக்கி விழுந்து உடலில் இரண்டு இடங்களில் சிராய்த்துக் கொண்டு ஒரு முறை காமிராவைக் கீழே போட்டு, கடவுள் புண்ணியத்தில் அது உடையாமல் தப்பிய பிறகு ஒரு குகையை அடைந்தோம். குகைக்குள் நுழைந்து சிறிது தூரம் சென்றால் ஒரே ஒரு ஆள் (என்போன்றவன் அல்ல) நுழையக் கூடிய இடைவெளி தெரிகிறது. முக்கி முனகி உடலைக் குறுக்கி மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒருவழியாக அந்த இடைவெளிக்குள் நுழைந்து வெளியே வந்து பார்த்தால் மலை உச்சிக்கு வந்து விட்டது தெரிகிறது.

அங்கிருந்து ஏழடிப் பட்டத்துக்குச் செல்லும் பாதை மிகக் குறுகலானது. ஒருபக்கம் வானளாவும் கற்பாறை. இன்னொருபுறம் கிடுகிடு பாதாளம். நல்லவேளையாக இப்போது பாதுகாப்புக்காக இரும்புக் கிராதிகளைப் போட்டிருக்கிறார்கள். அதனால் தலை ரொம்பவும் சுற்றாமல் கொஞ்சம் குறைவாகவே சுற்றியது!

ஏழடிப் பட்டத்தில் கல்லிலேயே செதுக்கிய பதினேழு படுக்கைகள் இருக்கின்றன. மலை மீது ஏறி வந்த சிரமத்தில் அந்தக் கல் படுக்கைகளும் பஞ்சணை மெத்தைகளாகத் தான் எங்கள் அனைவருக்கும் இருந்தன!

சித்தன்னவாசல் மலையின் இன்னொரு புறத்தில் ஒரு குகைக்கோயில் இருக்கிறது. ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்குப் பிறகு இன்னும் பிரகாசமாகவும் தெளிவாகவும் விளங்கும் வண்ண ஓவியங்களைப் பார்த்தோம். குகை வாசலில் இரண்டு தூண்களில் நடன மங்கையர் இருவர் வரவேற்பளிக்கிறார்கள். தெற்குத் தூணின் மற்றொரு புறத்தில் மகேந்திர பல்லவனால் வரையப்பட்டது என்று கருதப்படும் ஆண் பெண் உருவங்களைக் கண்டோம். இது மகேந்திர பல்லவனும் அவன் மனைவியுமே

அருள் வாக்கு

ஹரிஜனங்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களில் திலகமாக விளங்கும் ஸ்ரீ நந்தனாரின் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஈசனிடத்திலே பேரன்பு செலுத்தி, தங்களுடைய முன்னோர்களின் குலாசாரத்தை மீறி நடவாமல் இருக்க வேண்டும். இவ்விரு ஒழுக்கங்களையும் தம் வாழ்க்கையில் லட்சியங்களாகக் கொண்ட நந்தனாரின் உள்ளொளி எவ்விதம் பரமசிவனின் பாதாரவிந்தங்களை அடைந்ததோ, அதுபோல் ஒவ்வொருவரும் தர்மத்தைக் கடைப்பிடித்து அருளையும் பொருளையும் பெற்று, பக்தி, பொறுமை, அடக்கம் இவைகளில் எல்லோருக்கும் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்

என்பாரும் உண்டு. அந்த ஓவியத்தின் அழகை அனுபவித்து முடிவதற்குள்ளாக மேல் கூரையில் எண்ணற்ற கமலங்களும் மீன்களும் அல்லிகளும் நிரம்பிய தடாகமும் சமண முனிவர்களும் தென்பட்டார்கள். அவ்வளவும் ஓவியங்கள்; உயிரோவியங்கள்.

சமணத் துறவிகள் பிற்காலத்தில் ஓரளவு தங்கள் திகம்பர விரதத்தை மாற்றிக் கொண்டு, நிர்வாணமாயிராமல், கௌபீனம் தரித்துக்கொண்டு உலவினார்கள் என்பதற்கும் அந்த ஓவியங்கள் சான்று கூறின.

6. குடுமியாமலை

ஸ்ரீமான் கடவுள் இருக்கிறாரே, ரொம்ப ரொம்ப நல்லமாதிரி. ரொம்ப நல்லவராக இருப்பதாலேயே அவருக்குப் பல சோதனைகளும் ஏற்படுகின்றன. 'என்ன? பக்தர்களுக்குத்தான் சோதனை என்று கேள்வி; கடவுளுக்குக் கூடவா சோதனை?' என்று நினைக்கிறீர்களா?

ஆமாமய்யா, ஆமாம்! எல்லாம் இந்தப் பக்தர்கள் படுத்தி வைக்கிற பாடுதான். அவர்களிடம் மாட்டிக் கொண்டு அவர் படுகிற அவஸ்தை...குடுமி கூட வைத்துக் கொண்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஒரு நாள் கோயில் அர்ச்சகர் கொஞ்ச நேரம் விச்ராந்தியாகத் தாசியிடம் பேசிக் கொண்டிருந்தாராம். அந்தச் சமயம் பார்த்து அரசன் கோயிலுக்கு வந்து விட்டானாம். நேரம் போது தெரிய வேண்டாமோ! சே கத்தமோசம்! அரசன் வருகிறான் என்று அர்ச்சகருக்குத் தெரிந்தது. கடவுளுக்குச் சூட்ட மாலையில்லை. அதுதான் தாசியின் கொண்டையை அலங்கரித்துக் கொண்டிருந்ததே! அவசரம் அவசரமாக அதைப் பிடுங்கிக் கொண்டு தலை தெறிக்க ஓடினார் அர்ச்சகர். பூஜை முடிந்து மலர் மாலைப் பிரசாதத்தை அரசனிடம் கொடுத்தார். அதிலே ஒரு முடியைப் பார்த்து விட்டான் அரசன். ஏதோ குடி முழுகிப் போய் விட்டது போல இரைந்



மனைவி: அப்பா! அப்பா! என்று கூப்பிட்டுக்கொண்டு அடிக்கடி சமையல் உள்ளே போகாதே! நான் அங்கே போகிறேனு, பார்!

தான். அர்ச்சகர் நடுங்கிப் போனார். சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. "சுவாமிக்குக் குடுமியிருக்கிறது. அதிலிருந்துதான் கேசச் சுருள் மாலைக்கு வந்திருக்கிறது" என்று ஒரே போடாகப் போட்டார். அரசன் அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு விடுவிடுவென்று சன்னிதிக்குள் நுழைந்தான். கடவுள் ஏமாந்து விடுவாரா? அல்லது பக்தனைத்தான் கைவிட்டு விடுவாரா? உடனே குடுமி வைத்துக்கொண்டார். அரசன் குடுமியைப் பார்த்துத் தன் தவறுதலுக்காக இன்னும் இரண்டு தரம் ஓங்கிக் கன்னத்தில் போட்டுக் கொண்டு போய்ச் சேர்ந்தான். இப்போது சொல்லுங்கள், பக்தர்கள்தானே கடவுளைச் சோதிக்கிறார்கள்?

குடுமியாமலை இறைவனை, **சிகாநாதரை** தரிசிக்கு முன்னர் வயிற்றுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய அங்கிருந்த ஒரே உணவு விடுதிக்குச் சென்றோம். "ஒன்றரை மணிக்கு வாருங்கள், ஆக்கி வைக்கிறேன்" என்றார்கள். 'இன்னும் இரண்டு மணிநேரம் எப்படிப் பசியைத் தாங்குவது' என்று யோசித்துக் கொண்டே கோவிலுக்குள் நுழைந்தோம். உள்ளே சென்றதும் பசியெல்லாம் எங்கோ பறந்து விட்டது. அச் சிற்ப அற்புதங்களில் மனம் நிறைந்து விட்ட போது வயிறு காலியாக இருப்பதை எப்படி உணர முடியும்?

அதோ மன்மதனும் ரதியும் மலரம்புகளையல்லவா எங்கள் மீது எய்கிறார்கள். அந்தக் கல்லோவியங்கள் மீது நாங்கள் காதல் கொண்டு விட்டோம்! இப்பால் மோகினியைக் கண்டு மயங்கி நிற்கும் முனிவர்களைப்போலவே நாங்களும் அந்தச் சிற்பங்களின் அழகுக்கு அடிமையாகி விட்டோம்.

7. நார்த்த மலை

நார்த்த மலை அடிவாரத்தை அடைவதற்குள் நல்ல மழை பிடித்துக் கொண்டது. அந்த மழையையும் பொருட்படுத்தாமல் ஏராளமான ஜனங்கள் அங்கே திருவிழாவுக்காகக் கூடியிருந்தார்கள். மலையடிவாரத்தில் உள்ள ஊரில் மாரியம்மன் மிகவும் சக்திவாய்ந்த தெய்வம் என்று கொண்டாடுகிறார்கள். வருஷந்தோறும் திருவிழா தினத்தன்று விடுமுறையாம் அந்தப் பகுதியில்.

பொதுவாக நார்த்த மலை என்று அழைக்கப்படும் நான்கைந்து மலைகள் சேர்ந்த தொடரில் மேலை மலையில்தான் அபூர்வமான வேலைப்பாடுகள் கொண்ட விஜயாலய சோளீசுவரம் இருக்கிறது. கோவில் சுவரில் நடனமங்கையர்கள் பல வித ஹஸ்தங்களையும் பாவங்களையும் காட்டுகிறார்கள்.


இந்தக் கோயிலைச் சுற்றி ஏழு கோயில்களும் மதில் சுவரும் இருந்ததற்கு அடையாளங்கள் உள்ளன. கொடும்பாளூர் மூவர் கோயிலின் சாயலுடன் விளங்கும் இதைக் கட்டியது, ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் சோழர் ஆதிக்கத்தை மீண்டும் தலையெடுக்கச் செய்த விஜயாலய சோழன் தொண்ணூற்றாறு புண்களை மார்பிலே கொண்ட தீரன்.

விஜயாலய சோளீசுவரத்துக்கு எதிரே மகேந்திரப் பல்லவன் காலத்தில் சமணர் குகையாக இருந்து பின்னர் விஷ்ணு மண்டபமாக மாறிய ஒரு மலைக் கோயிலையும் கண்டோம். மலையில் குடையப் பெற்ற மூலக் கிருகத்தில் உருவங்கள் ஏதும் இல்லை. வெளி மண்டபத்தில் மட்டும் வரிசை வரிசையாகப் பிரும்மாண்டமான விஷ்ணு சிலைகள் உள்ளன.

மேலை மலைக்கு எதிராக இருக்கும் நான்கு குன்றுகளில் ஒன்றுக்கு ஆளுருட்டி மலை எனப் பெயர். இங்கு மரண தண்டனை அடைந்தவர்களையெல்லாம் மலை உச்சியிலிருந்து உருட்டி விடுவார்களாம்!

புதுக்கோட்டையிலிருந்து ஆவுடையார் கோயிலுக்குக் கிளம்புகையில் 'ஸ்டேட் மான்யுவல்' கிடைக்காத குறை எதிர்பாராத விதமாகத் தீர்ந்து விட்டது. புதுக்கோட்டை கல்கி ஏஜண்டு திரு சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி அருந்துகையில் காஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் சகோதரர் திரு சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் திடும்பிரவேசம் செய்தார்கள். நாங்கள் எதற்கு வந்திருக்கிறோம் என்பதையும் எங்கள் நிலையையும் அறிந்து கொண்டதும் "என்னிடம் இருக்கிறதே! நான் தருகிறேன்!" என்று உடனடியாகச் சொன்னார்கள். ஒரு நல்ல காரியத்துக்கு உடனே உதவ எண்ணிய அந்தப் பண்பு பெருமைக்குரியது.

(அடுத்த இதழில் முடியும்)

*  *

திருச்சி ஜில்லா, தின்னனூர்வாசியான திரு வி. செ. வெணடியாப் பிள்ளை அவர்களின் புதல்வரும் பெரி. திருப்பதியா பிள்ளை அவர்களின் மைத்துனரும் சிலோனில் டிக்கோயாவில் உள்ள **'ஆனந்தா ஸ்டோர்ஸ்'** பார்ட்னருமாகிய சிரஞ்சீவி **கோவிந்தசாமிக்கும்** மேற்படி ஜில்லா, மேற்படி ஊர்வாசியும் சிலோனில் கம்பளையிலிருக்கும் திரு செ.பெ. மூக்க பிள்ளை அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி **ராஜம்மாளுக்கும்** கம்பளை ஸ்ரீ கதிரேசன் கோவிலில் வைத்துத் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. அன்றுதினம் நடந்த வைபவத்திற்கு ஏராளமான நண்பர்களும், பந்துக்களும் பிரமுகர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தியதற்கு எங்கள் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாழ்க, கோவிந்தசாமி - ராஜம்மாள் !

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ் : கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம்	ரிஸர்வ் நிதி
ரூ. 2,00,00,000	ரூ. 1,48,00,000

எங்கள்

"ரெக்கரிங் டிபாசிட்" திட்டம்

பிரதிமாதம் தொடர்ந்து செய்யும் டிபாசிட் தொகையான	ரூ. 10	ரூ. 100	ரூ. 500
கீழ்க்கண்டபடி பெருகும்:			
46 மாதங்களில்	ரூ. 500	ரூ. 5000	ரூ. 25000
86 மாதங்களில்	ரூ. 1000	ரூ. 10000	ரூ. 50000

சேர்மன்
ஜி. டி. பிர்லா

ஜெனரல் மானேஜர்
எஸ். டி. சதாசிவன்

WCO 9-59


வாஸ்மால்
கருமையை வளர்க்கும்
கூந்தல் தைலம்
Vasmol
HAIR DARKENER
● நரை மயிரைக் கருமை யாக்கிப் பளபளப்பையும் ஊட்டுகிறது.
● கேசவளர்ச்சியை ஊக்குகிறது.
● மென்மையான நறுமணம் கொண்டது.
கூந்தல் வளர்ச்சிக்கு உகந்த தைலம்.
தைலமாகவும் போமேடாகவும் மோசடி செய்ய முடியாதபடியுடைய பாட்டில்களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
ஹைஜீனிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி எண் 1192, பம்பாய்-1


ஸுலேகா
பிரீப்மென்
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்
பலவித ரகங்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் விற்கப்படும்
Sole Distributors:
PENMEN'S INDUSTRIAL
SERVICES
Kandivli, Bombay (S. D.)


LICHENSA
படை சிரங்கு
(ECZEMA)
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்
எங்கும் கிடைக்கும்
சிலோன் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மகாராஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷால் தெரு, கொழும்பு

தங்க நகரம்

அகிலன்

2. அரண்மனைக்கு வெளியே!

குழந்தைகள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஓடிவருவதை அரசர் கண்டார். அவர் காரணத்தைக் கேட்பதற்கு முன்பே சந்திரன் விவரம் கூறினான். அரசர் தயங்கினார்.

“நம்முடைய அரண்மனைக்குள் இல்லாதது எதுவும் நகரத்தில் கிடையாது. ஏன் போக வேண்டும்?” என்றார் அரசர்.

பிறகு தம் குழந்தைகளின் பிடிவாதத்தைக் கண்டு மன்னர் ராஜ மார்த்தாண்டன் இரண்டு பேருக்கும் அனுமதி அளித்தார். ஆனால் பத்திரமாக அவர்களை அழைத்து வருவதற்காக, அவர்களுடன்கூட ஒரு மெய்க்காப்பாளனையும் அனுப்பினார். இந்த மூன்று பேர்களும் அரண்மனைக் காரில் ஒய்யாரமாக வெளியே புறப்பட்டார்கள். புதிதாக அப்போதுதான் மேல்நாட்டிலிருந்து வாங்கிய மோட்டார்கார் அண்ணனையும் தங்கையையும் சுமந்து கொண்டு ‘ஜம்’ மென்று அரண்மனையை விட்டுக் கிளம்பியது. அரண்மனை வாசலில் நின்ற காவற்காரர்கள் இந்த ராஜ வம்சத்தின் குழந்தைகளுக்கு மரியாதையுடன் கதவுகளைத் திறந்து வழி விட்டார்கள்.

ஊருக்குள் கார் சென்றது. காரின் அடையாளத்தைக் கண்டுகொண்ட நகர மக்கள் ஆனந்தத்தால் கைகளைத் தூக்கி ஆட்டினர். அரண்மனைக் கார் அல்லவா? ராஜா தான் வருகிறார் என்று பலர் நினைத்தார்கள். ஜனங்களில் ஒரு சிலர் பயத்துடன் காரைக் கண்டு ஒதுங்கினார்கள். போலீஸ்காரர்கள் சில இடங்களில் காரைப் பார்த்தவுடன் ஜனங்களை ஓரமாகத் தள்ளிப் போகும்படி விரட்டினார்கள். சந்திரனும் மல்லிகாவும் எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்தனர். கண்கள் சிமிட்டக்கூட அவர்களுக்குத் தோன்றவில்லை. கடைத் தெருக்கள், பெரிய பெரிய வீதிகள், சிறிய வீட்டு வரிசைகள் எல்லாவற்றையும் பார்த்தனர். ஆனால் அரண்மனையைப் போல் அத்தனை பெரியதாக அவர்கள் ஒரு வீட்டைக் கூடப் பார்க்க வில்லை! அந்தத் தோட்டத்தைப் போலவும் வேறு ஒரு தோட்டத்தைப் பார்க்கவில்லை.

“திரும்பிப் போகலாமா துரைராஜ்?” என்று செல்லமாக மெய்க்காப்பாளன் சந்திரனைக் கேட்டான். துரைராஜ் என்றுதான் சந்திரனை எல்லாரும் அரண்மனையில் அழைப்பது வழக்கம்.

“அதற்குள்ளாகவா? வேண்டாம்! ஊர் முழுவதும் நான் மெதுவாகப் பார்க்க வேண்டும். டிரைவர், காரை மெதுவாக விடு” என்றான் சந்திரன். கார் மெதுவாய்ச் சென்றது. ஊரின் எல்லாத் தெருக்கள் வழியாகவும் சென்றது.

சில தெருக்கள் மிக விகாரமாக இருந்தன. வெறும் கூரைக் குடிசைகளாக அந்தத் தெருவில் காணப்பட்டன. சாக்கடைகள் அந்தத் தெருக்களில் சுத்தமாக ஓடவில்லை. வழியெல்லாம் சாக்கடை நீர் வழிந்தது. நாற்றம் பொறுக்க முடியவில்லை. இதையெல்லாம் கவனிக்காமல் அங்கே சின்னஞ்சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அநேக குழந்தைகளுக்குச் சரியான உடுப்புக் கிடையாது. பரட்டைத் தலையும், வற்றிய உடம்பும் சூம்பிய கைகால்களும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் இருந்தன.

“இவர்கள் எல்லாம் யார்?” என்று கேட்டான் சந்திரன்.

“ஏழைக் குழந்தைகள்; குடியானவக் குழந்தைகள்” என்றான் மெய்க்காப்பாளன்.


“ஐயோ, பாவம்!” என்றாள் மல்லிகா.

“நம்முடைய ராஜ்யத்துக் குழந்தைகளா இப்படி இருக்கிறார்கள்? அப்பாவுக்கு இவர்களைப் பற்றித் தெரியுமோ?” என்றான் சந்திரன். “தெரியும்” என்றான் மெய்க்காப்பாளன்.

“தெரிந்தால் ஏன் இவர்களுக்கு அவர் ஒன்றும் வாங்கிக் கொடுக்கவில்லை? எனக்கும் மல்லிகாவுக்கும் மாத்திரம் எல்லாம் செய்கிறாரே?” என்று கேட்டான் சந்திரன்.

மெய்க்காப்பாளன் ‘கம்’மென்று வாயை மூடிக் கொண்டு இருந்து விட்டான். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

காரை ஒரு இடத்தில் நிறுத்தச் சொல்லி இறங்கினான் சந்திரன். மல்லிகாவும் அவனுடன் இறங்கினாள். அவன் நிறுத்தச் சொல்லிய இடம் ஒரு பாழடைந்த சத்திரம். அந்தச் சத்திரத்தில், “மகாராஜாதி ராஜ மார்த்தாண்ட பூபதி அவர்களின் தர்ம சத்திரம்” என்று பெரிய ‘போர்டு’ போட்டிருந்தது. அதைச் சுற்றிலும் மனிதர்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். ஆனால் அங்கு கூடியிருந்த மக்களுக்கும், ஊருக்குள் சந்திரன் பார்த்த மனிதர்களுக்கும் மிகவும் வித்தியாசம் இருந்தது. அங்கு இருந்த மனிதர்கள் மனிதர்களாகவே இல்லை. மிகவும் பரிதாபகரமாக இருந்தார்கள். பழைய பிடாரியம்மன் கோயில்களில் மண்ணால் செய்யப்பட்ட உருவங்களைப் பார்த்திருக்கிறீர்களா? மரத்தடிகளில்



நூற்றுக்கணக்காய் மண் விக்கிரகங்கள் இருப்பதைக் கண்டிருக்கிறீர்களா? கண்ணில்லாத உருவங்கள், காது போன பொம்மைகள், கையொடிந்த மதலைகள், நொண்டியான சாமிகள் இவை இருக்கின்றன அல்லவா? இதைப் போன்ற மனித உருவங்கள் அந்தச் சத்திரத்தில் நூற்றுக்கணக்கில் இருந்தன.

அங்கே கால்போன நொண்டிகள் இருந்தார்கள்; கையில்லா முடவர்கள் இருந்தார்கள்; கண்ணில்லாக் குருடர்களும், வாய் பேசா ஊமைகளும் இருந்தார்கள். இவர்களைத் தவிர இன்னும் பசியால் மெலிந்தவர்களும் நோயால் வாடிய மனிதர்களும் காணப்பட்டார்கள்.

சத்திரத்தில் சோறு போடும் நேரம் வந்தது. ஒருவர் மேல் ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு சோற்றை வாங்கினார்கள். ஆளுக்கு ஒரு பிடிச் சோறு. அதை வாங்குவதற்காக அவர்கள் பட்டபாடு! அடடா! சொல்லி முடியாது.

சத்திரத்தின் வேலைக்காரர்கள் சோறு போட்டுக் கொண்டே அவர்களைக் கண்டபடி திட்டினார்கள்; வைதார்கள்; அடித்தார்கள்; பிடித்துத் தள்ளினார்கள்; ஒரு சிலருக்கு, "இல்லை, போ!" என்று ஒன்றும் போடாமல் விரட்டியடித்தார்கள்.

இதையெல்லாம் கண்ட சந்திரனுக்கும் மல்லிகாவுக்கும் தாங்க முடியாத வருத்தம். சந்திரனுடைய கண்களில் நீர் துளித்தது. மல்லிகாவோ இந்தக் காட்சியைக் கண்டு சகிக்காமல் அழுதாள்.

"நீங்கள் இந்தப் பக்கம் வந்திருக்கக் கூடாது. ராஜாவுக்குத் தெரிந்தால் என்னைக் கோபித்துக் கொள்வார்" என்று மெய்க்காப்பாளன் முணுமுணுத்தான்.


இந்தச் சமயத்தில் காரைநோக்கி ஒருவன் பயங்கரமாக அலறிக் கொண்டே, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஓடிவந்தான். அவனுடைய கண்களில் ஆத்திரம் பொங்கியது. அவன் பார்ப்பதற்கு மனிதனைப் போலவே தோன்றவில்லை. அவனுடைய கந்தலின் கிழிசல்கள் காற்றிலே படபடத்தன. "ஐயா! ஐயா!" என்று அவன் காருக்குப் பக்கத்தில் அலறிக் கொண்டு வருவதைக் கண்டவுடன் டிரைவர் காரைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்டான்.


இதைக் கண்ட பிறகும் அவன் நிற்காமல் காருக்குப் பின்னால் தட்டுத் தடுமாறிக் கொண்டு ஓடி வந்தான்.

"நிறுத்து காரை!" என்று உரக்கக் கத்தினான் சந்திரன்.

காரை நிறுத்தாவிட்டால் சந்திரன் ஓடும் காரிலிருந்து கீழே குதித்து விடுவான் போல் தோன்றியது. டிரைவர் நிறுத்தினான். சந்திரனும் மல்லிகாவும் காரை விட்டு இறங்கினார்கள். அருவருப்பு நிறைந்த அந்த மனித உருவத்தைக் கண்டவுடன் அவர்களுக்கு அருவை ஏற்படவில்லை. இரக்கமே பிறந்தது. அவனும் மனிதன் தானே?

(தொடரும்)





மோட்டார் ரேஸ்


(ஒரு சுவையான விளையாட்டு)


இந்த விளையாட்டுக்கு வேண்டியது பழைய சீட்டுக் கட்டுகள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் விளையாடலாம்.

சீட்டுக் கட்டைக் கலைத்து ஒவ்வொருவருக்கும் நான்கு சீட்டுகள் வரும்படி போட்டு விட்டு மீதியை நடுவில் கவிழ்த்து வைக்க வேண்டும். ஒவ்வொருவரும் கவிழ்த்து வைத்துள்ள சீட்டுக் கட்டிலிருந்து ஒவ்வொரு சீட்டாக நிமிர்த்த வேண்டியது. நிமிர்த்தியசீட்டின் எண்ணிக்கைக்குக் கீழே கொடுத்துள்ள உத்தரவுப்படி சீட்டுகளை அடுத்த ஆட்டக்காரரிடம் வசூலித்தோ அல்லது இழந்தோ ஆட்டத்தைத் தொடரவேண்டும். மைல்கள் முன்னால் என்றால் அடுத்து விளையாட வேண்டியவரிடமிருந்து சீட்டுக்களை வாங்கிக் கொள்ள வேண்டும். மைல்கள் பின்னால் என்று எச்சரிக்கை விடுக்கும் சீட்டாக இருந்தால் சீட்டை நிமிர்த்தியவர் தன்னிடமிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீட்டுக்களை அடுத்த ஆட்டக்காரரிடம் கொடுத்துவிட வேண்டும். எண்ணிக்கை 4-க்குக் கொடுக்கல் வாங்கல் கிடையாது. இப்படியே ஆடி ஒவ்வொருவராக சீட்டிழக்கச் செய்து எல்லாச் சீட்டுக்களையும் யார் ஒருவர் பெற்றவராகிறாரோ, அவரே வெற்றி பெற்றவர்.


குறிப்பு: A. டயரை மாற்று-3 மைல்கள் முன்னால். 2. மேடு—2 மைல் பின்னால். 3. சக்கரத்தை மாற்ற வேண்டும் — நான்கு மைல்கள் பின்னால். 4. எஞ்சின் சூடாகி விட்டது — வண்டி நகராது. 5. நல்ல டிரைவிங்—3 மைல்கள் முன்னால். 6. பெட்ரோல் அடைப்பு — 1 மைல் பின்னால். 7. சரிவான பாதை — 4 மைல்கள் முன்னால். 8. பங்சர் — 4 மைல்கள் பின்னால். 9. விபத்து — 5 மைல்கள் பின்னால். 10. நல்ல ரஸ்தா—2 மைல்கள் முன்னால். J. மோசமான ரஸ்தா—1 மைல் பின்னால். Q. எஞ்சினில் கோளாறு—3 மைல்கள் பின்னால். K. சுகமான சவாரி—5 மைல்கள் முன்னால்.

—கௌசிகன்











தேன்கூடு

ஆர்வி

அத்தியாயம் 13

எண்ண அலைகள்

சொர்ணம்பாளின் உடல் நிலையைப் பார்த்ததுமே மீனாட்சிக்கு ஓரளவு புரிந்து விட்டது. இனி டாக்டர் வந்தாலொழிய எதுவும் நடக்காது என்பதைத் தெரிந்து கொண்டாள்.

அவள் பொன்னியைத் தனியே அழைத்து, "இதோ பார்! கீழே வண்டியில் நம்ப பாபு இருக்கிறான். அவனை வண்டியிலேயே அனுப்பி லேடி டாக்டர் ராஜபூஷணத்தைக் கையோடு அழைத்து வரச் சொல். போ, சீக்கிரம்!" என்றாள்.

பொன்னிக்கும் அதுதான் சரியாகப் பட்டது. அவள் கீழே இறங்கி ஓடினாள். அதற்குள் மீனாட்சிக்கு இன்னொரு நினைவு வந்தது. உஷா இந்த மாதிரியான நேரத்தில் இங்கே இருப்பது சரியல்ல என்று அவளுக்குத் தோன்றியது. அதனால்தான் அவளும் பின்னாலேயே கீழே இறங்கி ஓடி வந்தாள்.

கிட்டத்தட்ட எட்டு வருஷங்களாகப் பொன்னி அந்த வீட்டில் ஒட்டிப் பழகியிருக்கிறாள். ஒவ்வொருவருடைய குணமும் அவளுக்கு நன்றாகத் தெரியும். அவள் அறிந்த வரையில் உஷாவுக்கு மட்டும் சில தனிப் பண்புகள் இருப்பதாகத்தான் அவளுக்குப் பட்டது. அவள் உருவத்தில் மட்டுமல்ல; குணத்திலும் பெற்றோர்களிடமிருந்து வேறுபட்டிருக்கிறாள். பல விஷயங்களில் இது நன்றாகத் தெரிந்தது. குப்பன் கூட உஷாவைத் தப்பிப் பிறந்தவளாகத்தான் எண்ணினான்.

அந்த வேற்றுமை இன்று இன்னும் தெளிவாக விளங்கியது. சொர்ணம்பாளின் அலறலைக் கேட்டு, உஷா வண்டியிலிருந்து இறங்கி வந்து விடுவாளோ என்று பயந்தாள் பொன்னி. ஆனால் முதலில் போகவே மறுத்த உஷா இப்பொழுது உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு இம்மியும் நகரவில்லை. அம்மா அலறுவது சிறிதும் காதில் விழாதவளைப் போல் அவள் ரோசத்தோடு வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். பாபுவுக்குக் கூட இது வியப்பாகத்தான் இருந்தது.

வண்டி புறப்படத் தொடங்கியது; அப்பொழுதும் உஷா யாரையும் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் பொன்னி அந்த அலறல் சத்தத்தைக் கேட்டுத் துணுக்குற்று அங்கேயே நின்று விட்டாள். சோதனையாக இந்தச் சமயம் பார்த்து வீட்டில் ஆண் துணை இல்லாதது அவளுக்கு அச்சத்தை மூட்டியது. கட்டுவனாரை அழைக்கப்போன வண்டி வருகிறதோ என்று பார்க்கிற சாக்கில் அவள் அந்த இடத்திலேயே அசையாது நின்று கொண்டிருந்தாள்.

சற்றைக்கெல்லாம் மாடியிலிருந்து மிஸஸ் மீனாட்சி அவளைக் கூவியழைப்பது



கேட்டது: "பொன்னீ! பொன்னீ! ஓடி வாயேன் சீக்கிரம்!"

பொன்னி தலைதெறிக்க மாடிக்கு விரைந்தோடினாள். அங்கே சொர்ணம்பாளைப் படுக்கையில் காணவில்லை. கட்டிலின் ஒரு காலைப் பிடித்துக் கொண்டு சொர்ணம்பாள் தரையில் விழுந்து கிடந்தாள். அவளும் மீனாட்சியும் சேர்ந்து அவளைக் கட்டிலில் தூக்கிப்போட முயன்றார்கள்; முடியவில்லை. சொர்ணம்பாள் சுய நினைவுடன் தான் இருந்தாள். ஆனால் அவள் விழிகள் என்னவோ மிரள மிரள நோக்கின. பார்வையில் தெளிவே இல்லை. தலை அலங்கோலமாகக் கிடந்தது. ஆடையெல்லாம் தெப்பமாக நனைந்து போயிருந்தன. நெற்றியில் அணிந்திருந்த குங்குமம் விளக்குப் பொட்டுப் போலத் தீற்றியிருந்தது.

பயத்தினால் பொன்னிக்கு அழுகையே வந்து விட்டது. மூக்கணாங்கயிறு போட்ட மாடு திணறுவது போல் சொர்ணம்பாள் மூச்சு விட்டாள். பருத்த வயிற்றுடன் அவள் தரையில் கிடந்த விதத்தைக் கண்டு பொன்னி திகிலடைந்தாள். நடக்கக் கூடாத ஒன்று நடந்துவிட்டதாக எண்ணி அவள் மருண்டாள்.

ஆனால் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்த மீனாட்சி தைரியமாகவே நடந்து கொண்டாள். சிறிதும் நேரத்தை வீணாக்காமல் அவள் கிளப்பிலிருந்த பாரிஸ்டருக்குப் போன் செய்தாள். கைகளைப் பிசைந்துகொண்டு, கண்ணீர் வடிய நின்ற பொன்னியைப் பார்த்து, "நீ போய் வெந்நீர் சுட வை! அம்மா அப்படியே படுத்திருக்கட்டும். இனி நர்ஸிங் ஹோமுக்கு அனுப்புவதற்கில்லை. ஒரு தலையணையை மட்டும் எடுத்துப் போட்டு விட்டுப் போ!" என்றாள்.

முண்டகக்கண்ணி அம்மனை மூன்று முறை வேண்டிக் கொண்டு ஓடினாள் பொன்னி. பாபு டாக்டரையும் ஒரு நர்ஸையும் அழைத்துக் கொண்டு திரும்பி விட்டான். வண்டியில் வந்த நட்டுவனாரைப் பங்களாவில் விட்டு விட்டு, குப்பன் போய் பாரிஸ்டரை அழைத்துக் கொண்டு வந்தான்.

வந்ததுமே, "உஷா எங்கே?" என்றுதான் கேட்டார் பரமசிவம். அவளை ராமசுந்தரத்தின் பங்களாவுக்கு அனுப்பியிருப்பதை அறிந்த பிறகுதான் அவருக்கு நல்ல மூச்சு வந்தது. பேச்சுக்கூடச் சிறிது தெம்போடு இருந்தது. மாடியேறி வந்து சொர்ணம்பாளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே நின்றார் அவர். பிறகு டாக்டர் அவரை அங்கே நிற்க அனுமதிக்கவில்லை. நர்ஸ் மாதவி இதை வெகு நாசூக்காகக் கூறினாள். அவர் திரும்பியபோது அவருடைய காலில் ஏதோ தட்டுப்பட்டு இடறியது. குனிந்து, அதைக் கையில் எடுத்துப்பார்த்தார் அவர். அழகாக வர்ணம் கொடுத்து, சட்டமிட்டு வைத்திருந்த சொர்ணம்பாளின் புகைப்படம்தான் அது. ஆனால் கண்ணாடி சுக்கல் சுக்கலாக, சூர்யகாந்தியைப்போல் வட்டமாக உடைந்து போயிருந்தது. சொர்ணம்பாள் ஒருவரும் இல்லாதபோது அதை அகற்றிவிட எண்ணி எடுத்தபோதுதான் கீழே விழுந்து விட்டாள்; படமும் நொறுங்கிப் போயிற்று. இதை யாருமே கவனிக்கவில்லை. அவள் புரண்டு விழுந்திருக்க வேண்டும் என்று எண்ணித்தான் எல்லாரும் பயந்தார்கள்.

"நம்ம அம்மாளுடைய படம் போலிருக்குதே!" என்றார் நட்டுவனார் சொக்குப் பிள்ளை. உஷாவுக்குப் பாடம் பயிற்றுவிக்க வந்த அவர் சொர்ணம்பாளின் உடல் நிலையைக் கண்டு பயந்து, அந்த இடத்தை விட்டுப் போக மனம் வராமல் உட்கார்ந்து விட்டார். அவரிடம் பாரிஸ்டர் அதிகம் பேசிப் பழகியதில்லை. ஆயினும் அந்த நேரத்துக்கு அவர் அருகில் இருந்தது ஆயிரம் பேர் துணையிருப்பதற்குச் சமமாக இருந்தது. தென்புறமாகவுள்ள மாடி வராந்தாவில் அவர்கள் போய் உட்கார்ந்து கொண்டார்கள். சொக்குப்பிள்ளையின் கேள்விக்கு 'ஆமாம்' என்பதுபோல் அவர் தலையை அசைத்தார்.

"கண்ணாடி தானே நொறுங்கிப் போச்சு? இது போனா இன்னொண்ணு!" என்றார் நட்டுவனார். பாரிஸ்டருக்கு இது அச்சானியமாகப் பட்டுவிடக் கூடாதே என்கிற யோசனையுடன் அவர் மேலும், "ஐயாவுக்குல்லே; இதுக்கெல்லாம் மனசைத் தளர விட்டிடப்படாது. நான் அந்தக் காலத்து மனுஷன். திருஷ்டிப் பரிகாரமா சிதறுகாய் உடைக்கிறோங்களே, அதைப் போலத்தான் இதுவும். எல்லாம் நல்லபடியா ஆயிடுமுங்க!" என்றார்.



அவருடைய சாத்துவிகமான பேச்சைப் பாரிஸ்டர் காதில் வாங்கிக்கொண்டாரோ, என்னவோ! அவர் உடைந்த கண்ணாடியை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார். படத்தின் கண்ணாடி உடைந்து போனதாக அவருக்குப் படவில்லை. உள்ளம் என்ற கண்ணாடியே உடைந்து நொறுங்கிப் போய் விட்டதாகத்தான் அவருக்குப் பட்டது. அரை ரூபாய், ஒரு ரூபாய் பெறுமானமுள்ள கண்ணாடியாக இருந்தால் உடனே வேறு ஒன்று போட்டு விடலாம். ஆனால் இது வெறும் கண்ணாடியாக, உயிரற்ற ஜடப்பொருளாகத் தோன்றவில்லை. விலைமதிப்பற்ற உயிர்ப் பொருளாக அதை அவர் மதித்தார். படத்திலிருந்த சொர்ணம்பாள் இப்பொழுதும்தான் இருக்கிறாள். ஆனால் அன்பு, பாசம், பரிவு ஆகிய உணர்ச்சிகளால் கட்டுப்பட்ட அவருடைய உள்ளமல்லவா இப்பொழுது நொறுங்கி விட்டது! அவருக்கு அப்படித்தான் பட்டது. இனி எதனாலும் இந்தப் பழைய கண்ணாடியைச் சரிப்படுத்த முடியாது என்று அவர் கருதினார்.

சட்டத்துக்குள்ளே இருந்த படத்தில் சொர்ணம்பாள் குழந்தை உஷாவுடன் நின்று கொண்டிருந்தாள். உஷா தவழும் குழந்தையாக இருந்த போது எடுத்த படம் அது. சொர்ணம்பாள் இளமையைக் கடக்கும் எல்லையில்தான் அப்போது இருந்தாள். ஆனால் அவள் முகத்தில் அப்போது நிலவிய பெருமையையும் பூரிப்பையும் இன்றுகூட அவரால் தெளிவாக உணர முடிந்தது. ஒரு தாயின் பெருமிதம் அதிலே தாண்டவமாடியது. நீராத பெரிய[illegible]குறை தீர்ந்துவிட்ட திருப்தி அந்த முகத்தில் குடி கொண்டிருந்தது. ஆனந்தத்தின் எக்களிப்பு அவளுடைய கண்களிலே துள்ளி விளையாடியது. உதட்டோரத்திலே உவகை பொங்கி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. இவ்வளவையும் அவரைவிடத் தெளிவாக உணரக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அவளே, ''நானா இது? நானா இப்படியிருக்கிறேன்?'' என்று கேட்டதும், அதற்கு அவர் புன்முறுவல் செய்து புகழ்ந்ததும் இப்போது அவருடைய நினைவுக்கு வந்தன. எத்தனையோ ஆண்டுகளாக மலர்ச்சியைக் காணாத அந்த முகத்தில் இத்தனை மகிழ்ச்சி எங்கிருந்து வந்தது? பெண்ணின் இதயம் என்ற ரஸம் பாய்ச்சாத கண்ணாடி கிட்டத்தட்ட இந்தக் கண்ணாடியைப் போல் நொறுங்கிச் சிதற இருந்த சமயத்தில்தான் உஷா தோன்றினாள். அப்பொழுது முதல்தான் அவளிடம் இந்த மாறுதல்களெல்லாம் தோன்றின. உஷா இல்லையென்றால் இந்தப் படமும் எங்கே இருந்திருக்கப் போகிறது?

பாரிஸ்டருக்கு அந்தக் கண்ணாடி இப்பொழுது உடைந்ததற்குப் பதிலாக அப்பொழுதே உடைந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம் உண்டாயிற்று. தண்ணீரில் விழுந்த கல்லைப்போல் அந்த எண்ணம் அவர் உள்ளத் தடாகத்தில் ஓர் அலையை எழுப்பியது. அடுக்கடுக்காக எழுந்த அலைகள் பரந்த நீர் நிலையில் வட்டமாக விரிந்து பரவுவதுபோல் கையிலிருந்த கண்ணாடியில் தெறிப்புக் கண்ட புள்ளியிலிருந்து அந்த எண்ண அலைகள் எட்ட எட்ட வட்டமிட்டுக் கொண்டே சென்றன. நேரம் ஓடிக்கொண்டுதானிருந்தது.

அந்தி மயங்கும் அந்த நேரத்தில், வெள்ளை உடை தரித்த மோகினி போல் நர்ஸ் மாதவி மெல்ல வந்து எட்டிப் பார்த்

தான். பாரிஸ்டரின் கவனத்தை இழுப்பதற்காகச் சன்னமாகக் கனைத்துவிட்டு, ''கையிலே வாட்சு இருக்குதோ?'' என்று அவரிடம் கேட்டாள்.

இத்தனைக்கும் அவள் கையிலேயே கடிகாரம் ஒன்று கட்டிக்கொண்டுதான் இருந்தாள். இதைக் கேட்டதும் சொக்குப்பிள்ளை பரபரப்பாக எழுந்து, ''இந்தாலே எதுக்கவே இருக்குதே—என்ன சங்கதி?'' என்று கேட்டார்.

''அதொன்றும் இல்லை; இது சரியாக இருக்குதான்னு நோக்கத்தான் கேட்டதாக்கும். வேறொன்றும் இல்லை!'' என்று விரல்களைச் சுண்டி விட்டு, மலையாளத் தமிழில் கூறிவிட்டுச் சென்றாள் மாதவி.

கட்டுவனார் செல்லத்தை எடுத்து, பாக்கு உரலைச் சரிப்படுத்தத் தொடங்கினார். பாரிஸ்டர் வைத்த கண்ணை எடுக்காமல் கையிலிருந்த படத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவருடைய நினைவும் அதே போன்ற ஒரு நான்மாலை நேரத்தில்தான் போய்க் கவிந்திருந்தது. கடலில் மிதந்த கப்பலைப் போல அவருடைய உள்ளமும் ஆடிக் கொண்டிருந்தது.

''ஆ...வ்...!'' கடுவன் பூனை கத்துவதைப் போல ஓர் அலறல். அதைத் தொடர்ந்து, ''ஸ்...இதென்ன, இப்படிக் கத்தறீங்க! என்ன பயம்?'' என்றது ராஜபூஷணத்தின் குரல்.

குப்பன் குறட்டோரமாக ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருந்தான். பொன்னி வெந்நீரும் சோப்புமாக எடுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினாள். பேஸினும் துணியுமாக எடுத்துக்கொண்டு குளியறைக்குச் சென்றாள். வெளியே வந்தாள்; கீழே ஓடினாள்; மேலே ஏறி வந்து, உள்ளே ஓடினாள். முகத்தில் பயமும் களைப்பும் பின்னிக் கலந்திருந்தன. லேடி ராஜபூஷணமும் மிஸஸ் மீனாட்சியும் பூர்வாங்கமாக எதைப் பற்றியோ தீவிரமாகத் தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள். ஐந்து குழந்தைகளைப் பெற்றவள் பெரியவளா? ஐந்நூறு பிரசவம் பார்த்தவள் பெரியவளா? பாரிஸ்டரின் செவியில் ஒன்றும் விழவில்லை. அவர் உள்ளத்துள்ளே புயல் வீசிக் கொண்டிருந்தது; பெருமழை பொழிந்து கொண்டிருந்தது! அவர் இங்கேயே இல்லை; எங்கேயோ இருந்தார்!

அத்தியாயம் 14

சவலை பிறந்தது

நாகப்பட்டினத்தில்,— மழையும் புயலும் சதி புரிந்த அந்த இரவு எப்படித்தான் கழியப் போகிறதோ என்று 'நீல விலாஸ்' ஹோட்டலே கதிகலங்கிப் போயிருந்தது. இந்த இரவுடன் உலக வாழ்க்கை தீர்ந்துவிடப் போகிறதோ என்று ஒவ்வொருவரும் எண்ணினார்கள். அப்படியிருந்தும் அடித்துப் புடைத்துக் கொண்டு ஏழு மணிக்குள்ளாகவே அகப்பட்டதைச் சாப்பிட்டு விட்டு எல்லாரும் தங்கள் தங்கள் அறையை அடைந்து முடங்கினார்கள்.


நகரத்தைப் போலவே ஹோட்டலும் இருளில் தோய்ந்து கிடந்தது. ஏற்றிய ஹரிக்கேன் விளக்குகள் இருளை இன்னும் மிகைப்படுத்திக் காட்டின. பரமசிவமும் சொர்ணாம்பாளும் அந்த வெளிச்சத்தில் தடுமாறிப் போய், பக்கத்து அறையில் நுழைந்து விட்டார்கள். உள்ளே போன பிறகுதான் அவர்களுக்குத் தங்கள் தவறு தெரிந்தது. அங்கே ஓர் இளம் தம்பதிகள் ஆண்சிட்டும் பேடையும் போல் தங்கியிருப்பதைக் கண்டு, போன வேகத்துடன் வெளியே வந்து தங்கள் அறையை அடைந்தார்கள். அவர்களை இதற்கு முன்பு எங்கேயோ பார்த்திருப்பது போலப் பரமசிவத்துக்கும், சொர்ணாம்பாளுக்கும் பட்டது. ஆனால் எங்கே என்று நின்று யோசித்துப் பார்க்க அவர்களுக்கு அவகாசம் இல்லை.

இதுவரையில் காற்றும் மழையும் அத்தனை கடுமையாக இல்லை என்று தோன்றும்படி உக்கிரமாக வலுத்துவிட்டன. எட்டு மணி அளவில் இன்றுடன் எல்லாம் தீர்ந்து விட்டதாக அவர்கள் முடிவு கட்டி விட்டார்கள்.

அண்டம் அதிர முழக்கியது பேரிடி. வானம் பொத்துக் கொண்டதுபோல் பொழிந்து தள்ளிற்று கடு மழை. காற்று ஊழிப் பெருங்கூத்து விளைத்துக் கொண்டிருந்தது. இயற்கை வெஞ்சினம் கொண்டு கோரச் சிரிப்புச் சிரித்து, பிரளய தாண்டவமாடியது.

திடீரென்று பெருத்த ஆரவாரம் ஒன்று கேட்டது. அந்தக் கட்டடமே பூகம்பத்தால் நடுங்குவது போல் ஆடியது. கல் ஓடுகளும் தகரக் கூரைகளும் காற்றிலே ஜிவ்வு ஜிவ்வெனப் பறக்கத் தொடங்கின. சடசடவென்று மரங்கள் சரியத் தொடங்கின. காதே செவிடுபட வெகு அருகில் ஏதோ இடிந்து விழும் பேரொலி கேட்டது. சொர்ணாம்பாள் பீதியுற்றுப் பாரிஸ்டரைப் பற்றிக் கொண்டு கூவினாள். அவரோ செய்வது புரியாமல் இருளின் ஒரு மூலையையே பார்த்துக் கொண்டிருந்தார். பளிச்சுப் பளிச்சென்று வெளியே மின்னல் வெட்டியது. இடைவெளி வழியே அதன் ஒளி காந்தியது.

கையாலாகாதவனைப்போல் அவர் செயலற்றுக் கிடந்தார். புயல் புரிந்து கொண்டிருந்த சர்வ நாசத்தை அவரால் தெளிவாகப் பார்க்க முடியாவிட்டாலும் ஓரளவு அவரால் ஊகிக்க முடிந்தது. கடல் கொம்மாளமிட்டுக் கொந்தளித்து உறுமியது தெரிந்தது. ஊரையே சாடி ஒரே வாயில் விழுங்கி விடுவதுபோல் பெரும்



முழக்கத்துடன் அது தன் கொடிய அலைக் கரங்களை நீட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டதுபோல்உணர்ந்தார்கள்.

பேய்க் காற்றின் பயங்கர ஊளைக்கு நடுவே மக்களின் ஓலத்தைக் கேட்டு அவர் உடல் வெடவெடவென்று நடுங்கியது. எழுந்து செல்லவும் திராணியற்றுக் கட்டிலில் அமர்ந்தவாறே அவர் கதவிடுக்கு வழியாக வெளியே பார்த்தார். மின்னல் வெளிச்சத்தில் ஒரே வெள்ளக் காடாகத் தெரிந்தது. அவர் கண்களை இறுக மூடிக் கொண்டு விட்டார்.

ஆமாம்; கடல்தான் ஊருக்குள் புகுந்து வந்து கொண்டிருந்தது. பயத்தாலும் குளிராலும் நடுங்கியவாறு அவர், "சொர்ணம்!" என்று கூவியவாறே கட்டிலில் சாய்ந்தார்.

அவ்வளவுதான் அவருக்குத் தெரியும்; அவளுக்கும் அவ்வளவுதான் தெரியும். பயத்திலேயே பாதி அவர்கள் தங்கள் நினைவிழந்து விட்டார்கள். இந்த நிலை எத்தனை நேரம் நீடித்திருந்ததோ, தெரியாது. அவர்கள் இருந்த அறையின் கதவு பெரிதாக இடிபடும் ஓசையைக் கேட்டுத்தான் கணவனும் மனைவியும் சுய நினைவு பெற்று விழித்தார்கள்.

"ஸார், ஸார்!" கதவு இடிப்பதைத் தொடர்ந்து ஒரு குரல் பரிதாபமாய்க் கூவியழைத்தது.

"சொர்ணம்!" என்று உசுப்பினார் பாரிஸ்டர்.

"ம்........"

"கதவை யாரோ இடிக்கிறார்களே!"

"ஐயோ வேண்டாம்: கதவைத் திறக்காதீர்கள்!"

கதவைத் திறக்காமலே இருந்திருக்கலாம். ஆனால் இரும்பு இருதயம் படைத்தவனாக இருந்தால்கூட அந்த அழைப்பைக் கேட்டு அசையாமல் போயிருக்க முடியாது. பாரிஸ்டர் மனம் புழுவாகத் துடித்தது. யந்திரம் போல் எழுந்து கதவின் நாக்கைத் தள்ளினார். ஒரு வண்டிச் சாரலை வாரி முகத்தில் அடித்துக் கொண்டே கதவு திறந்து கொண்டது. ஆணும் பெண்ணுமான தம்பதிகள் காற்றினால் பிடித்துத் தள்ளப்பட்டவர்கள் போல் உள்ளே வந்து விழுந்தார்கள். அந்த இளம் தம்பதிகள்தான் அவர்கள். அந்த அரிவையின் கையிலே முழ நீளத்துக்கு ஒரு துணி மூட்டை இருந்தது. அதை நன்றாகச் சுருட்டி மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டிருந்தான் அவன். சாத்தியமாக இருந்திருந்தால் அதை அவன் தன் இருதயத்தினுள்ளேயே பதுக்கி வைத்துக் கொண்டிருப்பானோ, என்னவோ!

"ஸார்-எங்கள் அறையின் மேல் கூரை காற்றிலே பறந்து விட்டது! சுவர் வெடித்து விட்டது!" என்றான் அந்தக் காளை. இவ்வளவு தொடர்ச்சியாக அவன் அதைக் கூறவில்லை. ஆனால் அவன் குறிப்பிட்டது அதுதான்.

"கதவைச் சாத்துங்களேன்! கண்ணைப் பறித்துவிடும் போல் இருக்கிறது மின்னல்!" என்று கத்தினாள் சொர்ணம். பாரிஸ்டரும் அவனுமாகச் சேர்ந்து முயன்று கதவைத் தாளிட்டார்கள்.

"ஆமாம்; அந்தப் பிளாஸ்க்!" என்று தீனமான குரலில், ஆனால் பதற்றத்தோடு கேட்டாள் அந்தப் பெண்.

இளம் மனைவி குறிப்பிட்ட அந்தப் பிளாஸ்க் இல்லாமல் நடக்காது என்று எண்ணியவனைப் போல அவன் அவருடைய காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சாத குறையாக, "ஸார், ஒரு நிமிஷம்; இதோ ஓடிவந்து விடுகிறேன்!" என்று மூடிய கதவை முக்கிக் கொண்டு திறந்தான்.

"ஐயையோ, நீங்கள் தனியாகப் போக வேண்டாம்; நானும் வருகிறேன்!" என்று பாய்ந்தாள் அந்தப் பெண்.

அவன் தடுக்க, அவள் தடுக்க இருவருக்கும் சிறிதுநேரம் தர்க்கம் நடந்தது. கடைசியில் அவள் தன் மார்போடு அணைத்திருந்த சிறு மூட்டையைப் பாரிஸ்டரிடம் கொடுத்து விட்டுத் தன் கணவனோடு வெளியே தாவிச் சென்றாள். சொர்ணம், "இப்படியே ஏன் உயிர் போகவில்லை? இன்னும் ஏன இந்தச் சித்திரவதை? இன்றுடன் எல்லாமே அழிந்து விட்டால் என்ன?" என்று வாயைவிட்டே முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

பாரிஸ்டர் இதைக் கேட்டு, அவளை அதட்டப் போனார். ஆனால் அவர் குரல் கிளம்புவதற்குள், அண்டமே இடிந்து விழுந்தது போன்ற சந்தடி ஒன்று கேட்டது. மடமட, தடதடவென்று அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி நொறுங்கிச் சரிந்து விழுந்து கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் எழுப்பிய பயங்கரக் கூச்சலைக் கேட்டு அந்தச் சூறாவளிக் காற்று அசுரத்தனமாகச் சிரித்தது.


அந்த இளம் தம்பதிகளை ஏன் இன்னும் காணவில்லை? "கதவைச் சாத்தி வையுங்களேன்!" என்று இதயத்தின் கசப்பையெல்லாம் வெளிக்கொட்டுவதைப் போலக் கூவினாள் சொர்ணம்.


"இதைக் கையில் வைத்துக் கொள்!" என்று மூட்டையை அவளிடம் கொடுத்து விட்டு எழுந்தார் பரமசிவம்.

திடீரென்று சொர்ணம்மாள் இன்னும் பயங்கரமாகக் கூச்சலிட்டாள்; "மூட்டைக்குள் இது என்ன?"

"இது எது?" என்று நெருங்கி வந்தார் பரமசிவம்.

கையில் இருந்த துணி மூட்டை மெல்ல அசையத் தொடங்கியது. பாச்சை கத்துவதுபோல் ஒரு சன்னக் குரல் அதிலிருந்து கேட்டது. பாரிஸ்டர் உயிர் நடுங்க அதை ஒரு கையால் தொட்டுப் பார்த்தார். கையில் ஏதோ வழவழவென்று நெளிந்து புரள்வது தெரியவே அவர் சட்டென்று தமது கையை இழுத்துக் கொண்டார்.





சொர்ணாம்பாள் வாயைத் திறக்கவில்லை. அவளுடைய முணுமுணுப்பு ஒடுங்கி அடங்கிவிட்டது. வெடி மருந்தைக் கையில் வைத்திருப்பது போல் அவள் அந்தத் துணி மூட்டையை விடாமல் மார்புடன் இறுகச் சேர்த்து அணைத்துக் கொண்டிருந்தாள். பயத்தினால் அவள் அதைக் கீழே போடாமல் இருந்ததே ஓர் அதிசயந்தான்!

"குவா குவா—" உள்ளத்தின் ஏக்கக் குரலைப்போல் அந்தத் துணி மூட்டைக் குள்ளிருந்து ஓர் அலையசைவு உண்டாயிற்று. சந்தேகமில்லை; அது ஒரு குழந்தைதான்! சொர்ணம் அதை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"அது என்ன, குழந்தையா?"

"ஆமாம்."

இருவரும் அதற்குப் பிறகு பேசவேயில்லை. இருவருடைய சிந்தனைகளும் வெளியே வீசிய புயலைப்போல் சுற்றிக் கொண்டிருந்தன.

பொழுது விடிவதற்குள் புயல் அடங்கிவிட்டது. அவர்களுடைய சிந்தனையும் தெளிந்தது. பாரிஸ்டர் வெளியே எட்டிப் பார்த்தார். பக்கத்து அறை வாயிலிலே ஒரு பிளாஸ்க் மட்டும் இருப்பது தெரிந்தது. அப்புறம், அந்தக் கோரக் காட்சியைக் கண்டு கொண்டு பார்க்க முடியவில்லை. இரவெல்லாம் நடந்த கொடுமைகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவனைப் போல ஆதவன் கிழக்கே எழுந்து கொண்டிருந்தான். கடல் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தது; பாரிஸ்டர் அது வரையில் தெரிந்த கோரக் காட்சிகளைக் காணச் சகியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டார்.

* * *

இளம் தம்பதிகள் ஒருவரை விட்டு ஒருவர் தனியே பிரிந்திருக்க மனம் இல்லாமல்தான் சேர்ந்து சென்று, இடிபாடுகளிலே அகப்பட்டுக் கொண்டு, அந்தப் பாழ் வெளியினுள்ளே கலந்து சென்றார்களோ? அப்புறம் என்ன வெல்லாமோ நடந்தன. யார் யாரெல்லாமோ இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த இளம் தம்பதிகளின் உடல்களையும் எடுத்துத்தான் போட்டார்கள். ஆனால் அவர்கள் பாரிஸ்டரிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற அந்தச் சிறு துணி மூட்டையைப் பற்றி யாருக்குத் தெரியும்? 'நீல விலாஸ்' ஹோட்டல் மாடியில் உயிர் தப்பியவர்களோ இரண்டு பேர்கள்தான். பாரிஸ்டர் பரமசிவம் ஒன்று; சொர்ணாம்பாள் இரண்டு! இல்லை; மூன்றாவது உயிரும் தப்பிப் பிழைத்திருந்தது. அது தான் அந்தத் துணி மூட்டைக்குள்ளிருந்த பதினைந்து நாள் பெண் குழந்தை. பிளாஸ்கிலிருந்த வெந்நீரில் க்ளூகோஸைக் கலந்து, சொர்ணாம்பாள் அதற்கு உயிர்த் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். அந்தக் குழந்தையின் அதிருஷ்டத்தினால்தான் பெற்றோர்களும் உயிர் தப்பியதாக ஊரெல்லாம் அதிசயமாகப் பேசிக் கொண்டிருந்தது.

சொர்ணாம்பாளுக்கு அதைக் கேட்கும் போதே பெருமையாக இருந்தது. தாய் என்ற இத்தகைய பெரிய பாக்கியத்தைத் தனக்குக் கொடுப்பதற்காகவே அந்தப் புயல் கோர தாண்டவம் புரிந்துவிட்டுச் சென்றதோ?

அபயம் வந்து பார்த்தான். புண்ணிய தீரடப் போனால் கையிலே பலன் என்று சொல்லிவிட்டுப் போனான். சென்னையை விட்டுக் கிளம்பியபோதே கருவுற்றிருந்து, பிள்ளைப் பேற்றை முடித்துக்கொண்டு திரும்பியிருப்பதாகவே அனைவரும் எண்ணினார்கள். அந்தக் குழந்தையின் ஆண்டு நிறைவு மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அது அப்போது எடுத்த படம்தான். அந்தப் படத்தின் கண்ணாடிதான் அவருடைய இதயத்தைப் போல் இன்று நொறுங்கிப் போயிருந்தது.


நர்ஸ் மாதவி, வெளியே ஓடி வந்து மறுபடியும் கட்டுவனிடம் மணி கேட்டாள்.

"ஏழு பதினைந்து!"

அவள் உள்ளே ஓடிச் சென்று மீண்டும் சற்றைக்கெல்லாம் வெளியில் வந்தாள். முகத்திலே மலர்ச்சியைக் காட்டியவாறு, "பெண் குழந்தை!" என்றாள்.

பாரிஸ்டர் பரமசிவத்தின் உள்ளத்தில் நிகழ்ந்த புயல் அடங்கி, மறுபடியும் வீசத் தொடங்கியது போல் இருந்தது. பெண் பிறந்ததா, கவலை பிறந்ததா? (தொடரும்)





COSMICA

- பாலிதீன் - இன்ஸுலேஷன், பாலிவினைல் குளோரைட் பி. வி. ஸி. (P.V.C.) உறையுடன் கூடியது.
- அலுமினியம் கண்டக்டர் B. S. 2791 : 1956க்கும் பாலிதீன் பி. வி. ஸி. (P.V.C.) B. S. 1557 1954க்கும் தயாரிக்கப்பட்டது.
- டைரக்டரேட் ஜெனரல் ஆப் ஸப்ளைஸ் & டிஸ்போஸல்ஸ் கேரளா, ஆந்திரா, சென்னை, மைசூர், ஒரிஸா இராஜ்யங்கள், ப்ராஜெக்ட் அதிகாரிகள், மற்றும் மின்சார ஸ்தாபனங்கள் அங்கீகாரம் பெற்றது.
- விலை குறைவானது • தரம் உயர்ந்தது

ஆலிண்ட் ALIND KER-AL-LITE கேர்-அல்-லைட்

கட்டிட ஒயர்

அலுமினியம் இண்டஸ்ட்ரீஸ் லிட்., குண்டரா (கேரள ராஜ்யம்)

தொழிற்சாலைகள் : குண்டரா (கேரளா) ஹீராகுட் (ஒரிஸ்ஸா)

மானேஜிங் ஏஜண்டுகள் : சேஷசாயி பிரதர்ஸ் (திருவிதாங்கூர்) பிரைவேட் லிமிடெட்

சென்னை ராஜ்யத்திற்கு அங்கீகாரம் பெற்ற டீலர்கள் AL-610


சௌத் மெட்ரஸ் ஏஜன்ஸீஸ் பிரைவேட் லிமிடெட், பவர் ஹவுஸ், தென்னூர், திருச்சிராப்பள்ளி

நரஸு காபி

அருந்தி அதன்

பிரத்யேகமான ருசியை

அனுபவியுங்கள்



நரஸுஸ் மானுபாக்சரிங்
கோ பிரைவேட் லிட்.,
சேலம் & சென்னை

NCZ-21 ATM

தபால் தலை



கூ. பாலசுப்பிரமணியன்

"ஹல்லோ! நீங்களா?"

தேனினுமினிய இந்தக் குரல் அவன் தலையை நிமிர்த்தவே அவன் விழிகள் மகிழ்ச்சியால் விரிந்தன! உள்ளம் துள்ளியது! காரணம் அவனுடன் கல்லூரியில் படிக்கும் மாதங்கிதான் நின்று கொண்டிருந்தாள்.

"நீயா மாதங்கி! உன் தரிசனம் கிடைக்கிறது வரவர ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது!" என்றவன், "ஆமாம்! இந்தக் கொளுத்துகிற வெயிலில் என்ன தலை போகிற வேலை உனக்கு?" என்று பரிவுடன் அவளை விசாரித்தான்.

"தலை போகிற வேலையில்லை, ஸார்! தலை வாங்குகிற வேலை!" என்றாள் குறும்புடன்!

"தலை வாங்கிறதா! ஐயையோ! ஆயிரம் தலை வாங்கிய சிந்தாமணிக்கு அடுத்த வாரிசா நீ?" என்றவன் தனது கழுத்தைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டான்.

'கலகல'வென நகைத்த மாதங்கி, "பயப்படாதீர்கள்! நான் குறிப்பிட்டது தபால் தலையை! தில்லியில் அகில இந்திய 'கண்டைக்காய் வற்றல் ஸ்பெஷலிஸ்டுகள்' மகாநாடு நடைபெறுகிறதல்லவா? அதையொட்டித் தபால் இலாகாவினர் ஒரு 'ஸ்பெஷல்ஸ்டாம்பு' வெளியிடுகிறார்களாம். என்னுடைய 'ஹாபி' 'ஸ்டாம்ப்-கலெக்ஷன்' என்று உங்களுக்குத்தான் தெரியுமே! அதனால் தான்......" என்று கூறி நிறுத்தியபடி ஒரு மோகனப் புன்னகையை நெளிய விட்டு, "உங்கள் உதவி எனக்குத் தேவை!" என்றாள்.

"ஒன்று என்ன, என் இருதய ராணிக்காக ஓராயிரம் வேண்டுமானாலும் செய்ய அடியேன் தயார்!" நாடகபாணியில் பதில் கூறிய சீதாராமனின் உள்ளத்தில் அவள் மேல் தான் கொண்டிருக்கும் காதலை நிரூபிக்கக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது என்ற உறுதியும் எழுந்தது!

"எனக்கு இரண்டே முக்கால் மணிக்கு லேடீஸ் கிளப்பில் ஒரு முக்கியமான வேலை இருக்கு! இப்பவே மணி இரண்டரை ஆகி விட்டது! தயவுசெய்து எனக்காக நீங்கள் அந்த ஸ்பெஷல் ஸ்டாம்பை வாங்கி......" என்று இழுத்து நிறுத்தினாள்.

"பூ! இவ்வளவு தானே! இன்று மாலை ஆறு மணிக்கு 'ஸ்டாம்பு'டன் உன்னைப் 'பார்க்'கில் சந்திக்கிறேன்! சரிதானே?" என்றான் அவன்.

"நன்றி! நான் வருகிறேன்!" என்ற வார்த்தைகளைக் காற்றிலே மிதக்க விட்டு விட்டுச் சென்றாள் அவள்.

சீதாராமன் தபால் நிலையத்தை நோக்கி ஓடினான். அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக ஸ்டாம்ப் கவுண்டரில் அனுமார் வாலைப்போல் நீண்டதொரு 'க்யூ' நின்று கொண்டிருந்தது.

மணி நாலரை!

சீதாராமன் யோசித்தான்!

'க்யூ'வில் முறையாகப் போய் நின்றால் இன்னும் ஒரு மணி நேரம் கழித்துக் கூட 'கவுண்டரை' அடைவது சந்தேகமே! அப்படியானால் மாதங்கிக்குக் கொடுத்த வாக்குறுதி? கூடாது! எப்படியாகிலும் மாதங்கியைத் திருப்திப் படுத்தியே தீர வேண்டும்! அதற்குச் சிறந்த 'ஒரே வழி குறுக்கு வழி'தான்!

கவுண்டருக்குச் சிறிது தூரத்திலேயே 'க்யூ'வில் கொஞ்சம் இடைவெளியிருந்தது! அதற்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு 'வழுக்கைத் தலை' கண்களை மூடியபடி இருந்தார்! மற்றவர்கள் பேச்சிலும் சிரிப்பிலும் மூழ்கியிருந்தனர்.

'குபீ'ரென்று குறுக்கே பாய்ந்தான்.

"யார் அது உள்ளே நுழையறது?" தூங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருந்த 'வழுக்கைத் தலை' தான் அவனது புறக்கடைப் பிரவேசத்தை எதிர்த்து 'முதல் முழக்கம்' செய்தது. அவரைத் தொடர்ந்து "போய்யா வெளியே!" "வாய்யா கடைசியிலே!" என்ற எச்சரிக்கைகளும் உத்தரவுகளும் பிறந்தன!

ஒரு அசட்டு சிரிப்பினால் 'வழுக்கைத் தலை'யைச் சமாதானப்படுத்த முயன்றான்.

அவரா விடுபவர்! "மிஸ்டர்! நியாயம்னா நியாயம் தான்! ஒழுங்காக 'க்யூ'விலே நின்னு வாங்க" என்றபடி அவனை 'க்யூ'விலிருந்து வெளியே அகற்றினார்.

சீதாராமனுக்கு ரத்தம் கொதித்தது! பரிகாசச் சிரிப்பு அலைகளுக்கு இடையே அவன் 'க்யூ'வின் கடைசிக்கு வந்தான்!

அவன் முறை வருவதற்கும் 'கவுண்டர்' கதவு அடைக்கப் படுவதற்கும் சரியாக இருந்தது!

"எந்த முகத்துடன் மாதங்கியைச் சந்திப்பது? அந்த 'வழுக்கைத் தலை' மாத்திரம் குறுக்கிடாமல் இருந்தால் இத்தனை நேரம் எவ்வளவு சந்தோஷத்துடன் மாதங்கி

காதலிக்காக மணிப் பர்சைத் திருடினான் அவன். கடைசியில் மனத்தைத் திருட்டுக் கொடுக்கும்படி யல்லவா நேர்ந்துவிட்டது!

யோடு பேசிக்கொண் டிருக்கலாம்!'' என்று எண்ணிய சீதாராமன் எதிரில் வந்த 'பஸ்'ஸில் தொத்திக் கொண்டான்!

''கிருஷ்ணசாமியா! எங்கேப்பா வந்தே?''

''போஸ்ட் ஆபீசுக்குப் போய் விட்டு வரேன்! நம்ம குழந்தைகளுக்குத் தான் 'ஸ்டாம்ப் கலெக்ஷன்' ஒரு வெறியாச்சே! அதனால்தான் இன்னிக்கு வந்திருக்கிற புது 'ஸ்டாம்பிலே' ஒரு நாலு வாங்கிண்டு போறேன்! இதோ பார் இவைதான்!''

இந்த உரையாடல் சீதாராமனின் சிந்தனையைக் கலைக்கவே நிமிர்ந்தான்.

அவனுக்கு முன் ஸீட்டில் அமர்ந்திருந்த 'வழுக்கைத் தலை' தமது பக்கத்திலிருந்தவரிடம், புதிய 'ஸ்டாம்பு'களை 'பர்ஸி'லிருந்து எடுத்துக் காண்பித்துக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவன் உடல் துடித்தது.

'நான் இருப்பது பஸ்ஸில்' என்ற நினைவுடன் தமது கோபத்தை அடக்கிக் கொண்டான்!

'ஸ்டாம்பு'களை 'பர்ஸி'ல் போட்டு, 'பர்ஸை'த் தமது பக்கத்தில் வைத்துக் கொண்டார் வழுக்கைத் தலை!

'பர்ஸை'க் கண்ட சீதாராமன் மூளையில் ஒரு அபூர்வ யோசனை தோன்றியது! தனது 'பர்ஸை' வெளியே எடுத்தான்! என்ன அதிசய ஒற்றுமை! திறந்தான்! உள்ளே மூன்று ரூபாயும் இரண்டு நயா பைசாக்களும் தான் கிடந்தன! சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆயிரம் பத்து நயா பைசாக்களைக் கொட்டியது போல் சிரித்துக் கொண்டே அந்த 'ஸ்டாப்பில்' ஏறிய இரு கல்லூரி வாலைக் குமரிகள் 'பஸ்ஸி'லிருந்தோர் அனைவரின் கவனத்தையும் கவரவே, அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான் சீதாராமன். பர்ஸ்கள் இடம் மாறின! 'ஹோல்டான்' என்று கத்தியபடி ஓடும் பஸ்ஸிலிருந்து குதிக்க அவனைக் கண்டக்டர் முறைத்துப் பார்த்தார்!

''வழுக்கைத் தலையைப் பழி வாங்கி விட்டோம்'' என்ற திருப்தியுடன் பர்ஸைத் திறந்த அவன் கண்கள் நிலைகுத்தி நின்றன! காரணம் அதனுள்ளே 'ஸ்டாம்பு'டன் இருந்த பதினைந்து நூறு ரூபாய் நோட்டுக்கள்தான்! ''கிருஷ்ணசாமி மிராசுதார், மாயவரம்'' என்ற விலாசச் சீட்டும் உடன் இருந்தது. ஒரு கணம் திகைத்து நின்றான்! மாதங்கியிடம் முதலில் 'ஸ்டாம்பை'க் கொடுத்து விட்டுப் பிறகு 'போலீஸ் ஸ்டேஷனுக்கு'ச் சென்று கீழே கிடந்தது என்று சொல்லிப் பணத்துடன் 'பர்ஸை' ஒப்படைத்து விடலாம் என்ற முடிவுடன் 'பார்க்கை' நோக்கி விரைந்தான்!

அவனுக்குப் பிடித்தமான நீல நிறப்புடவையும் வெள்ளை நிறச் சோளியும் அணிந்து



நின்ற அவள் எழிலுருவம் அவன் மனதை மயக்கியது!

''கிடைத்ததா?'' ஆவலுடன் வினவினாள்.

''உன் விஷயத்தில் தவறுவேனா?'' என்றவன் அவளுடைய மலர்க்கரத்தில் அந்த 'ஸ்டாம்பு'களை வைத்தான்!

''சொல்ல மறந்து விட்டேனே! இன்று அப்பா ஊரிலிருந்து வந்திருக்கிறார்! உங்களைப் பார்க்க வேண்டும் என்றார்!'' என்று சொல்லி அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

''இவர்தான் அப்பா மிஸ்டர் சீதாராமன்! என்னுடன் கல்லூரியில் படிப்பதாகச் சொன்னேனே, அவர்!''

மாதங்கியின் தந்தையைச் சந்திக்க சீதாராமனின் கண்கள் அடுத்த விநாடி நிலைத்து நின்றுவிட்டன! காரணம் எதிரில் நின்றது அந்த 'வழுக்கைத்தலை' தான்!

''ஹி...ஹி...ஹ...ஹ!'' என்ற அபஸ்வர ஒலிகள் அவன் கண்டத்திலிருந்து ஜனித்தன.

''நீ இங்கேயா இருக்கே? எங்கே அந்த பர்ஸ்?'' என்று சீதாராமனைப் பிடித்து உலுக்கினார்.

''மன்னிக்கணும்! இதோ பர்ஸ்! நான் திருடவில்லை....மாதங்கி....ஸ்டாம்பு......!'' என்று ஏதோ உளறினான்.

'பர்ஸை' அவனிடமிருந்து பிடுங்கி ஆவலுடன் திறந்து பார்த்த அவர் விழிகள் மகிழ்ச்சியால் மலர்ந்தன!

''இன்று நீங்கள் செய்த உதவிக்கு எனது நன்றி!'' என்று கனிவுடன் கூறினார்.


மாதங்கி ஒன்றும் புரியாமல் சீதாராமனைப் பார்த்தாள்! அவன் அவரைப் பார்த்தான்.

''விவரமாகச் சொன்னால்தானே புரியும்! பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொஞ்ச தூரம் போனதுமே 'பர்ஸ்' மாறிப் போன சமாசாரம் தெரிந்து விட்டது! 'பர்ஸி'லிருந்த புகைப்படமும் விலாசமும் திருடனைக் காட்டிக் கொடுத்து விட்டன! 'போலீஸில்' 'ரிபோர்ட்' பண்ணலாம் என்று சந்து வழியாக 'டவுன் போலீஸ் ஸ்டேஷனு'க்குச் சென்றேன்! சந்து முனையில் ஒரு ரௌடி பிச்சுவாவைக் காட்டி, 'பர்ஸைத் தருகிறாயா? இல்லே கொன்னுடட்டுமா?' என்று பயமுறுத்தினான்! உனது 'பர்ஸை' அவனிடம் கொடுத்து விட்டு, 'தப்பித்தோம் பிழைத்தோம்'னு ஓடிவந்தேன். நீ மாத்திரம் 'பர்ஸை' மாற்றாமல் இருந்தால் என் பணம் ஆயிரத்து ஐந்நூறும் போயிருக்குமே! நீ செய்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்று எனக்குத் தெரியவில்லை!''

''கவலைப்படாதீர்கள்! நான் சொல்லித் தருகிறேன்!'' என்ற சீதாராமன் குறும்புடன் மாதங்கியைப் பார்த்தான்!

மாதங்கியின் கயல் விழிகள் நிலம் நோக்கின.

''புரிந்தது! மனம் போல் மாங்கல்யம்!'' என்று சொல்லிச் சிரித்தார் கிருஷ்ணசாமி.



103. நேயர்கள் கடிதம் (4)

கடிதம் 18..—2ல இலங்கைச் சகோதரி எழுதியிருக்கிறார்.

இவருக்கு அடிக்கடி ஏற்படும் ஒரு வயிற்று வலியாம். அவ்வப்போது ஏதோ மருந்து சாப்பிடுவது, ஓரளவு குணமாவது, மறுபடியும் ஏற்படுவது - என்று இப்படி ஒரு கண்ணாமூச்சி காட்டும் வயிற்று வலி. கடைசியாக அம்மருந்துகள் எதுவும் பலன் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. டாக்டர்கள் 'இனி ஆபரேஷன்தான் செய்ய வேண்டும். குடலில் புண் இருக்கிறது' என்று தெரிவித்தனர்.

ஆபரேஷன் என்றதும் சகோதரிக்குச் சிறிது கவலை, பயம். அதில் அபிப்பிராயக் குறைவு. இந்நிலையில் என்ன செய்யலாமென்று கேட்டு எழுதியிருந்தார் சகோதரி. பதில் போனதோ இல்லையோ, உடனே தாமே நேரில் சென்னைக்கு வருவதாகத் தெரிவித்து விட்டு இரண்டு நாட்களுக்கெல்லாம் வந்தே விட்டார். பார்க்கப் போனால் விஷயம் மிகவும் சாதாரணமானது. 'பரிணாம சூலை' அவ்வளவுதான். 'ஒரு வாரத்துக்கு இவ்விடத்திலிருந்து காலை மாலை ஒவ்வொரு சிட்டிகையளவு கல்யாணக க்ஷாரத்தைச் சிறிது நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வாருங்கள். குணகுணத்தைத் தெரிந்து கொண்டு ஆவன செய்யலாம்' என்றேன்.

முதல் வேளை மருந்து சாப்பிட்டதிலிருந்தே குணம் காணத் தொடங்கியது. மூன்று நான்கு தினங்களுக்கு அப்புறம் நேரிலே வந்து குணத்தைத் தெரிவித்தார். ஒரு வாரத்துக்குள் எதிர்பார்த்ததைவிட அதிகப்படியாகவே குணம் ஏற்பட்டது. ஆபரேஷன் என்ற எண்ணமே மாறியது. வயிற்றில் வலி இருந்ததாகவே நினைவில்லாத நிலை ஏற்பட்டது.

கோவில்பட்டி நண்பர் 1887-2ல் "நான் காது சம்பந்தமான வைத்தியப் பகுதி கட்டுரையை எதிர்பார்க்கிறேன். தயவுசெய்து கல்கியில் வரும் கட்டுரை மூலமாகவே தெரிவிக்க வேண்டுகிறேன்" என்று எழுதியுள்ளார்.

கர்ணநாதத்தைப் பற்றி எழுதும்படி வேறு பலரும் கேட்டிருப்பதைத் தெரிவித்துள்ளேன். உடனடியாக அவர்கள் செய்து வரவேண்டிய சிகிச்சைகளையும் தெரிவித்து விவரத்தையும் நேயர்கள் கடிதம் என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ளேன். ஆயினும் பல நேயர்கள் இதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பியுள்ளதால் கூடிய விரைவில் தனிக் கட்டுரையும் எழுதி விடுகிறேன்.

கடிதம் 1893-2 என்பது பூனா சகோதரி எழுதியுள்ளது. இச்சகோதரியை நான் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த அவசியமில்லை. 4-1-59ல் வெளியான கல்கியில் கட்டுரை 85ல் பிரசுரித்த கடிதம் 1283-2ல் இச்சகோதரியை நேயர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன். சகோதரி தம் கணவரின் 'ஆஸ்த்மா' விஷயமாக எழுதியிருந்தார். டாக்டர்கள் பத்து வருஷங்கள் பார்த்தாயிற்று. அவர்களுக்குத் தெரிந்த சிகிச்சையெல்லாம் செய்தாயிற்று. அம்மருந்துகளில் பல பயனற்றவை என்ற நிலைமைக்கு வந்தாயிற்று. ஓரளவு பயன் தந்த மருந்தோ கொடிய விஷம். அதைக் கொடுக்கக் கூடிய அளவின் உச்சாணி வரம்புவரை கொடுத்தாகி விட்டது. 'இனி மேல் இதைக் கொடுக்கக்கூடாது. கொடுப்பது ஆபத்து. கொடுக்க மாட்டோம்' என்று டாக்டர்கள் யாவரும் ஒருமுகமாகத் தெரிவித்து விட்டனர். இந்நிலையில் **"இனி என்ன சிகிச்சை செய்வது?"** என்று சகோதரி கேட்டிருந்ததைப் பற்றி நேயர்களுக்குத் தெரிவித்திருந்தேன். சகோதரியின் கேள்விக்கு எழுதியிருந்த பதிலையும் தெரிவித்திருந்தேன். அதே சகோதரிதான் கீழே குறிப்பிட்ட கடிதத்தை இன்று எழுதியிருக்கிறார்

என் கணவரின் ஆஸ்த்மாவுக்கு (1283-2) எழுதிய சிகிச்சை முறைப்படி வீட்டிலேயே தயாரித்த கூஷ்மாண்ட ரஸாயனமும் அச்வகந்தா லேஹியமும் காலைமாலை ஒரு கொட்டைப் பாக்களவு மாதத்துக்கு ஒரு முறை மாற்றிக் கொடுத்து வருகிறோம். தசமூலாரிஷ்டம் [அருகிலுள்ள நிலையத்திலிருந்து வாங்கி] 2 டீஸ்பூன் 2 வேளை சாப்பாட்டுக்குப் பிறகு சிறிது தண்ணீருடனும் சாப்பிடுகிறார். இது தவிர, ஆரம்பத்திலிருந்தே உங்கள் கட்டுரைகளில் படித்த மிளகு, அதிமதுரம், கடுக்காய் இவைகளை இளவறுப்பாக வறுத்த சூர்ணம் $\frac{1}{2}$ டீஸ்பூன் தேனில் குழைத்தும், இஞ்சி, எலுமிச்சை, புதினா, ஆடாதோடை சாறுகளில் ஊற வைத்து உலர்த்தியது $\frac{1}{2}$ டீஸ்பூன் வீதம் 2 வேளையும் தேனில் சாப்பிடுகிறார். இது உங்கள் கடிதத்தில் இல்லாவிட்டாலும் இதைச் சாப்பிட ஆரம்பித்த பின் ஆஸ்த்மாவின் கடுமை குறைந்ததாய்த் தோன்றியதால்

நிறுத்த மனமில்லாமல் சாப்பிட்டு வருகிறார். ஜனவரி முதல் வாரத்திலிருந்து உங்கள் சிகிச்சை முறை ஆரம்பித்து இந்த இரண்டு மாதங்களில் நல்ல குணம் தெரிகிறதென்பதை மிக்க மகிழ்ச்சியுடனும் மனம் நிறைந்த நன்றியுடனும் எழுதுகிறேன். இரவில் மட்டும் ஒன்றிரண்டு முறை சிறிது சிரமம் ஏற்படும்போது......சற்று இருமித் துப்பிய பின் சமனம் ஏற்படுகிறது......மற்றப்படி ஈச்வர கிருபையினாலும், தங்கள் ஆசிகளினாலும் பூரண குணம் ஏற்படுமென்று நம்புகிறேன். சிகிச்சையின் பலாபலன்களைப் பார்த்துக்கொண்டு எழுதலாமென்று இது நாள் வரையில் தாமதித்து எழுதியிருக்கிறேன்......''

இன்னும் என்ன வேண்டும்? நாட்டு வைத்தியக் கட்டுரைகளும் எத்தர மானவை; என்ன பலனைப் பயக்க வல்லவை என்பதற்கு வேறு சான்றுகள் வேணுமா?

கடிதம் 1932-ல் பொள்ளாச்சி சகோதரி எழுதுகிறார்.

இச்சகோதரி ஒரு சங்கித உபாத்தியாயினி ஆனால் அடிக்கடி ஏற்படும் டான்ஸிலைடிஸ் - குரல்கம்மல்-இருமல் மூச்சுத் திணறல் என்றிப்படி ஏற்படும் உபத்திரவத்தால் பாதி நாட்கள் பாட முடியாது; மீச்சம் பாதி நாட்கள் பள்ளிக்கூடத்தில் லீவு. எப்படி உத்தியோகத்தின் போக்கு!

பாட முடியாத பாட்டு வாத்தியார் எதற்கு என்று பலரும் குறை கூற நேரிடலா மல்லவா? இந்த டான்ஸிலைடிஸ்......முதலானவைகளுக்கு என்ன செய்யலாமென கேட்டிருந்தாள். ஏதோ பதில் எழுதியிருந்தேன். அதன்படி சிகிச்சை செய்து நோய் குணமடைந்த பிறகு கீழே குறிப்பிட்ட கடிதத்தை எழுதியிருக்கிறாள்.

''தாங்கள் தெரிவித்தபடி அச்வகந்தா லேஹியமும் ஸாரஸாதி தைலமும் உபயோகித்து வருகிறேன். இப்பொழுது குணம் தெரிகிறது. இனியும் உபயோகித்து வந்தால் பூரண குணம் அடையும் என்றே நம்புகிறேன். இப்பொழுது பாடுவதற்கு முன் போல் சிரமம் இல்லை. இதோடு தாங்கள் எழுதி வரும் நாட்டுவைத்தியக் கட்டுரையை வைத்துக் கொண்டு பிறருக்கும் உபயோகிக்க மருந்துகள் செய்து கொடுத்து வருகிறேன்.''

''ஸ்ரீமதி......இடமிருந்து கொஞ்சம் மருந்தை வாங்கி உபயோகித்தேன். பலன் இருந்தது. ஆகவே அதையே...... என்று இப்படித் தில்லி சகோதரி கடிதம் 1936-ல் எழுதுகிறார்.


நேயர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் இப்படி அவரவரே ஓரளவுக்குத் தத் தமக்கு வேண்டிய மருந்துகளைச் செய்து கொள்வது - உபயோகித்துக் குணம் பெறுவது என்ற நல்ல நிலை ஏற்பட்டு விட்டதுகுறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கடிதம் 1964-ல் பெங்களூர் சகோதரியொருவர் மூட்டைப்பூச்சிகளை ஒழிக்க ஒரு உபாயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறார்.

கடிதம் 1965-ல் கட்மா சகோதரி ''......தினம் குளிப்பதற்குச் 'சோப்' தேய்த்துக் கொள்வது எனக்கு வெறுத்து விட்டது. ஸ்நானத்துக்கு நல்ல பொடி தயாரிக்க என்ன வழி?...'' என்று கேட்டிருக்கிறார்.

பேஷ்! பல்பொடி சொல்லியாயிற்று. ஸ்நானத்துக்குத் தைலஞ் சொல்லியாயிற்று. முடி வளரவும், நரை மாறவும் தைலங்களைத் தெரிவித்தாயிற்று. முகமினுக்குக் கல்லைத் தெரிவித்து ''ஸ்நோ'' என்னும் பொருளைத் தவிர்க்க வழி தெரிவித்தாயிற்று. இனி இந்தச் சகோதரி கேட்டிருப்பது போல் சோப்பையும் தவிர்க்க, ஒரு ஸ்நான சூர்ணம் தெரிவித்து விட்டால், குறிப்பிட்ட வகையில் விரும்பத்தக்கவை யாவும் பூர்த்தியாகும். பார்க்கலாம்!

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇



''அப்பா! இந்த வாரம் உன் ''ராசி''க்கு 'கை விட்டுப் போன பொருள் திரும்பி வரும்'னு போட்டிருக்குன்னு சொன்னயே! அது சரியாய்ப் போச்சு!''

''எப்படிடா?''

''நீ அனுப்பியிருந்த கதை திரும்பி வந்திருக்கு!''



கருமையாய் நின்று, கருமையில் வளர்ந்து கருமையின் முழுமையாய் ஏங்கி மற்றவற்றைப் பார்த்துப் பெருமூச்சு விட்ட வண்ணம் வாழ்ந்தது கரி.

கனலும் நெருப்பாய்க் காய்ந்தபின் சிவந்த மேனி பெற்றதை நினைத்து நினைத்துப் பார்த்தது. செம்மை தன்னுள் பாய்ந்து தன்னையே அணு அணுவாய்ச் சிதைப்பதை அறியாத கரித் துண்டு.

திடீரென்று அதன்மீது தண்ணீர் வந்து பாய்ந்தது.

அதன் வேஷம் கலைந்தது.

'ஐயோ' என்று அலறித் தன் பழைய கறுப்பு உருவத்தை அடைந்தது.

கரி தன் மேனியை மறு முறையும் பார்த்துக் கொண்டது.

கரித் துண்டுக்கு ஒரே ஏக்கம்!

வெள்ளைப் பொருளைக் கண்டது கரி; வெள்ளைச் சிரிப்பு உதிர்க்கும் மலர்களைக் கண்டது.

தன்னைத் தானே அழித்துக் கொண்டால்தான் அந்த வெளுப்பு அதற்கு வரும் என்பது தெரியாமல் ஆசைப்பட்டது கரித்துண்டு.

அதன் ஆசை அதோடு நிற்கவில்லை.

பளபளக்கும் பொருளாய் மினுக்கி மயங்கக் காத்திருக்கும் மனிதர்களைக் கவர ஆசை கொண்டது கரித் துண்டு.

தன் மேனியைப் பார்த்துக் கொண்டது.

கரித்துண்டுக்கு ஒரே ஏக்கம்.

இந்த உடலை மற்றவர்க்குக் காண்பித்து வெட்கக்கேடான வாழ்வு வாழ்வதா என்ற சலிப்பும் எரிச்சலும் அடைந்தது கரித்துண்டு.

உடனே பூமியைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்று அமர்ந்தது.

கருமை மறையவேண்டும் என்று தவம் செய்ய ஆரம்பித்தது.

பொறுமையுடன் தவம் செய்து கொண்டேயிருந்தது.

கோடிக் கணக்கில் ஆண்டுகள் வேகமாகக் கழிந்தன.

'கரி' கண்ணைத் திறந்தது.

தன்னைப் பார்த்துக் கொண்டது.

மேனியெல்லாம் ஒரே ஒளிவெள்ளம். பழைய உருவமே மனத்தில் தோன்றக்கூட இயலாத ஒளி. கருமையைத் தவிர மற்ற வண்ணங்கள். எல்லாம் மாறி மாறித் தோன்றும் மாயஜாலம்.

கரி களிப்புக்கொண்டு கூத்தாடியது.

சில நாட்கள் கழிந்து வெளியே கொண்டு வரப்பட்டது கரி.

அதற்கு ஒரே பெருமை. அதற்காக எள்ளளவும் கவலைப்படாத மனிதர்கள் இன்று அதை வரவேற்றுத் தெய்வமாகப் போற்றுவதைக் கண்டபொழுது தாங்கொணுத ஆச்சரியம் கொண்டது.

'நான் பழைய கரியல்ல' என்று மார் தட்டி நின்றது கரித்துண்டு.

மனிதனும், 'நீ கரியல்ல, வைரம்!' என்று அதன் புகழ் பாடினுன்.

வைரத்துக்கு -- மாஜி கரிக்கு -- மண்டைக் கனம் அதிகரித்தது.

மனிதன் அதை இன்னமும் போற்றினுன். இறைவன் முடியிலே பக்தியோடு வைரக்கல்லாகப் பதித்தான். அளவுக்கு மீறிய பெருமை அகங்காரத்தில் கொண்டுபோய் விட்டது.

வைரம் தன் பழைய உருவை மறந்தது; பழைய அந்தஸ்தை மறந்தது.

அதற்குப் புதிய அந்தஸ்து.

அந்த நிலை வந்தவுடன் அது ஏழைகளிடம் நெருங்குவதே யில்லை. அவர்கள் போட்ட பீடத்திலே அழகாக அமர்ந்திருக்கும் உயர்நிலை வாழ்வு வாழ்பவர்களோடு மட்டும் தோழமை பூண்டது.

அகங்காரம் அதிகம் வளர்ந்தது.

* * *

ஒரு நாள்.

வைரம் கரியைச் சந்தித்தது.

கரி தன் முதல் உருவம் என்று வைரத்துக்குத் தெரியும்; ஆனல் வெளியே காண்பித்துக் கொள்ளவில்லை.

"ஏ, கரியே!"

கரி அப்போது கனன்று நெருப்பாய் இருந்தது; மனிதனுக்கு உணவு அளிக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்தது.

வைரம் சிரித்தது; உறுதியான சிரிப்பு.

ஏழைக்கேற்ற அடக்கத்துடன் சும்மாயிருந்தது கரி.

“ஏ, கரியே! ஏன் நீ இப்படி இருக்கிறாய்?” என்று கேட்டது வைரம்.

“நீ எப்படி இருந்தாய்?”—உள் மனம் கேட்டது.

கரி பதில் சொல்லியது.

“நான் மனிதனுக்குப் பணி புரிவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.”

“உன்னை நீயே அழித்துக் கொள்கின்றாயே!”

“என் அழிவில் உணவு கிடைக்கிறது!”

“ஆனால் உன்னை எல்லோரும் மதிப்பதில்லையே. என்னை மட்டும் உயர்நிலையில் வைத்திருக்கிறார்களே!”

குரலில் கேலி புரண்டு ஓடியது.

கரி தன்னை அழித்துக் கொண்டேதான் பேசியது.

அதற்குத் தியாகம் குறிக்கோள்.

வைரத்துக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது.

கரியை அடிக்கக் கை நீட்டி ஓங்கியது.

“வேண்டாம் என்னைத் தீண்டாதே!” என்று கூறி ஒதுங்கியது கரி.

வைரத்துக்குக் கோபம் இன்னமும் அதிகமாயிற்று.

ஒளிக் கற்றைகள் வெறி ஆர்ப்பாட்டம் செய்தன. “ஐயோ! என்னைத் தீண்டாதே!”

“சீ...கரியே!”

வைரம் அதனை எட்டி உதைத்தது. அடுத்த கணம் வைரத்திலிருந்த சிவப்பு, பச்சை, முதலான எல்லா நிறங்களும் ஒன்றாய்ப் பேதமற்றதாகச் சேர்ந்து நின்று குப்பென்ற பேரொளியை உண்டாக்கியன.

மறுகணம்...

பச்சையும் இல்லை, சிவப்பும் இல்லை, ஒளியும் இல்லை.

வைரம் தன்னை இழந்து சாம்பலாய்க் கரியின் அடியில் தேங்கி நின்றது.

எளிமையின் நெருப்பில், ஆணவமாகிய வைரம் அழிந்து உருவற்று நின்றது.

கரி மெல்லத் தன்னைக் குலைத்துக் கொண்டே மனிதனுக்கு உதவி செய்த மன நிறைவுடன் செத்தது.

தமிழ் கூறும் நல்லுலகம்

சங்கர ஜயந்தீ

நேரூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் ஸ்தாபித்த ஸ்ரீ சங்கர குருகுலத்தில் கடந்த 40 ஆண்டுகளாக நடந்து வருவதுபோலவே, இவ்வாண்டும் ஸ்ரீ சங்கர ஜயந்தி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 8-5-59 லிருந்து 12-5-59 வரை பெரும் உற்சவமாகவே, வேதபாராயணம், உபந்யாசம், சங்கீதக் கச்சேரிகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்து ஸ்ரீ சங்கர ஜயந்தியை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

மேலை மாம்பலம் ஸ்ரீ சங்கர மடத்தில் வைதிக தர்மாபிவர்த்தனி சபையினர், 12-5-59 ஸ்ரீ சங்கர ஜயந்தியை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். தினமும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் பாதுகைக்கு அபிஷேகமும், லட்சார்ச்சனையும், வேதபாராயணம், பிரஸ்தான த்ரய பாஷ்ய பாராயணம் ஆகியவற்றுடன் நடைபெற்றன.

அயன்புரம் உபநிஷத் விஹாரில் இம்மாதம் 8-ந் தேதி தொடங்கி 13-ந் தேதி வரை ஸ்ரீ சங்கர ஜயந்தி கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. தினமும் பூஜை பாராயணத்தோடு ஆன்மீக முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில், பிரசங்கங்களுக்கும், சிறந்த சங்கீதக் கச்சேரிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். 8-ந் தேதி ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாவைத் துவக்கி வைத்தார். டாக்டர் டி. எம். பி. மகாதேவன் எழுதிய 'ஹோமேஜ் டு சங்கரா' என்னும் ஜயந்தி வெளியீட்டு நூலை திரு க. சந்தானம் 12-ந்தேதி யன்று வெளியிட்டுச் சங்கரரின் பெருமையை எடுத்துரைத்தார்.

ஏப்ரல் 29-ம் தேதியன்று கர்நூலில் ஸ்ரீ சங்கரமடத் திறப்பு விழா விமரிசையாக நடந்தேறியது. ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் ஆசியுடனும், ஆஸ்திக ஜனங்களின் ஆதரவுடனும், ஸ்ரீ முத்துஸ்வாமி ஐயரின் சலியா உழைப்பினாலும் மிகச் சிறப்பாக நடந்தது.

ராமநவமி

மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபால் நகரத்தில் உள்ள தென்னிந்திய கலாசார சங்கத்தார் இவ்வருடம் ஸ்ரீராம நவமி உற்சவத்தை அதிவிமரிசையாகக் கொண்டாடினார்கள். மத்தியப் பிரதேச கவர்னர் ஸ்ரீ பாடஸ்கர் உத்ஸவத்தைத் துவக்கி வைத்தார்.

கீர்க்கி ஸ்ரீ ஹரிஹர பக்தஜன சபாவின் ஆதரவில் ஸ்ரீராமநவமி உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 18-4-59-லிருந்து 27-4-59 வரை பால வால்மீகி ஸ்ரீ ராமமூர்த்தி சர்மா ராமாயணப் பிரவசனம் செய்தார்.

வால்டேர் ஆஸ்திக சமாஜ் ஆதரவில் சென்ற ஏப்ரல் மாதம் 17 உ முதல் 26 உ வரை ஸ்ரீராமநவமி உத்ஸவம் கொண்டாடப் பட்டது. ஹரிகதாமணி, பக்திப்ரவசனமணி ஸ்ரீ என். இராமச்சந்திர சர்மா அவர்கள் இராமாயண ஹரிகதை செய்தார்கள்.

கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போன மனிதன் திருந்தி விட்டால் பின்பு அவனை யாருமே கெடுக்க முடிவதில்லை.

"என்ன ஓய்! பேப்பர் பார்த்திரா?"

"என்ன விசேஷம்?"

"அவசரச் சட்டத்தைப் போட்டிருக்கான். வெத்திலைப் பெட்டியை இப்படி நகர்த்தும், பாப்போம்."

"எந்த அவசரச் சட்டம்?"

"விஷயமே தெரியாதா உமக்கு. நாசமாய்ப் போச்சு. பேப்பர் முழுக்கக் கடுகு தாளிச்சுக் கொட்டின மாதிரி தஞ்சாவூர் ஜில்லா பண்ணையாட்கள் சட்டம் பற்றிப் போட்டிருக்கானே! படிச்சுப் பாரும்."

"பண்ணையாட்களைத் தூக்கித் தலையிலே வைச்சுக் கூத்தாடணுங்கிறனா, சர்க்கார்?"

'பண்ணை யாட்களும் மிராசுதார்களும் சுமுகமா நடக்கணும். அவங்க சண்டையிலே உற்பத்தி பாதிக்கக் கூடாது. அதுதான் அவசரச் சட்டத்தின் நோக்கம்."

"இப்ப மட்டும் உறவு சுமுகமில்லையா?"

"நீரும் உம்ம பண்ணையாள் மாரிமுத்துவும் அந்யோந்யமாக இருந்தால் போதுமா? மத்தவங்க சமாசாரம் எப்படி எப்படியோ இருக்கில்லியா?"

"அப்போ சட்டம் அவசியம் தேவைதான் என்று சொல்கிறீரா?"


"ரொம்ப அவசியம். நம்ம மிராசுதார்களும், கொஞ்சம் காலத்தை அனுசரிச்சு நடந்துகொள்ளவேணும்."

'ஊருக்கு இளைச்சவன் மிராசுதார். அதுவும் தஞ்சாவூர் ஜில்லா மிராசுதார்."

"பார்ப்போமே! அவசரச் சட்டத்தைப் பற்றி அதுக்குள்ளே நாமே அவசரப்பட்டு விமர்சிப்பானேன்?"

"சர்க்கார்லே சட்டம் போட்டா அது நிச்சயமா நன்மையாய்த் தானிருக்கும்."

மறுநாள் தினசரிகளில்சென்னை முதன் மந்திரி அவர்களின் தஞ்சை விஜயமும், மிராசுதார் மகாநாட்டில் அவர்கள் பேச்சும்



விவசாயம் பிழைக்கது

தஞ்சை பெரிய கோயில் வாசலில் கடும் வெய்யிலில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசிய பேச்சும் நெருக்கி அடித்துக் கொண்டு வெளியாகி யிருந்தன.

அதிலும் அவர் மிராசுதார்களைப் பார்த்து. ''பண்ணையாட்களை மிராசுதார் வீட்டுக்கு வந்துள்ள மூத்த மாப்பிள்ளை மாதிரியாகக் கருதி அவர்களை நடத்த வேண்டும்'' என்று சொன்னது மிராசுதார்களின் நெஞ்சைத் தொட்டது. பண்ணையாட்கள் அவரைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள்.

எந்த நிமிடத்தில், நெற்களஞ்சியமாகிய தஞ்சை ஜில்லாவில், அதிருப்தி, போட்டி, பொறாமை, தீச் செயல்கள் என்னும் பொறிகள் விழுந்து களஞ்சியமே தீக்கிரையாகிவிடப் போகிறதோ என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தவர்கள் நெருப்புக்குப் பதில் வயிற்றில் பனிக்கட்டியைக் கட்டிக் கொண்டிருப்பது போல் உணர்ந்தார்கள், அவசரச் சட்டத்தைப் பார்த்ததும்.


மிராசுதார் மகாலிங்கய்யர் வீட்டின் முன் கட்டில் செங்கல் சிமெண்ட் தளம் போட்ட கூடத்தில் உட்கார்ந்திருந்தார். தலை முறை தலைமுறையாக அவர்கள் குடும்பம் மிராசுதாராகவே இருந்து வந்தது.

மகாலிங்கய்யர் திருவிடைமருதூரில் வசித்து வந்தார். நல்ல அயனான மூன்று வேலி நிலம். வீரசோழன் ஆற்றுப்பாசனம், நல்ல விளைச்சலை அள்ளிக் கொட்டியது. நிலம் நீச்சு கொடுக்கல் வாங்கல் உண்டு.

ஒரே ஒரு பிள்ளை. பட்டணத்தில் ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தான்.

கிராமத்தில் அவரும் அவர் தர்மபத்தினியும்தான். நிலத்தை விற்று விட்டுத் தன்னுடனே வந்திருக்கும்படி பல தடவைகள் அவன் வேண்டிக் கொண்டும், ''இதோ பார் சாமிநாதா! வீரசோழன் ஸ்நானமும், மகாலிங்கஸ்வாமி தரிசனமும் ஒருநாள் இல்லாவிட்டால் கூட எனக்குப் பித்துப் பிடித்துவிடும். என் கடைசி மூச்சு இந்த மத்யார்ஜுன க்ஷேத்திரத்தில்தான்'' என்பார்.

அவர் குடும்பம் பரம்பரையாய் எப்படி மிராசோ அப்படியேதான் பண்ணையாள் மாரிமுத்துவின் குடும்பமும் பரம்பரை பரம்பரையாய் அவர்களிடம் பண்ணையாட்களாகவே இருந்து வந்தது.



மிராசுதார் பண்ணையாளைத் தம் வீட்டின் ஒரு முக்கிய நபராகக் கருதுகிறார். பண்ணையாளோ தன் வாழ்வு தாழ்வு, சுகதுக்கம் எல்லாம் மிராசுதார் வீட்டு வாசற்படியில் என்று எண்ணினான்.

பயிரில் பூச்சிகள் புகுந்து பாழாக்கி விடுவது போல் விவசாயத்தையே பற்றித் தெரியாதவர்கள் விவசாயத்தைப் பிழைக்க வைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

எதுவாது அறியாத தன் ஆண்டை, பண்ணையார், தன் எஜமான் இவர்கள் க்ஷேமத்தைப் பற்றிய சிந்தனையைத் தவிர வேறு எதையுமே சிந்திக்காத பண்ணையாட்களைச் சிந்திக்கச் சொன்னார்கள், அந்த நடுவில் புகுந்த புண்ணியவான்கள்.

ஆனால் அவர்களைச் சிந்திக்க விடாமல் தங்கள் சிந்தனைகளை அவர்கள் சிந்தனைக்குக் கட்டாயமாக மாற்றினார்கள். அதன் பலன்... தன் பண்ணையாள் தன்னைக் கவிழ்த்து விடுவானோ என்று அவனிடம் நடுங்கியது மிராசுதார் கூட்டம். தன் எஜமான் தன்னை என்ன செய்து விடுவாரோ என்று பயந்தது பண்ணையாள் கூட்டம்.

வயலில் பாடுபட்டு நாள் முழுவதையும் செலவிட்ட பண்ணையாள், சங்கங்களில் அங்கத்தினராகி மிராசுதாரர்களின் அட்டூழியங்களைப் பற்றி விளாசினான். பலதரப்பட்ட பத்திரிகைகளைப் படித்தான். பல கூட்டங்களுக்குப் போனான். வெளியூரிலிருந்து பேச்சாளர்களை கிராமத்தில் இறக்குமதிசெய்தான்.

மிராசுதாரோ கோவிலுக்குப் போவதை விட்டு வக்கீல் வீட்டுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் போகலானார். 'போலீஸ் அவுட் போஸ்ட் தேவை' எனக் கையெழுத்துக்கள் ஏராளமாக வாங்கி ஐ.ஜி.க்கு அனுப்பினார்கள்.

இருவரையும் எதிர்பார்த்து எதிர் பார்த்துப் பெருமூச்சு விட்டன வயல்கள். அவர்கள் உறவு முறிவதைக் கண்டு பயிர்கள் தலைகுனிந்து கொண்டன: சில மேமே சாய்ந்தும் விட்டன.

தஞ்சை ஜில்லா விவசாயத்துக்கு வியாதி வந்து விட்டது. அந்த வியாதி ஜில்லாவையே அழித்துக்கொண்டு தன்னையும் அழித்துக் கொள்ளும் போல் இருந்ததை நாடி பிடித்துப் பார்த்த அரசாங்கம் என்ற நாட்டு வைத்தியர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து வியாதியைக் கட்டுப்படுத்தி அதைக் குணப்படுத்தவும் செய்தது.

அன்று மாரிமுத்து வந்தான்.

சென்ற ஒரு வருடத்துக்கு முன்பு வரையில் மிராசுதாரைத் தெய்வமாக வணங்கும் மாரிமுத்து தான் நேற்றிரவு மிராசுதாரிடம் வந்தான். தலைமுறை தலைமுறையாகக் கூனிக் குறுகி நடந்தவன் மாரைப் பார்த்துக் கொண்டு நடந்து வந்தான்.

வெள்ளிக்கிழமை.

சாயங்காலம் அம்பிகை படத்தின் முன்னால் விளக்கேற்றி வைத்து விட்டு நமஸ்காரம் பண்ணினாள் மகாலிங்கத்தின் மனைவி சரஸ்வதியம்மாள். சியாமளா தண்டகம் ஸ்தோத்திரம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

வாசலில் ஏதோ பெரிய அளவில் பேச்சுக் குரல் கேட்டது. எட்டிப் பார்த்தாள்.

''உங்க வீட்டு அம்மா உடம்பிலே மின்னுகிற நகை நட்டெல்லாம் யாராலே? நான் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து மணி மணியாக நெல்லைக் கொண்டு வந்து கொட்டினேன் உங்க காலடியில். நல்லா நிழல்லே குந்திக்கிட்டு அம்மாவுக்கு நகையா பண்ணிப் போடறீங்க.''

அவன் முகத்தைக்கூட இவ்வளவு காலம் நிமிர்ந்து பாராதவன். இன்று என்ன கேட்கிறான்?

மாரிமுத்து வெறி பிடித்தவன்போல் பேசினான். மிராசுதார் வாய் திறக்கவே இல்லை. அவன் போய் விட்டான். அவர் உள்ளே வந்தார். அவள் கேட்டாள் :

''ஏன் கத்தறான் நம்ம மாரிமுத்து?'' மாரிமுத்து என்று சொல்லவில்லை அவள். நம்ம மாரிமுத்து என்றாள்.

''அவனைக் கத்தல்லே சரஸ்வதி! அவன் உடம்பிலே வேறு ஆள் புகுந்து அவன் வாய் வழியா அக்னியைக் கக்கினான். விவசாயத்தைக் காப்பாற்றப் போறானாம்.''

''நீங்க என்ன செய்தேளாம் அவனை?''

''நான் ஒண்ணுமே செய்ய வேண்டாம் அவனை. நான் நிலம் வைச்சிருக்கிறது அவன் கண்ணை உறுத்துகிறது. அந்தக் கண்ணெரிச்சல் வாய் நெருப்பைக் கொட்டுகிறது. அவனுக்கே தெரியும் அவனுக்கு நான் கெடுதல் எதுவும் செய்யல்லேன்னு.''

''அவன் எது வேணும்னாலும் சொல்லட்டும். நீங்க அவனைக் கெடுத்திடாதீங்க.''

''நானா, சரஸ்வதி! அவனைப் பிள்ளை மாதிரி வளர்த்தேன். அவனுக்குக் கலியாணம் செய்து வைத்தேன். அவன் போட்டது பொன்னாக விளைந்தது. மனைக்கட்டில் அவன் குடியிருந்தாலும் நம் வீட்டு வாசல்லேயே பழியாய்க் கிடந்தான். அவனைப் பற்றித் தவறுதலா நினைக்கக்கூட மனசு கஷ்டப்படறது. அவனைப் போல் இன்னும் எவ்வளவு பண்ணையாட்கள் மனசு மாறிட்டது தெரியுமா? மனசிலே பாசி பிடித்து ஆளையே விழுங்கி விடுகிறது.''

பண்ணையாள் சட்டம் வந்து மூன்று வருடங்களாகி விட்டன.

அது எங்கே நல்ல பலனை அளித்துவிடப் போகிறதோ என்று சிலர் கிராமத்தில் விஷமப் பிரசாரம் செய்து பண்ணையாட்கள் மனத்தை விஷமாக்கி விட்டார்கள்

மகாலிங்கம் வீட்டுக்கு முன்போல் மாரிமுத்து வருவதில்லை.


''மிராசுதாரைக் காலைக் கையை ஒடிச்சால் தான் நியாயம் பிறக்கும்'' என்று நியாயத்தை நிலைநாட்ட முயன்றான் மாரிமுத்து. நியாயத்துக்குத் தடையாக இருப்பது மிராசுதாருடைய கால்தான் என்று எண்ணினானோ என்னவோ?

அவன் ஏன் அவரிடம் அவ்வளவு துவேஷம் பாராட்ட வேண்டும்?

ஒரு சீர்திருத்தவாதி மாரிமுத்துவிடம் ''நீ வயல்லே களத்துமேட்டிலே இரவு முழுதும் காவல் பார்க்க விழித்துக் கொண்டிருக்கிறாய். உன்னைப் பாம்பு தீண்டி விட்டால் உன் குடும்பம் அதோகதி. ஆனால் உன் எஜமான் பஞ்சு மெத்தையிலே சொகுசாகத் தூங்குகிறார்'' என்றான்.

இது போதாதா?

உங்கள் துணிகளில் அவைகள் வளருகின்றனவா ?



அநேகமாக அப்படித்தான் ! வழக்கமாக இரவுகளிலே நடமாடும் கரப்பான் பூச்சிகளால் உங்கள் துணிகளும், புஸ்தகங்களும் சேதமடைகின்றன. சில்குகளிலும், கம்பளித் துணிகளிலும், மற்றுமுள்ள வீட்டுச் சாமான்களிலும் அவைகள் செழிப்புடன் வளருகின்றன. அழுக்குகளை புசித்து வளரும் கரப்பான் பூச்சிகளால் நோய்கள் பரவப்படுகின்றன. நோய்களை கொண்டு வருவதற்கும், மேலும் உங்கள் வீட்டுச் சாமான்களுக்கு சேதமேற்படுத்துவதற்கும் முன்னால் அவைகளைக் கொன்று விடுங்கள்

டுகோன்
பெய்ட்டினால்
இப்பூச்சிகளைக்
கொன்று விடுங்கள்!



BAYER



கரப்பான் பூச்சிகளையும், ஈக்களையும், மற்றுமுள்ள பூச்சிகளையும் முதலில் ஆகர்ஷித்து, பிற்பாடு கொல்லும் ஒரு தனிப்பட்ட சேர்மானப் பொருள் டுகோன் பெய்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. டுகோன் பெய்ட் மிகச் சிக்கனமானது. பூச்சிகள் கூடுமிடங்களில் டுகோன் பெய்ட்டை கொஞ்சமாக உபயோகித்தால் போதும்... டுகோன் பெய்ட் அபாயமற்றது.

TB 1

எளிதில் உபயோகிக்கக் கூடியது	தூவுவதும் சுலபம்	பயனளிக்கிறது
 ஈரமான ஒரு துண்டு கடுதாசியில் டுகோன் பெய்ட்டைத் தூவுங்கள்.	 அக்கடுதாசியை பூச்சிகள் கூடுமிடங்களில் வையுங்கள்.	 பூச்சிகள் டுகோன் பெய்ட்டைச் சாப்பிட்டு, சில நிமிடங்களில் இறந்துபோய் விடுகின்றன.

டுகோன் பெய்ட் பரிசீலனை செய்யப்பட்ட ஒரு பேயர் தயாரிப்பு—
சிக்கா பிரைவேட் லிமிடெட்டுக்காக தயாரிக்கப்பட்டது
விநியோகஸ்தர்கள்: ஜப்ரீ மேனர்ஸ் அன்டு கம். பிரைவேட் லிட்., பம்பாய்

பழைய நாட்களை எண்ணிப் பார்த்தார் மகாலிங்கம். முன்பெல்லாம் இப்படியா இருந்தது?

மாரிமுத்து அவர் வீட்டே கதி எனக் கிடப்பான். அவனுக்கு அவர் பண்ணையாள் சுதந்திரமும் கொடுத்து நாறு குழி நிலம் பயிர் செய்து அவனே அனுபவிக்கக் கொடுத்திருந்தார். அவன் மனைவி தேவானை அவர் வீட்டில் நடவாள் வேலை செய்வாள். அவளுக்கும் நடவாள் சுதந்திரம் கொடுத்து அறுவடை ஆனதும் களத்துக்கு ஒரு மரக்கால் நெல் கொடுப்பார் மிராசுதார். சாகுபடி இல்லாத காலங்களில் மாரிமுத்து வீட்டுக் கொல்லையைக் கொத்துவான். வீடு வாசல் ஒட்டடை அடித்துச் சுண்ணாம்பு அடிப்பான்.

அவன் வயலைப் பொன் கொழிக்கும் பூமியாக்கினான்.

அவன் மிராசுதாரின் இரட்டைமாடு பூட்டிய வண்டியை 'ஜாம்ஜாம்' என்று திருவிடைமருதூரிலிருந்து கும்பகோணம், ஆடுதுறைக்கு ஓட்டிப் போகும் அழகே அலாதி.

மிராசுதாரை ஒருவன் பல்லிடுக்கால் சொல்ல அவன் மனம் பொறுக்காது.

* * *

அப்படிப்பட்டவன் தான் இப்போது நன்றி விசுவாசமில்லாதவனாகி அவரையே எதிர்க்கிறான். அவனை விலக்கி விடுவதை அவர் விரும்பவில்லை.

தஞ்சை மாவட்டத்திலே இனி நிலம் வைத்திருந்தால் வீண் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும் என்று கண்டு நிலத்தையே விற்றுப் பணமாக்கிக் கொண்டு பட்டணத்துக்குப் போய் விட்டார் அவர். ஊரைக் காலி செய்து கொண்டு புறப்படும் போது மாரிமுத்துவுக்குச் சொல்லி யனுப்பினார்.

அவன் வரவில்லை. அதற்கு மாறாக, "என்னைக் கண்டு பயப்பட்டுக்கிட்டு நிலத்தையே விட்டுவிட்டு ஓடுகிறார்" என்றான்.

அவன் சகபாடிகள் "மாரிமுத்துவுக்கு ஜே! மிராசுதார் மகாலிங்கம் அடியோடு ஒழிக" என்று கோஷமிட்டார்கள்.

அவனைப் பார்த்து அவனிடம் சொல்லிக் கொண்டு வரவில்லையே என அவர் மனம் பட்டபாடு சொல்லி முடியாது

பட்டணத்தில் அவர் தொழில் செய்ய ஆரம்பித்தார். நகரத்தின் முக்கிய மனிதருள் ஒருவராகிவிட்டார். கோர்ட் ஜூரர்களில் அவர் ஒருவர், வர்த்தக சங்கத்தில் அங்கத்தினர். சிறைப் பார்வையாளர்களில் ஒருவர்.

நான்கு வருடங்கள் சென்றன.

அன்று நடக்கவிருக்கும் ஒரு கொலை வழக்குக்கு ஜூரராக வரும்படி சென்னையிலே இருந்த ஜூரர்களில் ஒருவரான மகாலிங்கத்துக்குச் சம்மன் வந்தது.

அவர் கோர்ட்டுக்கு வந்தார்.

ஏழு பேர்கள் கொண்ட ஜூரர் குழுவில் மற்ற ஜூரர்களெல்லாம் மகாலிங்கத்தையே போர்மனாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

குற்றவாளிக் கூண்டில் கைதியைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்

பார்த்தார் மகாலிங்கம்.

யாரது? மாரிமுத்துவா? கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டார்.

அடுத்த நிமிடமே எழுந்து நின்றார்.

அதே சமயம் மாரிமுத்துவும் அவரைப் பார்த்து விட்டான்.

"அட பாவி, இவரா என் வழக்கில் ஜூரர்? என்பேரில் உள்ள பழைய விரோதம் எல்லாவற்றுக்கும் இவர் என்னைப் பழி வாங்கப் பார்ப்பாரே. கோர்ட்டாரிடம் சொல்லி இவரை நீக்கிவிடச் சொல்ல வேண்டும்" என்று நினைவிப்பதற்குள் மகாலிங்கமே, "கோர்ட்டாருக்கு ஒரு விண்ணப்பம். கைதி என் பண்ணையாள். அவன் பேரில் உள்ள வழக்கில் நான் ஜூரராக இருப்பது நல்லதல்ல. விருப்பு வெறுப்பின்றி நான் என் கடமையைச் செய்ய முடியாதோ என்று அஞ்சுகிறேன். என்னை விலக்கிவிட வேண்டும்" என்றார்.

கோர்ட்டார் அவரை மெச்சி விலக்கி விட்டு வேறு ஜூரருக்கு சம்மன் அனுப்பச் சொல்லி வழக்கை மறுநாளைக்கு ஒத்தி வைத்தார்கள். கைதியை லாரியில் ஏற்றிச் சிறைச்சாலைக்குக் கொண்டு போனார்கள்.

மறுநாள் வழக்கு நடந்தபோது சர்க்காரால் மாரிமுத்துவுக்கு வைத்துக் கொடுக்கப்பட்ட வக்கீலுக்குப் பதில் ஒரு பிரபல வக்கீல் அவனுக்கு ஆஜரானார். அவர் ஏன் ஆஜரானார், 'யார் தனக்காக அவரை வைத்தது?' என்று அவனுக்குத் தெரியவில்லை.

மூன்று நாட்கள் வழக்கு நடந்தது. வக்கீலின் அபாரத் திறமையினால் குறைந்த தண்டனையுடன் தப்பிவிட்டான். மாரிமுத்து வக்கீலிடம் ஓடினான். "ஐயா என்பேரில் இவ்வளவு கருணை வைத்து எனக்காக ஆஜரானீர்கள். நீங்கள் யாரோ, எனக்குத் தெரியாது. என் பேரில் இரக்கப்பட்டுத் தாங்களாகவே இனமாகத் தானே ஆஜரானீர்கள்."

"நான் இனமாக ஆஜராகவில்லை. உனக்காக ஆஜராகும்படி ஒருவர் எனக்கு பீஸ் கொடுத்தார், வந்தேன்" என்றார் வக்கீல்.

"யாருங்க அந்தப் புண்ணியவான் என் பேரிலே அவ்வளவு இரக்கம் காட்டியது? மில்லிலே எனக்கும் இன்னொரு தொழிலாளிக்கும் சண்டை. அவனைப் பிடிச்சுத் தள்ளினேன், அவன் மண்டை கல்லில் மோதி அவன் செத்தான். என்னைத் தூக்குமேடைக்கு அனுப்பாமல் காப்பாற்றியபுண்ணியவான் யாரோ?"

"அதோ பார் அந்தப் புண்ணியவான் தான்" என்று காட்டினார் வக்கீல்.

மகாலிங்கம் நின்று கொண்டிருந்தார்.

"மகா பாவியைத் தூக்குமேடைக்கு அனுப்பாமல் மீட்டீர்கள் சிறைவாசத்துடன் தப்பினேன்" என்று அலறினான்.

மாரிமுத்துவை அவர் தூக்கினார்.

அவர் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

"மாரிமுத்து! நீ என்ன செய்து விட்டாய்? உன்பேரில் எனக்குக் கோபமே இல்லை. நீ என்ன செய்ய முடியும்? பரம்பரை பரம்பரையாக எங்கள் குடும்பத்துக்கு உழைத்து வந்த உங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு ஆபத்து வந்து விட்டால் அதை நான் உடனே நீக்கா விட்டால் மனிதனே இல்லை. என் கடமையைச் செய்தேன்" என்றார்.

மாரிமுத்து பச்சைக் குழந்தையைப் போல் உடல் குலுங்க அழுதான். அந்த நிலையில் அழுகை ஒன்றைத்தவிர அவன் மன அழுக்கைப் போக்கக் கூடியது வேறு ஒன்றுமில்லை.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


எண்ணிலாத கேசத் தைலங்கள் இருப்பினும் எளிதாக உங்கள் கேசத்திற்குக் கருமையூட்டுவது "லோமா" ஒன்றே
என்கிறார் கண்ணியமான விற்பனையாளர்
லோமா
இது சாயச் சரக்கல்ல; கேசக் கருமைக்கும் கேச அலங்காரத்திற்கும் உகந்த உன்னதமான அழகு சாதனம். தரத்திலுயர்ந்த கேசத் தைலங்களில் இருக்க வேண்டிய விசேஷப் பொருள்கள் லோமாவிலும் அடங்கியுள்ளன.
ஏகபோக ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அகமதாபாத் 1.
ஏஜெண்டுகள்
வி. நரோத்தம் அண்ட் கோ., பம்பாய்-2.
TAM.MPG
சென்னை ஏஜண்டுகள் : ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் : சிருல் கதீர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon